ஆராதனை

Dr.V. எசேக்கியா பிரான்சிஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆராதனை

ஆராதனை

ஆசிரியர்

Dr.V. எசேக்கியா பிரான்சிஸ்

வெளியிடுபவர்

பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்

எண். 81, 4வது குறுக்கத் தெரு, செந்தில் நகர்,
கொளத்தூர், சென்னை – 600 099.
போன் 044–2650 1290, 2650 1390
E-mail: info@ezekiahfrancis.org

Copy right © Berachah Prophetic Ministries, Chennai.

முதல் பதிப்பு – அக்டோபர் 1991
இரண்டாம் பதிப்பு – மே 1993
மூன்றாம் பதிப்பு – டிசம்பர் 1994
நான்காம் பதிப்பு – டிசம்பர் 1998
ஐந்தாம் பதிப்பு – நவம்பர் 2003
ஆறாம் பதிப்பு – மே 2010
ஏழாம் பதிப்பு – ஜனவரி 2014

Printed at
KALOS OFFSET DIVISION
No. 9A, Jeevan Nagar, 3rd Street,
Adambakkam, Chennai - 88. India
Ph: +91- 94444 00461
e-mail: kalosoffset1@yahoo.com

பொருளடக்கம்

	முன்னுரை	7
	மதிப்புரை	9
1.	வேதாகமம் ஒரு துதியாகமம்	13
2.	ஆராதனைக்கு அர்த்தங்கள் ஆயிரம்	24
3.	தொழுகையா? தொண்டா?	37
4.	ஆராதனை வீரர் இயேசு	51
5.	துதிகளின் நடுவில் தேவ சமுகம்	56
6.	எந்த காலத்திலும் எந்த நேரத்திலும்	63
7.	ஆராதனை ஒரு போராயுதம்	70
8.	ஆராதனையின் எதிரிகள்	81
9.	மூல பாஷையில் துதியும் தொழுகையும்	95
10.	ஆராதனை சிகரத்தை அடைவது எப்படி?	107

முன்னுரை

ஆராதனை என்னும் புத்தகம் வெளியிடுவதைக் குறித்து என் இருதயம் நன்றியால் நிறைந்திருக்கிறது. அநேக ஆண்டுகளாக ஆராதனையைக் குறித்து ஒரு புத்தகத்தை எழுதுங்கள் என்று சொல்லி பல தேவதாசர்களும், பல நண்பர்களும் என்னைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஆனால் இதுவரையிலும் எழுதமுடியாமல் தடைபட்டு இருந்தது. இப்பொழுது கர்த்தருடைய வல்லமையுள்ள கரத்தினால் இந்த புத்தகம் உங்கள் கையில் கிடைத்திருக்கிறது.

ஆராதனை இன்றைய திருச்சபைக்கு கர்த்தர் மறுபடியும் கிருபையாகத் தருகிற ஒரு மாபெரிய ஆயுதம். அந்தகார ஆவிகள் தேசங்களில் சூழ்ந்திருக்கிற இந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் தமது மணவாட்டி சபையின் கையில் கொடுக்கிற ஒப்பற்ற ஆயுதம் ஆராதனை.

இந்த ஆராதனை என்னும் புத்தகத்தை எழுதுவதற்கு மிகுந்த சிரமப்படவேண்டியிருந்தது. காரணம் வேதத்தின் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரைக்கும் ஆராதனையைக் குறித்து ஆயிரக்கணக்கான வசனங்கள் மின்னித் தெறிக்கின்றன. அவைகளில் எதைச் சொல்வது எதைச் சொல்லாமல் விடுவது என்பதுதான் எனக்கிருந்த குழப்பம்.

ஆனாலும் ஆராதனை என்னும் ஆழ் கடலில் மூழ்கி, முடிந்த அளவு சில நன்முத்துக்களை மட்டும் வெளிக்கொணர்ந்து உங்கள் கருத்திற்கும் கவனத்திற்கும் இனிய விருந்தாக வைத்துள்ளேன். இது ஆராதனையைக் குறித்த முழுச் சத்தியங்களையும் சித்தரிக்கும் புத்தகம் அல்ல. அப்படி எழுத முற்பட்டால் பல நூறு பக்கங்கள் தேவைப்படும். இப்புத்தகத்தை ஆராதனையின் அரிச்சுவடிப் புத்தகம் என்றால் மிகையாகாது. ஆனால் இதை அஸ்திபாரமாக வைத்து நீங்களே ஆராய்ந்து, ஆராதனையின் ஆழத்தையும் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் அனுபவிக்க வேண்டு மென்பதே என் ஆசை. கர்த்தருக்குச சித்தமானால் தொடர்ந்து ஆராதனையின் பல அம்சங்கள் குறித்து புத்தகமாக எழுதிக்கொண்டிருக்க விரும்புகிறேன். உங்கள் இடையறாத ஜெபம் அதற்குத் தேவை.

இந்தப் புத்தகம் திறந்த இருதயத்தோடு வாசிக்கும் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் நிச்சயமாக மாற்றி, ஆராதனையின் ஆவியை அபரிமிதமாக அவிழ்த்துவிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இப்புத்தகம் வெளியிட அரும்பாடுபட்டு உழைத்த என் பெற்றோர், பாஸ்டர் தாமஸ், சகோதரன் ரமேஷ் பாண்டியன், சாமுவேல் *J.* ராஜ் அனைவரையும் மறவாமல் ஜெபத்தில் தாங்குங்கள். இந்தப் புத்தகத்தை எதிர்பார்ப்போடு வாசியுங்கள். ஏற்ற பலனைக் **காண்பீர்கள்!** பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்தை உங்கள் உள்ளத்தில் மிகத் தெளிவாகக் **கேட்பீர்கள்!** ஆராதனையின் மாண்பினை உங்கள் வாழ்க்கையில் அளவில்லாமல் **அனுபவிப்பீர்கள்!**

கர்த்தர் உங்களை இந்த ஆராதனைப் புத்தகத்தின் மூலம் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,

சென்னை,
10.10.91.

V. **எசேக்கியா பிரான்சிஸ்.**

மதிப்புரை

எனதருமை சகோதரனும், தேவனுடைய சபையில் தீர்க்கதரிசியின் அழைப்போடு நம்முடைய தேசத்திலும், வெளி நாடுகளிலும் தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்டு வருகிறவருமான சகோதரர் **எசேக்கியா பிரான்சிஸ்** அவர்கள் எழுதியுள்ள **ஆராதனை** (Worship) என்ற இப் புத்தகத்திற்கு சிறப்புரை எழுதக் கிடைத்த சிலாக்கியத்திற்காக தேவனைத் துதிக்கிறேன்.

தேவன் தம்முடைய சரீரமாகிய சபையில் ஆதிநிலை ஏகும்படி இக்கடைசி நாட்களில் கிரியை செய்து வருகிறார். இக்காலம், சபை ஆதிநிலை அடையும் காலம். (Time of Restoration) ஆதித் திருச்சபையில் தேவமகிமை, தேவவல்லமை, தேவ ஆவியானவரின் வரங்கள் அமோகமாக வெளிப்படக் காரணம் ஆதிசபை, ஆராதனை செய்கிற சபையாக இருந்ததினாலேயே. இந் நாட்களில் சபையை கிறிஸ்துவின் வருகைக்கு முன்பாக ஆதிநிலை அடையச் செய்ய கடைசிக்காலச் சத்தியங்களை (End - Time Truths) பிரசங்கிக்க உலகமெங்கும் தேவன் ஐந்துவிதமான ஊழியர்களை எழுப்பி வருகிறார். அப்படி தேவனால் பிரத்தியேகமாக தீர்க்கதரிசன ஊழிய அபிஷேகத்தோடு இந்தியாவில் (தமிழ் நாட்டில்) எழுப்பப் பட்டவர்தான் இப்புத்தக ஆசிரியர் **எசேக்கியா பிரான்சிஸ்**.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுகள் கர்த்தரோடு வாழ்ந்து பழகி, கர்த்தரைத் துதித்து ஆராதித்து, கர்த்தரை உலகின் பல பகுதிகளில் சேவித்து, கண்டறிந்து அனுபவித்த, சத்தியங்களை முழு நிச்சயத்தோடு, வேதவசன ஆதாரத்தோடு அவர் இப்புத்தகத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இவரைப் பல ஆண்டுகளாக நான் அறிந்திருந்தபோதிலும் சமீபத்தில் சில ஆண்டுகளாக பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களில் உடன் ஊழியராக இணைந்து ஊழியம் செய்யக் காரணம் எங்கள் இருவருக்கும் உள்ள ஒரே தரிசனம்தான். என்னுடைய இருபதாண்டு ஊழிய வாழ்க்கையிலே நான் சந்தித்த பல தேவ மனிதர்களில் என்னையும் என் வீட்டாரையும் அதிகமாகக் கவர்ந்தவர் இவர் ஒருவர்தான்.

சமீபத்தில் சில ஆண்டுகளாக அவரோடு மிக நெருங்கி பழகி ஊழியங்களில் ஈடுபட்ட சமயம் கண்டறிந்து அதிசயித்த அவருடைய விசேஷ குணாதிசயங்களை குறிப்பிட விரும்புகிறேன். பிரதானமாக

தேவனுக்குத் தன்னை முற்றிலும் நூற்றுக்கு நூறு ஒப்புக் கொடுத்திருக்கிற இவர் எந்த ஒரு சாதாரண ஊழியரையும் கனப்படுத்தி மதிப்பவர். எந்த ஒரு தேவ ஊழியரையும் குறித்து தீமையாகப் பேசவோ, மற்றவர்கள் தன் முன் பேசவோ விரும்பாதவர்.

தேவனுடைய ஊழியர்களுக்கும் ஏழைகளுக்கும் கொடுப்பதின் மூலமாக தனது மிகுந்த தேவையின் மத்தியிலும் தேவனுக்காக வாரி இறைக்கிற ஊழியர்களில் இவரைப்போல் நான் எவரையும் கண்டதில்லை.

எப்பொழுதும் அந்நிய பாஷையில் தனக்குள் மெல்லிய சத்தத்தோடே பேசிக் கொண்டே இருக்கும் இவர் தேவ பிரசன்னத்தைத் தன்மேல் சுமந்து செல்வதினால், அவர் எழுந்து நிற்கும் கூட்டங்களில் தேவனும் எழுந்தருளி கிரியை செய்வதை என் கண்களினாலே கண்டு அனுபவித்தவன். என்னுடைய அனுபவத்திலே நானும் மற்ற தேவ ஜனங்களும், ஊழியர்களும் கண்ணீர்விட்டுக் கதறி ஜெபித்த அனுபவங்கள் இவருடைய கூட்டங்களிலேதான்.

நானும் என் வீட்டாரும் என் சபையாரும் இவருடைய ஊழியத்தின் மூலம் பெற்றனுபவித்த ஆசீர்வாதங்கள் எண்ணிலடங்கா தவைகள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

இப்புத்தகத்தைப் படித்துப் பார்த்த போது நான் பரவசமடைந்தேன். கிறிஸ்தவ உலகத்திற்கு இப்புத்தகம் மாபெரும் பொக்கிஷமாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. இப்புத்தகத்தில் வேதாகமம் எங்ஙனம் ஒரு ஆராதனைப் புத்தகம்? ஆராதனை என்றால் என்ன? தேவனுக்குத் தொழுகையா, தொண்டா? எது பிரதானம்? தேவனுடன் உறவா, தேவனுடைய ஊழியமா? எதில் தேவன் அதிகம் பிரியப்படுகிறார்? துதி, ஆராதனை தேவனையே நம் நடுவில் கொண்டு வந்துவிடுகிறது போன்ற அருமையான சத்தியங்களை மிக எளிதான முறையில் எவரும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஆவியானவரின் ஒத்தாசையோடு மிக நேர்த்தியாக எழுதியுள்ளார்.

தேவனைத் துதித்து ஆராதிக்க அறிந்திருக்கிற சபையில்தான் பரிசுத்த ஆவியானவர் வரங்களோடு செயலாற்ற முடியும், அப்படிப்பட்ட சபைதான் எண்ணிக்கையிலும், தரத்திலும் (Quantity & Quality) வளர்ந்து பெருக முடியும் என்ற உண்மையை இப்புத்தகம் மூலம் கிறிஸ்தவ சபைகள் கண்டறிந்து ஆசீர்வதிக்கப்படுவது திண்ணம்.

மற்ற பிரதான மொழிகளிலும் விசேஷமாக ஆங்கிலத்திலும் உடன் மொழிபெயர்க்கப்பட வேண்டிய அத்தியாவசியமான புத்தகம்

இது. இதற்காக அதிகம் ஜெபியுங்கள். விசுவாசிகளுக்கு மாத்திரம் அல்ல, விசேஷ மாக முழுநேர தேவஊழியர்களுக்கும் இப்புத்தகம் பேருதவியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

தேவாதி தேவன்தாமே தம்முடைய தீர்க்கதரிசியான இந்த ஊழியரை இப்படிப்பட்ட கடைசிக்கால சத்தியங்களை புத்தக வடிவிலே ஏராளமாய் கொண்டுவர பயன்படுத்துவாராக. ஆமென்.

மதுரை.
27.9.91.

பாஸ்டர். S. ஜோசப் பாலச்சந்திரன்,
"இயேசு ஜீவிக்கிறார்" – ஆசிரியர்
நல்ல சமாரியன் ஐக்கியம்,
K. புதூர்,
மதுரை – 625 007.

1. வேதாகமம் ஒரு துதியாகமம்

ஆதியும் துதி! அந்தமும் துதி!

துதியும், தொழுகையும் திருச்சபை மீண்டும் பெற வேண்டிய ஆசீர்வாதங்கள். ஆதி பக்தர்கள் அனைவரும் ஆராதனையை அனுபவமாக்கினவர்கள். அவர்கள் கவனமெல்லாம் கர்த்தர் மேல் இருந்தது. அவரைத் துதிப்பதையும் தொழுவதையும் வாழ்க்கையின் பிரதான நோக்கமாக்கினார்கள். வேதாகமத்தை ஒரு தொழுகைப் புத்தகம் எனலாம். “ஆதியிலே தேவன்” என்று துவங்குவதுதான் வேதத்தின் கருப்பொருள் என்றார் ஒருவர். ஆதியிலே தேவன் என்பது மெய்யானால், ஆதியிலே ஆராதனை என்பதும் மெய்தானே? தேவனைச் சுற்றி வருவதுதானே ஆராதனை! தேவனை ஏறெடுத்துப் பார்ப்பது, அவரை ஏற்றித் தொழுவது இவைதான் ஆதியில் நிற்க வேண்டிய அனுபவங்கள். தேவன் அனைத்துலகுக்கும் முதல்வராயிருப்பதுபோல, ஆராதனை என்பதும் அனைத்து அனுபவங்களிலும் முதன்மையானது. ஜெபம் என்பது மாபெரும் கிருபை. ஆனால் ஆராதனைக்கு அடுத்ததுதான் ஜெபம்! நற்செய்திப் பணி, மிகவும் அத்தியாவசியமானது. ஆனால் ஆராதனைதான் நற்செய்திப் பணியிலும் சிறந்தது. எல்லா கிருபையின் ஏதுக்களைவிட துதிப்பதும், தொழுவதும்தான் அதி முக்கிய, அதி உன்னத அனுபவம்.

“தேவப் பணியிலே அதி உன்னதப் பணிதான் ஆராதனை.” இந்த ஆராதனையின் அவசியம் குறித்து அநேக பக்கங்கள் எழுதலாம். முதலாவது வேதாகமம் ஒரு ஆராதனையின் புத்தகம் என்பதை சிந்திப்போம்.

தூதர்

தேவனைத் துதித்து ஆராதித்த தூதர்கள் இன்றும் மகிமையோடு அவருக்கு சேவை புரிகின்றனர். தேவனைத் துதிக்கத் தவறிய தூதர்கள் இன்றும் சாத்தானாகவும், அவனது சேவகனாகவும் மகிமையிழந்து அலைகின்றனர். தொழுகையில் தவறுவது எத்துணை ஆபத்து எண்ணிப் பாருங்கள்.

ஆதாம்

ஆதி மனிதராம் ஆதாமும், ஏவாளும் தேவனை மட்டுமே தேடித் தொழுதுகொண்ட போது, ஏதேனின் இன்பவனத்தில், தேவப் பிரசன்ன மகிழ்ச்சியில் மூழ்கித் திளைத்திருந்தனர். தேவனை விட்டு ஏவாள் சாத்தானையும், ஆதாம் ஏவாளையும் தொழுதுகொண்டபோது தேவனை விட்டுதூரப் பிரிந்தனர். அவரது திவ்விய மகிமையை இழந்தனர். ஏதேனின் இன்ப வாழ்க்கையைத் துறந்தனர். ஏன்? அனைத்தையும் இழந்து மனுக்குலத்தை அந்தகாரத்தில் அலையச்

செய்தனர். தொழுகை ஒளிமயமான தேவ சமுகத்தைக் கொண்டு வருகிறது. தொழுகையின்மை சாத்தானின் இருண்ட சமுகத்தில் தள்ளிவிடுகிறது.

ஆபேல்

சரியாய்த் தொழுது கொண்ட ஆபேல் நீதிமானென்றும், முதல் இரத்த சாட்சியென்றும் நற்சாட்சி பெற்றான். தொழுகையில் தவறின காயீன் கொலைகாரனாய், நாடோடியாய் நலிந்து மடிந்தான். நீதிமானாய் உயர்த்தப்படுவதற்கோ, துன்மார்க்கனாய் தாழ்த்தப்படுவதற்கோ ஒருவனது தொழுகைதான் அளவுகோலாய் அமைகிறது.

சேத்

சேத்தின் சந்ததி தேவனைத் தொழுதுகொண்டதால் மகிமை பெற்றது. (ஆதி. *4:26*) காயீன் சந்ததி தேவனைத் தொழுது கொள்ளாமல் பழியை சுமந்தது. தேவனோடு நடந்த ஏனோக்கும், நோவாவும் தொழுகையாளனாம் சேத்தின் சந்ததியில் தோன்றியவர்கள். ஆம், தொழுது கொள்பவனே, உண்மைத் தொண்டனைப் பிறப்பிக்க முடியும்! பெற்றோரின் தொழுகை பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாகின்றது. தொழுது கொள்ளத் தவறினவர் எல்லோரும் பெரு வெள்ளத்தால் வாரிக்கொள்ளப்பட்டனர்! **ஆம், ஒருவனது நித்தியத்தை நிருணயிப்பது தொழுகையும், துதியும்தான்!**

நோவா

துதியின் மகத்துவத்தை அறிந்த நோவா கர்த்தருக்குப் பலிபீடம் கட்டினான். தகனபலியிட்டுத் தன் தெய்வத்தைத் தொழுது கொண்டான். அவனது தொழுகையின் நறுமணத்தை நுகர்ந்த கர்த்தர், **"இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை . . . பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்."** (ஆதி. *8:20-22*)

இரவும் பகலும் மாறி மாறி வருவதும், விதைப்பும் அறுப்பும் கனியைத் தருவதும், பூமியை நனைக்கும் பனியும் மாரியும், வெள்ளத்தைத் தடுக்கும் உஷ்ணமும் கோடையும் ஒழியாதிருப்பதும் உண்மைத் தொழுகையால்தான்! ஆம், **தேவ கோபத்தைத் தணிக்கும் தன்மை தொழுகைக்கு உண்டு!** தேசத்தைச் செழிக்கச் செய்யும் சிறப்பும் தொழுகைக்கு உண்டு! தேவனை நாம் தொழுது கொள்ளும்பொழுது நமது தேசங்கள் க்ஷேமம் அடைகின்றன.

ஆபிரகாம்

நோவாவின் வழிவந்த ஆபிரகாம் ஒரு ஒப்பற்ற தொழுகை வீரன். விக்கிரக வணக்கத்திலிருந்த அவனைத் தேவன் அழைத்தார். தொழுகையாளனாக்கினார். அவன் சந்ததியின் மூலம், பூமியிலுள்ள

வம்சங்களெல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். ஆம், தொழுகையாளனின் சந்ததி பூமியில் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததி! கர்த்தரைத் தரிசித்து, சென்றவிடமெல்லாம் பலிபீடம் கட்டி பணிந்துகொண்ட ஆராதனை வீரன் அவன். அவனுக்கு அதி முக்கிய உறவு தேவ உறவுதான். தேவன் புதுப்புது வாக்குகளை அருளும் போதெல்லாம் அவன் பலிபீடம் கட்டி கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். தேவன் அவனுக்கு பத்துவிசை தரிசனமானார்! ஆம், துதிக்கப் பழகினவன் மட்டுமே தேவனைத் தரிசிக்க முடியும்! தேவாதி தேவனுக்கு மனமொத்த நண்பனாக முடியும். தேவ இரகசியங்களை அறிந்து தீர்க்கதரிசியாகத் திகழ முடியும். வாக்குத்தத்தங்களைப் பெறவும், சுதந்தரிக்கவும் தொழுகை மிக மிக அவசியம்!

ஈசாக்கு

ஈசாக்கு பல கோணங்களில் கர்த்தரைக் கண்டு பரவசப்பட்டவன். **தலைவன், யேகோவா, சர்வ வல்லவர், எல்ஷடாய்** என்றெல்லாம் கர்த்தரைக் கண்டு களிகூர்ந்தவன். தேவனுக்குப் பலிபீடம் கட்டிக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டான். அவன் தொழுது கொண்ட உடனே, அவனைப் பகைத்து விரட்டிய அரசன் அபிமெலேக்கு அவன் வீடு தேடி ஓடி வந்து அவனோடு உடன்படிக்கை பண்ணினான். நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார் என்று சாட்சியும் கூறினான். ஆம்! **தொழுகை - மாற்றாரின் முன்னே நமக்கு மரியாதை தருகிறது.** ஆராதனை தேவனுக்கு அதிகப் பிரியமானது. அவருக்குப் பிரியமானதைச் செய்யும் பொழுது சத்துருக்களும் சிநேகிதர் ஆவார்கள் என்ற திருவாக்கு பலிக்காதிருக்குமா? (ஆதி. *26:25-31*)

யாக்கோபு

யாக்கோபும் தேவனைத் துதித்தவன். பலிபீடம் கட்டி பணிந்தவன். அவனுடைய கர்ப்பப் பிறப்பெல்லாம், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. அவர்கள் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களாயினர். தேவனைத் தொழுது கொள்ளத் தவறின ஏசாவோ தனது மாம்சப் பசிக்குத் துதி செய்தான். சேஷ்ட புத்திர பாகத்தை இழந்தான். யாக்கோபோ மரிக்கும் பொழுதும் தொழுது கொண்டே மரித்தான் (எபி. *11:21*) இஸ்ரவேல் என்னும் பெயர் பெற்றான். இன்றும் இஸ்ரவேலருக்குத் தகப்பனானான். ஆம், தொழுகை வீரனின் பெயர்கூட பலருக்குத் தரிப்பிக்கப்படுகிறது.

இஸ்ரவேலர்

எகிப்து தேசத்தில் மக்கள் தேவனைத் தொழுது கொள்ளவில்லை. அடிமைத் தளையில் ஆராதிப்பது எப்படிக் கூடும்? தேவனைத் துதிக்காத அவ்வேளையில் மிகவும் தவித்தார்கள். பெருமூச்சு

விட்டார்கள். தேவன் அவர்களைக் கண்ணோக்கினார். தம்முடைய தொழுகையாளர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடு தாம் செய்த உடன்படிக்கையை நினைத்தருளினார். தமக்கு தொழுகை செய்வதற்காகவே தேவாதிதேவன், இஸ்ரவேல் மக்களை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து வெளியே கொணர்ந்தார்!

கர்த்தர் மோசேயின் மூலம் பார்வோனை நோக்கி, "எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு" என்று திரும்பத் திரும்ப சொன்னார். ஆராதனை செய்யும்படி அனுப்ப மறுத்தவர்களை அகோரமாய் சிட்சித்தார். ஆம், **ஆராதனைக்கு மறுப்பது அளவிடமுடியாத ஆபத்தை விளைவிக்கும். நாம் விடுவிக்கப்பட்டதின் நோக்கமே அவரை, ஆராதிக்கத்தான்.** இன்றும் நமக்கு வரும் பல வாதைகளுக்கும், சிட்சைகளுக்கும் மூல காரணம் ஆராதனைக்கு நாம் விதித்த தடைகள்தான்.

வாழ்வும், தாழ்வும்

விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் மோசேயின் பின்னே அணிவகுத்து, கர்த்தரைப் புகழ்ந்து பாடிப் புறப்பட்டார்கள். தேவனைத் தொழுதுகொண்ட பொழுதெல்லாம் அவர்கள் முன்னேற்றம் கண்டார்கள். அவரைத் தொழுது போற்றாமல் முறுமுறுத்த போதெல்லாம், நன்றியுணர்வை இழந்த பொழுதெல்லாம், தேவனைவிடப் பிரச்னைகளை பெரிதுபடுத்திய பொழுதெல்லாம், அவர்கள் நாசமடைந்தார்கள். இதுதான் அவர்களின் நாற்பது வருடகால வரலாறு. ஆம், **ஒருவனுடைய தொழுகைதான் அவனது முன்னேற்றத்தையும், அழிவையும் நிருணயிக்கிறது.** கன்றுக்குட்டியை தொழுது மூவாயிரம் பேர் மாண்டார்கள். மோவாபிய ஸ்திரீகளின் அழகை ரசித்து, அவர்களையும் அவர்கள் தேவர்களையும் தொழுதுகொண்ட இருபத்துநாலாயிரம் பேர் வாதையில் செத்தார்கள். தேவனுடைய தொழுகை, திசை திரும்பினபோதெல்லாம் அழிவும், சாவும்தான் அவர்களின் பங்காக இருந்தது. **தவறான தொழுகை பலரை தமக்கிரையாக்கிக் கொண்டது.**

பரிசுத்த ஸ்தலம்

அங்குமிங்கும் அலைமோதின இஸ்ரவேலரின் கவனத்தைத் தமக்கு நேராக்கி, தம்மைத் தொழுதுகொள்ளும்படி செய்ய தேவன் தமக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கச் செய்தார். அந்தப் பரிசுத்த ஸ்தலம் எப்படி அமைக்கப்பட வேண்டும்? உடன்படிக்கைப் பெட்டி எந்த மரத்தினால் எவ்வளவு அளவாய், உருவாக்கப்பட வேண்டும்? கிருபாசனம், கேருபீன்கள், மேசை, குத்து விளக்குகள், மூடு திரைகள், ஆராதனை செய்பவர்கள் கொண்டுவர வேண்டிய பலிகள், பொருட்கள், ஆசாரியனின் உடைகள் எப்படி இருக்க வேண்டும்? என்றெல்லாம் வேதத்தில் புள்ளி விவரங்கள் உண்டு. இவைகளை

விளக்க பற்பல அத்தியாயங்களை, நூற்றுக்கணக்கான வசனங்களை தேவன் தமது வேதத்தில் ஒதுக்கியுள்ளார் என்பதை சிந்தித்தால் தேவன் தொழுகைக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளார் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. என் இள வயதில், இவைகளை விளக்க ஏன் இத்தனை பக்கங்கள் வேதத்தில் இடம்பெற வேண்டும்? என்று குழம்புவேன். ஆனால் தேவன், ஆராதனையை எத்துணை அதிகமாய் எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்துகொண்ட பிறகே என் குழப்பங்கள் மறைந்தது. லேவியராகமம் முழுவதுமே ஆராதனையை மையமாகக் கொண்ட புத்தகம்தான். இவை பலவகையான பலிகள், காணிக்கைகள், ஆராதனைக்குத் தேவையான பரிசுத்த அலங்காரம், தேவனுக்குக் கொண்டாடும் பண்டிகைகள் அனைத்தையும் விவரமாய்க் கூறும் புத்தகம். தேவன் ஆராதனைக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை இவைகள் விளக்கவில்லையா? அகில உலகத்தையும் சிருஷ்டித்த விதத்தை விளக்க தேவன் இரண்டே அத்தியாயங்களை எடுத்துக் கொண்டார். ஆனால், ஆராதனை ஒழுங்கைக் குறித்து விளக்க அநேக அத்தியாயங்களை ஒதுக்கி வைத்துள்ளார்! ஆம், **"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்"** என்று தேவன் திட்டமாய்ப் பேசினார் அல்லவா? (ஏசா. *43:21*) இதனின்று தேவன் ஆராதனைக்கு அளித்திருக்கும் இடத்தின் ஆழத்தை அறிந்துகொள்ள முடிகிறதல்லவா?

ஆசாரியர்கள்

ஆசாரியர்களையும் தேவன் தமக்கென்று பிரித்துக் கொண்டார். ஆசாரியர்கள் தேவனை ஆராதிக்கும் மக்கள். அவர்களைத்தான் தமது கூடாரத்துக்கு மிக அருகில் பாளையமிறங்கச் செய்தார். ஆசாரியருக்கு அடுத்த வரிசையில் லேவியர் பாளையமிறங்குவார்கள். ஆராதிக்கிறவர்கள் மற்ற எல்லாரையும் விட தேவனிடத்து நெருங்கி வாசம் பன்னுவார்கள் என்பதை இந்த அமைப்பு தெளிவாகக் காட்டுகிறது.

யுத்த வீரனாவதற்கு இருபது வயது போதும். (எண். *1:3*) ஆசாரிப்புக் கூடாரத்தில் பணிவிடை செய்யும் லேவியன் இருபத்தைந்து வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். (எண். *8:24*) ஆனால் ஆசாரியனாய் பணியாற்ற குறைந்த வயது முப்பதாக இருக்க வேண்டும். (எண். *4:3*)

ஆராதனை செய்யும் ஆசாரியன் ஆவிக்குரிய முதிர்ச்சி நிலை பெற்றிருக்க வேண்டும். **ஆராதனை என்பது அதி உன்னதப் பணி, அற்புதப் பணி, அத்தியாவசியப் பணி, தலையாயப் பணி, தவிர்க்கக் கூடாத பணி, முதிர்ச்சியடைந்த பணி, பிரதானப் பணி!**

நியாயாதிபதிகளின் காலம்

நியாயாதிபதிகளின் காலமும் ஆராதனையை மையமாகக் கொண்டதுதான். பக்தியுள்ள சந்ததி மரித்த பிறகு, தோன்றிய புதுச் சந்ததிதான் நியாயாதிபதிகள் காலத்தில் இருந்தது. அவர்கள் கர்த்தரையும் அவரது அற்புதங்களையும் அறியாத சந்ததியார். கர்த்தரைவிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றி கோபமூட்டினார்கள். தவறான ஆராதனையைக் கண்ட தேவன் அவர்களை சத்துருக்களுக்கு ஒப்புக் கொடுத்தார். அவர்கள் மெய் தேவனிடம் மனதைத் திருப்பின போதெல்லாம், தேவன் நியாயாதிபதிகளை எழுப்புவார்! மீண்டும், மீண்டும், அவர்கள் தொழுகை தேவனை விட்டு வேறுபக்கம் திரும்பும் போதெல்லாம், தேவன் சத்துருக்களின் ஆளுகைக்குள் அவர்களை ஆட்படுத்துவார்! **ஆராதனைதான் நமது சத்துருக்கள் மேல் நமக்குள்ள வெற்றிக்கு பிரதான வழி!**

இராஜாக்கள்

அரசர்களின் காலத்திலும் இதே கதைதான். அரசர்களும் மக்களும் தேவனைத் தேடிப் பணிந்து கொண்ட பொழுதெல்லாம் தேவன் அவர்களை நிலைநிறுத்தினார்! உண்மைத் தொழுகையை நிறுத்தி, அந்நிய தேவர்களைப் பணிந்து கொண்டபோதெல்லாம் தேவன் அவர்களைச் சிதறடித்தார். சீரழியச் செய்தார். ஆராதனையில் தவறின சவுல் தள்ளப்பட்டான். ஆராதனையில் தேறின தாவீது உயர்த்தப்பட்டான். தொழுகைக்கும் துதிக்கும் இலக்கணம் வகுத்தவன் தாவீது எனலாம். ஆனாலும் அது தாவீது நியமித்ததல்ல, தேவன் அவனுக்கு வெளிப்படுத்திய அரும்பெரும் சத்தியம். தாவீது யூத குலத்தைச் சேர்ந்தவன். யூதா என்றால் துதி என்று பொருள். அதற்கேற்றபடி தாவீது எல்லா சூழ்நிலையிலும் தேவனைத் துதித்து வெற்றி எடுத்தான்.

தாவீது

சவுலின் நாட்களில் கர்த்தருடைய பெட்டியை அவன் தேடவேயில்லை. *(1 நாளா.13:3)* ஆனால் தாவீது ஆட்சிக்கு வந்த உடனே கர்த்தருடைய பெட்டியைக் கொண்டு வர விரும்பினான். ஆராதனை ஒழுங்கை மாற்றியமைத்தான். அவன் அரண்மனையில் இருந்தாலும்கூட **"கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்திரித்தான். அவருடைய துதி எப்போதும் அவன் வாயிலிருந்தது"**. தேவன் மேல் அவன் ஆத்துமா தாகமாயிருந்தது. இருபத்து நான்கு மணிநேரமும் தேவன் துதிக்கப்பட வேண்டியவரென்று எண்ணினான். இரவு பகலாய் தேவனுக்கு முன்பாக, தேவனைத் துதித்துப் பாட ஆசாரியரை நிறுத்தினான். தேவன் கொண்டாடப்படத்தக்கவர் என்று கண்டு பிடித்தான். உணர்ச்சி வெள்ளத்தை தேவனுக்கு முன்பாக ஓடவிட்டு

மகிழ்ந்தான். சீயோனில் தேவன் எழுந்தருளினார் என்று கொண்டாடினான். அவன் மட்டுமல்ல, அனைவரையும் துதிப்பவர்களாய் மாற்றவேண்டுமென்று ஏங்கினான், எழுதினான்.

அவன் வழிவந்த எல்லா நல்ல அரசர்களும் தேவனைத் தொழுது கொண்டு வெற்றி சிறந்தார்கள். பொல்லாத அரசர்கள் பொருளையும், விக்கிரகங்களையும் தொழுது கொண்டு தேசத்தை எதிரிகள் கையில் அடகு வைத்தனர். அழிந்து போயினர்.

தீர்க்கதரிசிகள்

தீர்க்கதரிசிகள் மெய் தேவனை நேசிக்கும்படி தேவ மக்களை எழுப்பி நடை போட வைத்தார்கள். போலித் தொழுகையை கண்டனம் பண்ணினார்கள். அவர்களுக்கு செவி கொடுத்த மக்கள் சேதமாகாதிருந்தார்கள். க்ஷேமமாய் வாழ்ந்தார்கள்.

சிறையிருப்பின் சீலர்

பாபிலோனின் அடிமைகளான இஸ்ரவேலர் உண்மை தெய்வத்தைத் தொழுது கொள்ளத் தவறினார்கள். ஆதலால் பலவாயப் பாடுகள் அனுபவித்து பரிதவித்து நின்றனர். சீயோனை நினைத்து கண்ணீர் சிந்தினர். இக்காலத்தில்தான் தொழுகை வீரர்கள் துடிப்போடு எழுந்தனர். தானியேல் தேவனை இடைவிடாமல் ஆராதித்தான். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்றோர் தேவனையன்றி வேறெதையும் தொழுமாட்டோமென்று சவால்விட்டு தீயில் வலம் வந்தனர். செருபாபேல், யோசுவா போன்ற தேவதாசர்கள் எருசலேம் வந்து மோசே எழுதினபடி பலிபீடத்தில் தகன பலியிட்டனர். தாவீது கட்டளைப்படி பூரிகை ஊதி, தாளங்களைக் கொட்டி, மாறி மாறிப் பாடினார்கள். நெகேமியாவும், எஸ்றாவும் தொழுகையை மீண்டும் துவக்கி விட்டார்கள். சபையாய்க்கூடி மகத்துவமுள்ள தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்தார்கள். பண்டிகை கொண்டாடினார்கள். ஆம், துதி பாடலோடு தேவ ஆலயத்தை எழுப்பி, மதிலைக் கட்டினார்கள்.

தாவீதின் குமாரன்

தாவீது ஏற்றி வைத்த ஆராதனை தீபம் இடையில் அணைந்துவிட்டது. தாவீதின் கூடாரம் விழுந்துவிட்டது. விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மீண்டும் எடுத்துக் கட்டத்தான் தாவீதின் குமாரனாம் இயேசு, தாவீதின் ஊரில் பிறந்தார். இழந்து போன ஆராதனை ஆவியைப் புதுப்பித்தார். அவர் பிறந்த பொழுது மீண்டும் தொழுகையும் துதியும் வெடித்துக் கிளம்பியது.

தேவ தூதர் கூட்டம் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்." மேய்ப்பர்கள் குழந்தை இயேசுவைக் கண்டு, "கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை

மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்". (லூக். 1:13,14,20)

குழந்தையைக் கண்ட சிமியோன் துதித்துப் புகழ்ந்தான். இரவும் பகலும் ஆராதனை செய்த அன்னாள் தீர்க்கதரிசியும், கர்த்தரைப் புகழ்ந்தாள். மரியாள் **"என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூருகிறது"** என்று பாடி மகிழ்ந்தாள். மரியாளைக் கண்ட எலிசபெத்து தேவனை வாழ்த்தினாள். சகரியாவும் சந்தோஷமாய் இஸ்ரவேலின் கர்த்தரை ஸ்தோத்திரித்தான். அது மட்டுமா? யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவரைப் பணிந்து கொள்ள கிழக்கிலிருந்து ஞானிகள் ஓடோடி வந்தனர். ஆம், எங்கும் தொழுகை மயம்தான்.

கிறிஸ்துவின் முதலாம் வருகையிலேயே ஆராதனை ஆவி இந்த அளவுக்கு பொழியப்படுமானால், அவரது இரண்டாம் வருகைக்கு முன் ஆராதனை எந்த அளவாய் பொழியப்படவேண்டும்? அவரது முதலாம் வருகைக்குக் காத்திருந்தவர்கள், ஆராதனை தொழுகையோடு ஆயத்தமானார்களானால், அவரது மகிமையான வருகைக்கு எப்படிப்பட்ட ஆயத்தம் அவசியம் என்று எண்ணிப் பாருங்கள்.

"தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது; தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக் கடவர்கள். (எபி1:6)" என்று கட்டளையிட்டவர், அவரது இரண்டாம் வருகையிலும் இப்படிக் கட்டளையிடுவது எவ்வளவு நிச்சயம்! அதனால்தான் இயேசு மீண்டும் வானத்திலிருந்து இறங்கும்போது **"ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்"** வருவார் என்று பவுல் எழுதி வைத்தான். ஆம், ஆரவாரத் தொழுகையோடு அன்பர் இயேசு வருவாராம்! தொழுகையோடு பிறந்தவர், தொழுகையோடு மீண்டும் வருவார். அவர் பூமியில் வாழ்ந்த காலமெல்லாம் மக்கள் அவரைத் தொழுதார்கள். இன்றும் அவரை விண்ணுலக பக்தரும், தூதரும், மண்ணுலக பக்தரும் தொழுதுகொண்டுதான் இருக்கிறார்கள்.

கிழக்கிலிருந்து வந்த **ஞானிகள்** குழந்தையென்றும் பாராமல் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து கொண்டு, காணிக்கை படைத்தார்கள். தேவனை சொப்பனத்தில் கண்டு, நேரில் தரிசித்த பாக்கியசாலிகளானார்கள். சரித்திரம் தொழுகையாளரை ஒருபோதும் மறப்பதில்லை.

குஷ்டரோகி அவர் பாதத்தில் விழுந்து கும்பிட்டான். குழந்தையை போல் உடல் முழுவதும் மாறி சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டான். சாபம் ஆசீர்வாதமானது! ஆம், **தொழுகை நமது சாபத்தை ஆசீர்வாதமாக்குகிறது.**

யவீரு என்னும் தலைவன் அவரைக் கண்டு **பணிந்தான்.** மாபெரும் அற்புதத்தைக் கண்டான். மரித்துப்போன மகளை மீண்டும்

ஜீவனோடு பெற்று சிந்தை மகிழ்ந்தாள். துதி தேவனை அற்புதம் செய்யத் தூண்டுகிறது. (மத். 9:18)

காற்றும் கடலும் கீழ்ப்படிவதைக் கண்ட சீஷர்கள், "மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள்". எத்தனை முறை நமது வாழ்க்கைப் புயலை அவர் அதட்டி அமைதிப்படுத்தினார், எத்தனை முறை பிரச்னை பெருஞ்சேற்றினின்று நம்மை கரம் பிடித்து தூக்கி எடுத்தார்? அத்தகு பெருமைக்குரிய தேவனை நாம் பணிந்து போற்ற வேண்டாமா? நன்றிக் காணிக்கை படைக்க வேண்டாமா? அவரோடு எவ்வளவு நெருங்கிப் பழகுகிறோமோ அவ்வளவுக்கதிகமாய் அவரைத் தொழுது கொள்ள வேண்டுவது அவசியம் அல்லவா?

கானானிய ஸ்திரீ ஒருத்தி அவர் காலடியில் விழுந்து பணிந்து கொண்டாள். அருமை மகள் பிசாசுப் பிடியினின்று விடுதலை செய்யப்பட்டாள். மகதலேனா மரியாள் குழுவினர் உயித்தெழுந்த நாதரின் பொற்பாதங்களைத் தழுவிப் பணிந்து, தொழுது கொண்டார்கள், மகிமையின் ஆண்டவராக, முதலாவது பார்த்துப் பணிந்து கொண்ட பாக்கியம் பெற்றார்கள். பாசத்தை ஊற்றினார்கள். பதினொரு சீஷர்களும் பரமேறும் பராபரனைப் பணிந்து கொண்டு அனுப்பினார்கள். பிறந்த பொழுதும் தொழுகை, சீடர்கள் கண்களுக்கு முன்னே மறைந்த பொழுதும் தொழுகை. அசுத்த ஆவிகளும் அவர் முன்னே நடுநடுங்கி பணிந்து கொண்டன. லேகியோன் பிடித்த மனிதன் ஓடி வந்து அவரைப் பணிந்து கொண்டான்.

கண் திறக்கப்பட்ட குருடன் தேவனுடைய குமாரன் என்று கண்டதும் பணிந்து கொண்டான். தலைவனாகக் கண்டதும் தாள்பணிந்து தொழுகை, தெய்வமாகக் கண்டதும் தொழுகை, இரட்சகராகக் கண்டதும் தொழுகை, அதிகாரியாகக் கண்டதும் தொழுகை, அப்பப்பா! அவரைக் கண்ட யாவரும் அவரைத் தொழுது கொள்ளும்படி ஈர்க்கப்பட்டார்கள். அவரிடத்தில்தான் என்ன மகிமை கண்டார்களோ?

ஆதிச்சபை

ஆதிச் சபையும் ஒரு தொழுகைச் சபைதான். கிறிஸ்துவை வழியனுப்பின சீடர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்து நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். ஆவியின் நிறைவைப் பெறுமுன்னரும், பெற்ற பின்னரும் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் மூலம் உருவான சபையினர் "தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு

பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்." (அப். 2:46,47)

ஆதிச்சபை தேவ சமுகத்தில் தரித்திருந்து, மகிழ்ச்சியோடும், கபடற்ற மனதோடும் **தேவனைத் துதித்து பழகின சபை!** துதிக்கும் சபை என்றுமே **மகிழும் சபை!** துதிக்கும் சபை ஜனங்களின் **தயவையும் நன்மதிப்பையும் பெறுகின்ற சபை!** துதிக்கும் சபை அனுதினமும் பெருகும் சபை! துதிக்கும் தலைவர், துதிக்கும் சபைகளைப் பெற்றெடுப்பார்.

அற்புத சுகம் பெற்றோர் அற்புதத் தேவனைத் துதித்து மகிழ்ந்தார்கள். துதி அற்புதங்களைப் பெற்றெடுக்கும்! அற்புதங்கள் துதியொலியை எழுப்பிவிடும். எருசலேம் சபை மட்டுமல்ல, அந்தியோகியா சபையும் ஓர் ஆராதனைச் சபைதான்! கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்த சபை! அப்பொழுது ஆவியானவர் வெளிப்பாடுகள் கிடைத்தது. பாடுகள் நடுவிலும், வேதனைகள் மத்தியிலும், பாட்டுகள் பாடி பரமனைத் தொழுது கொண்டவர்கள்தான் அந்தியோகியா ஊழியர்கள்!

நிருபங்கள்

நிருபங்களும் தேவ சபையை துதிக்கும்படி தூண்டிவிடுகின்றன. எல்லாவற்றிற்காகவும் தேவனைத் துதித்துப் பாடினார்கள். ஒவ்வொரு சபைக்காகவும் நிருபம் எழுதியவர்கள் தேவனைத் துதித்தார்கள். ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதுதான் நிருபங்களின் கருப்பொருள். தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தேவன் நமக்காக செய்தவைகளைப் போதிப்பது நிருபங்களின் அடுத்த முக்கிய அரும் பொருள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்பதையும், ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் என்பதையும் இணைத்துப் பார்த்தால் எப்பொழுதும் ஆராதனை செய்ய வேண்டும் என்பது அறியப்படும்! **ஆவியில் நிறைந்த வாழ்க்கை ஆராதனை வாழ்க்கை,** என்று நிருபங்கள் நிச்சயித்து கூறுகின்றன.

இறுதிப் புத்தகம்

வெளிப்படுத்தின விசேஷம் ஆராதனையை அழகாக வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு முறை பரலோகக் காட்சியை காணும் பொழுதும், ஆராதனையின் நறுமணம் வீசுவதை நுகரலாம். சுருங்கச் சொன்னால், **"வேதப் புத்தகமே ஒரு தொழுகைப் புத்தகம்"** என்று சொல்லலாம்!

எந்த அளவுக்கு கர்த்தருடைய வசனத்தை தியானிப்பீர்களோ, அந்த அளவுக்குக் கர்த்தரைப் பார்ப்பீர்கள், பரவசப்படுவீர்கள், துதித்துப்போற்றுவீர்கள்!

இதுகாறும் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரையில் துதியால் விளைந்த செயல்பாடுகள் குறித்து முகவுரையாகச் சிந்தித்தோம். "**வேதாகமம்**", ஒரு "**துதியாகமம்**" என்ற முடிவுக்கு வந்தோம். தேவனைத் துதிக்கத் தூண்டுவதுதான் வேதாகமத்தின் அதி உன்னத நோக்கம்! தேவனைத் துதிக்கும் திவ்வியப் பணிக்கு வேதம் உங்களை அழைக்கின்றது. வருவீர்களா? வந்து ருசிப்பீர்களா?

2. ஆராதனைக்கு அர்த்தங்கள் ஆயிரம்

தொழுகை என்றால் என்ன என்பது குறித்து இவ்வத்தியாயத்தில் காண்போம். தொழுகை என்பதை வார்த்தைகளால் வரையறுக்க முடியாது. ரோஜாவின் நறுமணத்தையும் தெளி தேனின் தித்திப்பையும் வார்த்தையில் வருணிக்க இயலாது. ஆனால் நுகரவும், ருசிக்கவும் முடியும். அதுபோலவே தொழுகை என்பதை அனுபவிக்க முடியும். ஆனால் அளவளாவ முடியாது. பல ஆசிரியர்கள் தொழுகையை தங்களாலியன்ற அளவுக்கு வரையறுத்துக் காட்டியுள்ளனர். அவற்றில் சிலவற்றை இங்கு கண்டபின்பு, எனது எண்ணங்களையும் சேர்த்து, தேவ கிருபையோடு உங்களுக்கு விளக்க முயற்சிக்கின்றேன்.

"நன்றி நிறைந்த உள்ளம் பொங்கி வழிவதுதான் தொழுகை" என்றார் ஒருவர். அவர் கூற்றுப்படி முதலாவது தொழுகை உள்ளத்தில் ஊற்றெடுத்து, பொங்கிப் பொங்கி வெள்ளமெனப் பாய்வது! ஆம், தொழுகை வாய்ச் சொல்லில் வருவதல்ல, **முழு உள்ளத்திலிருந்தும் பீறிட்டெழுவது!** தேவன் நமக்குப் பாராட்டின அளவற்ற நேசத்தை ஆராய்ந்து பார்க்கும்போது உள்ளம் நன்றியால் நிறைகிறது. இருதயத்தின் நிறைவினால் வாய் துதிக்கத் துவங்குகிறது. இதுதான் தொழுகை! தாவீது இதை அனுபவித்தான். **"என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது"** என்றான். நல்ல விசேஷம் என்பது என்ன? மேசியாவைக் குறித்த விசேஷம்தான். தேவனுடைய அழகையும், அற்புத கிரியையும், மகிமையையும், மகத்தான நீதியையும், ஜெயத்தையும் தியானிக்கும்போது உள்ளம் பொங்கியெழுகிறது. அதுவே பாடலாய், அல்லது துதி மாலையாய் அவன் உதட்டிலிருந்து உருவாகி வெளிவருகிறது. இதுதான் தொழுகை! தாவீது எழுதின துதி பாடல்கள் அனைத்தும் உள்ளத்தில் பொங்கி நீரூற்றுபோல் பாய்ந்து வந்தவைகள்தான்! தாவீது, கர்த்தாதி கர்த்தரை பல்வேறு கோணங்களில் பார்த்து இரசிக்கின்றான். தேவாதி தேவனின் வீர தீர பராக்கிரமங்களை வியந்து போற்றுகிறான். இதுதான் உண்மைத் தொழுகை. தேவன் நமக்குச் செய்த நன்மைகளை எண்ணிப் பார்க்கும் பொழுது, நமதுள்ளம் நன்றி உணர்வினால் நிரம்பும். அவை பெருக்கெடுத்து ஓடும்போது உதடுகள் துதிக்கத் துவங்கும்.

வேறொருவர், தொழுகையைக் குறித்து **"தேவ சமுகத்தில் இளைப்பாறும் உள்ளத்திலிருந்து, புரண்டு வரும் உணர்வு"** என்றார். தொழுது கொள்பவர் இங்கே அமைதியாய் இளைப்பாறுகின்றனர். அவருள்ளத்தில் போராட்டமே இல்லை. கிறிஸ்துவுக்குள் தன்னைப் பூரணராகக் காண்கிறார். நம்பிக்கை அவரை நிறைக்கின்றது. தேவப் பிரசன்னத்தை கிச்சிலி மர நிழலாகவும், தாம் அதின் நிழலிலே வாஞ்சையாய் உட்கார்ந்து அவரது நேசத்திலே சோகமடைந்ததாகவும்

அவர் உணருகின்றார். இந்த நேசத்தைத் தமது வாயினால் விவரிக்கின்றார். இதைத்தான் தொழுகை என்று அவர் விளக்குகின்றார்.

"இருதயம் தேவையைப் பற்றி நினைக்காமல், பெற்ற ஆசீர்வாதங்களைப் பற்றியும் நினைக்காமல், தேவனை மட்டுமே நினைத்திருப்பது தொழுகை" என்றார் மற்றொருவர்! ஆம், எத்தனை உண்மையிது! உள்ளம், தேவனை மட்டுமே நினைத்து பரவசமடைவதுதான் உண்மைத் தொழுகை! தேவையை மட்டுமே சுற்றி வருவது **ஜெபம்!** பெற்ற நன்மைகளை மட்டும் சுற்றி வருவது **நன்றி!** தேவனையே சுற்றி வருவது **தொழுகை!** ஆம், தம்மையே சுற்றிவரும் உள்ளங்களைத்தான் தேவன் இன்று விரும்பித் தேடுகின்றார்.

தாவீது இதை இவ்வாறாகக் கூறுகிறான். **கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப் பண்ணி, உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக, நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன்.** (சங். 26: 6, 7) ஆம், தேவனுடைய பீடத்தைச் சுற்றி வருவது தான் தொழுகை! இன்றும் அஞ்ஞானிகள் தங்கள் விக்கிரகங்களைச் சுற்றி வந்து பணிந்து கொள்வதை நாம் பார்க்கிறோம். தேவனை மட்டுமே நமது மனமும், உணர்வுகளும் சுற்றிச் சுற்றி வட்டமிடுவதுதான் தொழுகை! அப்பொழுது தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிரம்பிவிடுகிறோம். இதுதான் தொழுகையின் இன்றியமையாத நோக்கம்!

தேவனுடைய தகுதியை அங்கீகரிப்பதுதான் தொழுகை! தேவனது தகுதிக்கு நாம் கொடுக்கும் பாராட்டுத்தான் தொழுகை! இருபத்து நான்கு மூப்பர்களும் தேவனைத் தொழுதுகொள்ளும்போது **"கர்த்தாவே, தேவரீர், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்"** என்று துதித்தார்கள். ஆம், தேவனைப் பாத்திரராகப் பார்ப்பதுதான் தொழுகை!

"தேவனைக் கவர்ச்சியின் நாயகனாகக் கண்டு நேசத்தை அவர்மீது ஊற்றுவது தொழுகை!" தேவனை எல்லாவற்றையும்விட அதிகமாய் நேசித்து, தனக்குப் பிரியமான எல்லாவற்றையும் பலிபீடத்தில் படைப்பது தொழுகை! அவரது நேச மயக்கத்தில் திளைப்பது தொழுகை. தேவனில் முழு இதயத்தோடும், முழு மனதோடும், முழுச் சிந்தனையோடும், முழுப் பெலத்தோடும் அன்பு கூறுவதுதான் தொழுகை!

ஆபிரகாம், தொழுகைக்கு இலக்கணம் வகுத்தவன். ஆபிரகாம் தன் வேலைக்காரரைக் கண்டு, "நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்திற்குத் திரும்பி வருவோம்," என்றான்.

தன்னுடைய ஏகப் புதல்வனை, நேச குமாரனைத் தகனபலியாகப் படைப்பதுதான் தொழுகை என்று இங்கு அவன் குறிப்பிட்டான். தேவனைவிட வேறெதையும் அதிகமாய் நேசிக்காத உள்ளம்தான் துதிக்கும் உள்ளம். இயேசுவைப் போல் ஒரு நேசரில்லை எனும் உணர்வுதான் தொழுகையின் சாரம்!

தொழுகையின் இலட்சணங்கள்

உண்மைத் தொழுகையில் கட்டாயம் கீழ்க்கண்ட இலட்சணங்கள் தென்படும். இவைகளை வாஞ்சையோடு நாடுங்கள். நீங்களும் தொழுகை வீரராகிவிடுவீர்கள்.

நேசம்

உண்மைத் தொழுகை நேசத்தால் நிரம்பியிருக்கும்! தேவனை எல்லாவற்றிற்கும் மேலாய் நேசிப்பவன் வேறெதையும் அதிகமாய் மதிக்கமாட்டான். தேவனால் திருப்தியடைந்தவன், உலகம் தரும் தேன் கூட்டையும் மிதிப்பான். அவன் எப்பொழுதும் அவர் மீதுள்ள நேசத்தால் மயங்கின நிலையிலிருப்பான். ஆம், அவன் தேவனுக்கு பைத்தியம்தான்.

நேசம், தன் நேசரை சந்தோஷப்படுத்துகிறது. இந்த நேசம் தன்னலமற்றது. சாலொமோனின் உன்னதப்பாட்டு, தொழுகையாளனின் அனுபவமாகிவிடும். "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக. உமது நேசம் திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது. உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள். என்னை இழுத்துக் கொள்ளும், உமக்குப் பின்னே ஓடி வருவோம்; ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டு வந்தார்; நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம்; திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்; உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்." (உன். 1:2-4)

உண்மை நேசத்தின் இலட்சணங்களை இப்புத்தகம் எத்தனை அழகாய் விவரிக்கிறது! நம் நேசர் இயேசுவின் மேலுள்ள நமது நேசத்தை, இந்த உன்னதப்பாட்டின் தரத்தோடு ஒப்பிட்டு மதிப்பிடலாம்.

தமது நேசரின் வாயின் முத்தங்களுக்கு அவள் ஏங்குகிறாள்! ஆம், அவரது மணவாட்டியாகிய நாம் அவரது நெருங்கின உறவுக்கு இப்படித்தான் ஏக்கம் கொள்ள வேண்டும். அவரிடமிருந்து ஏதாவது நன்மை கிடைக்கும் என்பதற்காக அவரைத் தேடுவதல்ல! அவரையே தேடும் நேசம் இது. இந்த உலகில் மற்றெதன்மீதும் இல்லாத நேசம் நம்மாண்டவர் மேல் நமக்கு இருக்க வேண்டும். வேதம் திருச்சபையை

மணவாட்டியாகவும் இயேசுவை மணவாளனாகவும் வருணிப்பது எத்தனை உண்மை. இது அப்பழுக்கில்லா ஆழமான நேசத்திற்கு அளவுகோல் அல்லவா?

மகிழும் நேசம்

அவரது நேசம் நம்மை மகிழ்விக்க வேண்டும். அவரது நேசம் திராட்சை ரசத்தைப் பார்க்கிலும் மதுரமானதாய் இருக்க வேண்டும். இயேசு என்னை மிகவும் நேசிக்கிறார் என்ற நிச்சயமே நமக்கு இன்பமானதாயும், திருப்தியளிக்கக்கூடியதாயும் இருக்க வேண்டும். வேறு நேசத்தை நாடவிடாதபடி அவரது நேசம் நம்மை இறுகக் கவ்விப் பிடிக்க வேண்டும். தொழுகை நேரத்தில் அவரது பேரின்ப சமுகம் நம்மை நிறைக்கும்படி நாம் எதிர்பார்க்க வேண்டும். அவரது சிநேகத்தை தியானித்து மகிழ வேண்டும். இயேசு நேசிக்கிறார் என்ற உணர்வில் வேறு ஏமாற்றங்களையும், வேதனைகளையும் நாம் அறவே மறக்க வேண்டும்.

இன்ப நேசம்

அவரது நாமம் இன்பமாக ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்க வேண்டும். நாம் எவரையாவது அதிகம் நேசித்தால், அவரது பெயரைக் கேட்கும்போதே நமதுள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பும் ஒரு தனித் தெம்பும், ஆசையும் எழும்பும்! நம்மை உண்மையாய் நேசிக்கும் ஒருவரது பெயரைக் கேட்டாலே உள்ளம் ஆறுதல் அடையும். அப்படியானால் பதினாயிரம் பேரில் சிறந்தவராம் நம் நேசரின் திருப் பெயரைக் கேட்டதும், நமது உள்ளம் எவ்வளவாய் பரவசப்பட வேண்டும்? எத்துணை அளவு பேரின்பம் பெற வேண்டும்?

"இயேசு என்றதுமே எனக்கோர் இன்பம் பெருகுதம்மா,
காசினியில் அவர்போல் எவரையும் கண்டதில்லை அம்மா!"

என்று பக்தர் பாடிப் பரவசமானது எத்தனை உண்மையான அனுபவம்? "தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் திவ்விய மதுரமாமே!' என்று ருசித்துப் பாடல்களைப் பாடி அவரது நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டும். இயேசுவின் மேலுள்ள நேசத்தை பிரதிபலிப்பதுதான் தொழுகை! நேசம் நிறைந்த உள்ளம் இயேசுவை எப்போதும் எண்ணி முணுமுணுத்துக்கொண்டிருக்கும். அதனால் ஒரு இனம் புரியாத இன்பத்தை அனுபவிக்கும்!

கறையற்ற நேசம்

"ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்". ஆம், கறைபடாதவர்கள் இயேசுவை உளமார நேசிக்கிறார்கள். "நான் உங்களை கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவ

வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருக்கிறேன்" என்று பவுல் கூறும் கற்புள்ள கன்னிகைகள் இயேசுவை முழு மனதோடும் நேசிக்கிறார்கள். வேதாகமப் புத்தகவரிசையில் பிரசங்கிப் புத்தகத்திற்கு அடுத்து உன்னதப்பாட்டுப் புத்தகம் வருகிறது. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி பேசுகிறான். எல்லாம் மாயை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டவனுக்குத்தான் இயேசுவுக்கு நேசப்பாடலாம் உன்னதப்பாட்டை எழுத முடியும் என்றார் ஒரு பக்தர், எத்தனை உண்மை! பிரசங்கியின் அனுபவம் பெற்றவன் உடனே உன்னதப்பாட்டின் அனுபவம் பெறுகிறானாம்.

விருந்து சாலை

தேவ சமுகத்தை விருந்து சாலை என வருணித்து, அவரது நிழலின் கீழே ஆறுதல் அடைவது தொழுகை. "அவர் இடது கை என் தலையின் கீழ் இருக்கிறது, அவர் வலது கை என்னை அணைத்துக் கொள்ளுகிறது" எனும் மிக நெருக்கமான நேச சகவாசம்தான் தொழுகை.

"என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்" எனும் உரிமை கொண்டாடுதல் தொழுகை! "என் நேசரே, நான் உம்முடையவன், என்ன வந்தாலும் நான் உம்முடையவன்" என்று உறவு கொண்டாடி மகிழுவதுதான் தொழுகை! அவரது நேச உள்ளம் நமது நேசத்தை நாடுகிறது! அவரது நேசத்தில் களிகூர்ந்து, நமது நேசத்தை வெளிப்படுத்துவதுதான் தொழுகை. தொழுகையாளன் தேவனுடைய அன்பை தியானித்து, நன்றிக் கண்ணீர் வடிக்கிறான். அவரது நேசத்தை மனம் குளிர வருணிக்கிறான். தனது நேசரை வாயாரப் புகழுகிறான். மனமாரப் போற்றுகிறான். அவரும், மனம் மிக மகிழ்கின்றார். தம்மைத் தொழுது கொள்பவனை அன்போடு அணைக்கின்றார். அப்பொழுது அவரது சமுக உணர்வு விருந்து சாலைபோல் மாறி இன்பம் பயக்கிறது. "ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக் கொண்டு வந்தார், நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம், திராட்ச ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம், உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள்".

ஆராதனை வேளையில் அவரது பக்தன், "என்னை இழுத்துக் கொள்ளும்" என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறான். "இன்னும் கிட்ட, கிட்ட, சேர்த்துக் கொள்ளுமே" என்று அன்பு பொங்கப் பாடுகிறான். அன்புக் குரல் கேட்கும் நேசரும் "மனுஷரைக் கட்டி இழுக்கிற தமது அன்பின் கயிறுகளால்" அவனை இழுத்துக் கொள்ளுகிறார். அவரது சமுக உணர்வில் மூழ்கித் திளைப்பதுதான் ஆராதனை. கிறிஸ்துவை உயர்த்திப் பாடும்போதும், போற்றும் போதும், அவர் தமது ஆவியானவர் மூலம் நம்மை தன்னிடத்தில் இழுத்துக் கொள்ளுகிறார். இத்தகு ஈர்ப்பு விசையை உணராமல் நெடு நேரம் நேசரைத் தொழுது

கொள்ள முடியாது. பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் இயேசுவிடம் நெருங்கி வர முடியாது. "இரட்சிப்பில் கிறிஸ்துவிடம் இழுக்கப்படும் விசுவாசி, தொழுகையில் இன்னும் நெருக்கமாய்ப் பிணைக்கப் படுகிறான்."

"திரியேக தேவனிடம் நம்மைக் கிட்டிச் சேர்க்கும் ஈர்ப்பு சக்திதான் தொழுகை", என்றும் கூறலாம்! அப்படி அவரிடம் ஈர்க்கப்படும்போது, நம்மை அறியாத ஒரு பேரின்ப உணர்ச்சி நம்மை புல்லரிக்கச் செய்கிறது. மகிழ்ச்சி வெள்ளத்தில் மெய் மறக்கச் செய்கிறது! இந்த உணர்ச்சியை நாடிப் போவது தொழுகை அல்ல. ஆனால் தேவனை மட்டுமே தேடிப்போகும்போது இத்தகு இன்பம் நம்மை நாடி வந்து நிறைக்கிறது. "நாங்கள் உமக்குள் களிகூர்ந்து மகிழுவோம், திராட்சை ரசத்தைப் பார்க்கிலும் உமது நேசத்தை நினைப்போம்", என்று நமது ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தும் அவர் சமுகத்தில் பாடி மகிழும். "அவரது நேசத்தால் நிறைந்தவன் ஒருவித தெய்வீக மயக்கத்தால் நாள் முழுவதும் திளைத்திருப்பான்" என்று A.W.Tozer எனும் பக்தர் அழுத்தம் திருத்தமாய்க் கூறுகிறார்.

தேவன் மேலுள்ள நேசமும் பாசமும் பொங்கி வழியாத தொழுகை, ஒருக்காலும் தொழுகை ஆகாது! **தேவனைத் தொழுதுகொள்பவனின் உள்ளத்தைப் பிழிந்தெடுத்தால் நேசம் எனும் தீஞ்சாறு வழிந்தோடும்.** இந்த நேசத்தை நம்மில் ஊற்றெடுக்கச் செய்பவர் பரிசுத்த ஆவியானவர்! இயேசுவின் மேலுள்ள இந்த நேசம் தணியாதிருக்கச் செய்வதுதான் தொழுகை! இந்த நேசம்தான், ஆத்தும நேசரை ஆராதிக்க ஆரம்பிக்கிறது. தேவன் நம்மேல் வைத்த அன்பு எந்நாளும், எத்தகு சூழலிலும் குறைவதே இல்லை. அவர் நம்மேல் வைத்த ஆதி அன்பை இழப்பதே இல்லை. அவர் எப்போதும் புது மணவாளனைப் போல் நம்மீது அன்பு காட்டுவார். **"மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல, உன் தேவன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார்."** (ஏசா.62:5) ஆம், அவரது அன்பும், மகிழ்ச்சியும் எந்நாளும் புத்தம் புது பொலிவுடன் விளங்கும். இந்த அன்புக்கு, பதில் அன்பு செய்வதுதான் தொழுகை! "சகல பரிசுத்தவான்களோடும்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த தெய்வீக அன்பை அறிந்து, அதைப் போற்றிப் புகழுவதுதான் தொழுகை!" இயேசுவின் கிருபையையும், பிதாவின் பேரன்பையும், ஆவியானவரின் உறவையும் தியானித்துப் புகழுவதுதான் தொழுகை! இப்படித் தேவனை தொழுது கொள்ளும் பொழுது பிரமிப்பும், ஆச்சரியமும் நம்மை நிறைக்கும். ஆம் தேவனை வியந்து போற்றுவது தொழுகை.

வியப்பும் பிரமிப்பும்

தேவனின் மகத்துவத்தையும், மகிமையையும் தியானிக்கும்போது நமது உள்ளம் வியப்படைந்து, விவரிக்கத் துவங்குவதுதான் தொழுகை! ஆம், **உண்மைத் தொழுகை நேசத்தால் நிறைந்தது மட்டுமல்ல, ஆச்சரியத்தாலும், பிரமிப்பாலும் நிரம்பியிருக்கும்.**

ஒப்புயர்வற்ற தேவனின் ஞானத்தையும், வல்லமையையும், பாசத்தையும் தியானிக்கும்போது, மனித உள்ளங்கள் **பிரமிப்படைவது** இயற்கைதான். வேதாகம பக்தர்கள் இத்தகு வியப்பினால் நிறைந்து பாடின பாடல்களும், போற்றின புகழும் எண்ணிலடங்காதவை! ஆம், நமது தேவன் அதிசயமானவர்! மனித மூளைக்கு எட்டாதவைகளைச் செய்யும் மகத்துவமானவர்!

ஒருநாள் கிறிஸ்து ஆவிக்குரிய போராட்டத்தைக் குறித்தும், அசுத்த ஆவிகளின் ஆக்கிரமிப்பைக் குறித்தும் ஆழமான ரகசியங்களைப் பேசிக்கொண்டிருந்தார். "அவர் இவைகளைச் சொல்லுகையில் ஜனக் கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரீ அவரை நோக்கி, உம்மைச் சுமந்த கர்ப்பமும், நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள்." ஒரு ஸ்திரீ இப்படி சத்தமிட்டு ஜனக்கூட்டத்தின் முன் கூறுவது அந்நாட்டுப் பண்பாடல்ல! கலாச்சாரமும் அல்ல. ஆனால் இவளோ எல்லாவற்றையும் மறந்து இப்படிக் கூச்சலிடக் காரணம் அவளது பிரமைதான். இயேசுவின் வாயிலிருந்து பொழியப்பட்ட அருள் சொற்களும், அவரது வல்லமைச் செயல்களும், அவரது அற்புத கிரியைகளும் அவளைத் திக்கு முக்காடச் செய்தது. அவளுக்கு மிஞ்சின ஆச்சரியத்தால் அத்தனைபேர் நடுவில் தன்னை மறந்தாள். தன் நிலை துறந்தாள். அவருக்கும், அவரைப் பெற்றவளுக்கும் பெருஞ்சத்தமிட்டுப் புகழாரம் சூட்டினாள்! ஆம், கிறிஸ்துவின் ஞானத்தையும் வல்லமையையும் தியானிக்கும் நெஞ்சங்கள் இத்தகு வியப்பினால் உலகத்தை மறப்பதும், உன்னதரை நினைப்பதும், ஓயாமல் அவரைப் போற்றிப் புகழுவதும்தான் ஆராதனை! **தேவனை வியக்கும் வியப்பு ஆராதனையில் காணப்படும் ஒரு அம்சம். வியக்கும் உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பும் பாராட்டுகள்தான் உண்மையான ஆராதனை.** தேவனுடைய ஒவ்வொரு குணாதிசயங்களையும் தியானித்துப் பாருங்கள். கட்டாயம் மனதை ஆச்சரியம் கவ்விப் பிடிக்கும். இந்த ஆச்சரியம்தான் ஆராதனையாய் பெருக்கெடுத்து ஓடி வரும்.

சேபா ராணி

பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்று ஆராதனையின் மேன்மையினை அழகாக சித்தரிக்கின்றது. சாலொமோனின் ஞானத்தைக் கேட்கவும், சோதிக்கவும் சேபா ராஜஸ்திரீ வெகு

தொலைவிலிருந்து மிகுந்த பரிவாரத்தோடும், நூற்றிருபது தாலந்து பொன்னோடும், மிகுதியான கந்த வர்க்கங்களோடும், இரத்தினங்களோடும் அவனிடம் வந்தாள். சாலொமோன் அவளது எல்லா விடுகதைகளையும் ஞானமாய் விடுவித்தான். "அவளுக்கு விடுவிக்கக் கூடாதபடிக்கு ராஜாவுக்கு ஒன்றாகிலும் மறைபொருளாயிருக்கவில்லை". ராஜ ஸ்திரீ அவனது ஞானத்தைக் கண்டு ஆச்சரியத்தால் பிரமை அடைந்தாள். **"சாலொமோனுடைய சகல ஞானத்தையும் அவன் கட்டின அரமனையையும், அவன் பந்தியின் போஜன பதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடை மண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு, ராஜாவை நோக்கி - - - - நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள், எப்போதும் உமக்கு முன்பாக நின்று உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள். உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வைக்க, உம்மேல் பிரியம் கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார் என்றாள்".**
(1 இரா.10:4-9)

இது ஆராதனையின் அற்புதமான சித்திரம்! சேபாராணி சாலொமோனிடம் எதையும் எதிர்பார்த்து வரவில்லை. அவனது ஞானத்தைக் கேட்கவும், செல்வத்தைக் காணவும் வந்தாள். வந்தவள் அவனிடம் மனம் திறந்து பேசி அவனுடைய ஞானத்தைக் கண்டறிந்தாள். அவனது ஞானம் எல்லாவற்றிலும் விளங்குவதை துல்லியமாய் ஆராய்ந்து பார்த்தாள். அரமனையிலும், உணவு வகையிலும், ஊழியரின் வீடுகளிலும், வரிசைக் கிரமத்திலும், உடையலங்காரத்திலும், குடிக்கும் பாத்திரங்களிலும், நடை மண்டபத்திலும் ஞானத்தைக் கண்டாள். ஆச்சரியத்தால் அதிசயித்துப் போனாள். சாலொமோனின் சேவகர், ராஜ ஸ்திரீயாகிய தன்னிலும் பாக்கியவான்கள் என்று கண்டாள். இதயப்பூர்வமாய் அவனையும், அவன் ஊழியரையும் வாழ்த்தி, அவனது தேவனையும் ஸ்தோத்திரித்தாள். அம்மட்டோடு நில்லாமல் ஏராளமான பொன்னையும், சுந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் வாரி வழங்கினாள்.

நமது தேவன் **சாலொமோனிலும் பெரியவரல்லவா?** சேபா ராணி சாலொமோனின் ஞானத்தைக் கேட்டு, ஆச்சரியத்தால் பிரமை

கொண்டாளானால், நாம் எத்தனை அதிகமாய் ஆச்சரியத்தால் நிரம்பி அவர் மேல் பிரமை கொள்ள வேண்டும்? அவனது அரமனையே அவளை வியப்படையச் செய்யுமானால், நமது தேவன் வானாதி வானங்களையும், பூமியையும், சூரிய சந்திர நட்சத்திரங்களையும், சமுத்திரங்களையும் இத்தனை பெரியதாய், மகிமையாய் உருவாக்கினாரே! அதைக் கண்டு நாம் எத்தனை அதிகமாய் ஆச்சரியத்தால் ஆர்ப்பரிக்க வேண்டும்?

ஊழியக்காரரின் வீடுகளும், வரிசையும், ஆடைகளும் அவளை ஆச்சரியத்தால் மூழ்கடிக்குமானால், நரிகளுக்குக் குழிகளையும், பறவைகளுக்குக் கூடுகளையும், முயல்களுக்கும் புறாக்களுக்கும் கன்மலை வெடிப்புகளையும், மிருகங்களுக்குக் குகைகளையும் உருவாக்கின ஒப்பற்ற பரம்பொருளைப் பார்த்து பரவசம் அடையாமல் இருக்கமுடியுமா? சேபாராணி போஜன பதார்த்தங்களைக் கண்டே பிரமை கொண்டாளென்றால் மலர்களுக்கு மணத்தைக் கொடுத்து, பல வண்ணங்களை வகை வகையாகத் தீட்டி, உண்பதற்குக் கனி வகைகளையும், தானியங்களையும் உருவாக்கி, அத்தனையையும் நேர்த்தியாகப் படைத்த நிமலனைக் கண்டு பிரமிப்பினால் பூரித்து, மகிழாமல் இருப்பது எப்படி? அவள், வஸ்திரங்களைக் கண்டே வாழ்த்துவாளானால், நம் அனைவருக்கும் வகை வகையாய் உடுத்துவிக்கும் உன்னதரைக் கண்டு வாழ்த்தாமல் இருக்க முடியுமா? பாத்திரங்களைக் கண்டே பாராட்டுவாளானால், அப்பாத்திரங்களுக்கு மூலப் பொருளான பல்வேறு உலோகங்களைப் படைத்த பராபரனைப் பார்த்து பாராட்டாதிருப்பது எப்படி? சாலொமோனின் பிஞ்சு மூளையிலேயே இத்தனை ஞானம் விளங்குமானால், உலகின் சர்வ ஞானிகளுக்கும், ஞானத்தையும் அறிவையும் கொடுத்த சர்வஞான சக்கரவர்த்தியின் ஒப்பில்லா ஞானத்திற்கு முன், எதிர் நிற்கும் பெரு ஞானம் ஏது? சேபா நாட்டு ராணி கொடுத்ததைப் பார்க்கிலும் அதிகமாய் சாலொமோனே கொடுப்பானானால், சாலொமோனிலும் பெரியவராம் நம் தேவன் தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்களுக்கு வேண்டும் மட்டும் அள்ளித் தருவது அதிக நிச்சயமல்லவா? தம்மைத் தொழுது கொள்ளும் அனைவருக்கும் அவர் ஐசுவரிய சம்பன்னரல்லவா? சாலொமோனின் ஞானத்தைக் கண்டு, சாலொமோனின் தேவனுக்கு அந்நியப் பெண்ணாம் சேபாராணி ஆராதனை செய்தாளென்றால் அனந்த ஞானத்திற்கும் அதிபதியாம் ஆண்டவனை ஆராதிக்காமல் நாம் இருக்க முடியுமா? ஆம், "அவருடைய படைப்புக்களைக் கண்டும், பரம ஞானத்தைக் கண்டும், அதி பராக்கிரமத்தைக் கண்டும், அற்புதத் திறனைக் கண்டும் அதிசயித்து, வியப்பினால் வெடித்துக் கிளம்புவதுதான் ஆராதனை"!

தேவனுக்குக் கொடுப்பதுதான் தொழுகை

ஜெபத்தின் மூலம் தேவனிடமிருந்து நாம் பெறுகிறோம். ஆனால் துதியின் மூலம் நாம் தேவனுக்குக் கொடுக்கிறோம். நேசிக்காமல் கொடுக்கலாம். ஆனால் கொடுக்காமல் நேசிக்க முடியாது என்பது முதுமொழி ஆம், தேவனை நேசிப்பவன் எதையும் அவருக்குக் கொடுத்து, எப்படியும் தேவனைப் பிரியப்படுத்த கருத்தாயிருப்பான். தேவனுக்கு நம்மைக் கொடுப்பதே தொழுகைதான்! நமது காணிக்கைகளைக் கொடுப்பதும் ஒருவித தொழுகைதான். தேவனுக்கு நமது துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் செலுத்துவதுதான் பிரதான தொழுகை. அவருக்கு துதிகளை நாம் கொடுக்க வேண்டும். "கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டு வந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள் பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்," என்று சங்கீதக்காரன் பறைசாற்றுவான்.

வெளிப்படுத்தின விசேஷத்திலும் நான்கு ஜீவன்கள் "மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது", இருபத்து நான்கு மூப்பர்களும் "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்" என்று துதித்தார்கள்.

எல்லா மகிமையும், கனமும், வல்லமையும் எந்நாளும் தேவனுடையதுதான். அவர் தம் மகிமையை வேறொருவருக்கும் கொடுப்பதில்லை என்பது மெய்தான். ஆனால் அவரைத் தொழுது கொள்ளுபவர், தேவனே, ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே என்று போற்றும்போது, தேவன் அதையே அவர்கள் கையில் வாங்குவதைப்போல் பாவித்து, மகிழ்ச்சியடைகிறார். "என் சந்நிதியில் வெறுங்கையாய் வர வேண்டாம்" என்று தேவன் கட்டளையிட்டார். நிலத்தின் கனிகளையோ, பலியிடும் மிருகங்களையோ கொண்டு செல்லாமல் அவர்கள் தேவ சமுகம் சென்றதில்லை. இன்றும் அவரது சமுகத்தில் நாம் ஸ்தோத்திர பலிகளோடு செல்லலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று ஒவ்வொரு முறை நாம் கூறும்போதும், ஒவ்வொரு காளையை கர்த்தருக்குப் பலியிடுவதைப் போல கற்பனை செய்து பாருங்கள். எத்தனை ஏழைகளாய் இருந்தாலும் நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை தாராளமாய் செலுத்த முடியும். தேவன் எல்லா மிருகங்களின் பலிகளைவிட ஸ்தோத்திர பலிகளில் அதிகப் பிரியமாய் இருக்கிறார். தேவாதி தேவனுக்கு அற்ப மனிதராகிய நாம் கொடுக்கும் ஒன்றே

ஒன்று, துதிகளின் பலிகள்தான்! அவரைத் துதிப்பவன் அவருக்குப் பிரியமானதைக் கொடுக்கிறான்! வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்! துதிப்பதை விட வேறு பாக்கியம்தான் என்ன? தொழுது கொண்ட அனைவரும் தேவனுக்குக் கொடுத்தவர்கள்தான். ஆபிரகாம் தன் அருமை மகன் ஈசாக்கை பலியிட்டு தேவனைத் தொழுது கொள்ள சென்றான். வேதாகம அரசர்கள் ஆயிரமாயிரம் காளைகளைப் பலியிட்டு தொழுது கொண்டனர். பாவியான ஸ்திரீயும், பாசமுள்ள மரியாளும் விலையுயர்ந்த பரிமள தைலத்தை உடைத்து ஊற்றித் தொழுது கொண்டனர். குழந்தை இயேசுவை கும்பிட வந்த சாஸ்திரிகள் பொன்னையும், தூப வர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் காணிக்கைகளாக்கி பணிந்து கொண்டார்கள். நாமோ தாவீதைப் போல நமது துதி ஸ்தோத்திரங்களோடு அவரிடம் அனுதினமும் செல்லலாம். "**தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப் பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்**". (சங்.69:30,31) ஆம், கர்த்தருக்குப் பிரியமானதைக் கொடுப்பதுதான் தொழுகை.

தேவனைக் கொண்டாடுவதும் தொழுகைதான்

நமது தேவன் கொண்டாடப்படத் தக்கவர். யாரால்? நம்மால்! எப்போது? எந்நாளும்! ஏன்? வாழ்க்கையில் வெற்றி முரசம் கொட்ட! ஆம், தேவனைக் கொண்டாடுகிறவன் வாழ்வில் திண்டாட்டம் இல்லை. திண்டாடுகிறவன் வாழ்வில் கொண்டாட்டம் இல்லை. இதை மறவாமல் மனதில் கொள்ளுங்கள். அவரது மகிமை பிரஸ்தாபங்களை போற்றிப் புகழ்வது, அவரது வெற்றியைக் கொண்டாடி விழா எடுப்பது, அவரது திருநாமத்தைப் பாடிப் பரவசப்படுவது, தேவனுக்குப் பண்டிகை கொண்டாடி மகிழ்வது எல்லாம் தொழுகையே! பண்டிகை நாட்களைத் தேவன் நியமித்ததின் நோக்கமும் தொழுகைதான். பண்டிகை நாட்களில் மக்கள் யாதொரு **தொழிலும்** செய்யக் கூடாது, ஆனால் தேவனைத் **தொழுகை** செய்ய வேண்டும். பலிகளையிட்டுக் கர்த்தரைப் பணிந்து கொள்ள வேண்டும். கர்த்தரையும் அவர் அருளிய ஈவுகளையும் நினைத்து களிகூர வேண்டும். ஆம், **கர்த்தரில் களிகூருவதும் தொழுகைதான்! பண்டிகையைக் கொண்டாடுவதும், தொழுகையும் ஒன்றுதான்** என்பதை மோசேயின் மூலம் தேவன் வெளிப்படுத்தினார். மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், வனாந்தரத்திலே **எனக்குப் பண்டிகை கொண்டாடும்படி** என் ஜனங்களைப் போகவிட வேண்டும் என்று சொல்லுகிறார் என்றார்கள். மீண்டும் கர்த்தர் மோசேயை நோக்கி, நீ பார்வோனிடத்தில் போய், "**எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு**" என்று கேள் என்றார்! ஆம், கர்த்தருக்குப்

பண்டிகை கொண்டாடுவதும், கர்த்தருக்கு ஆராதனைச் செய்வதும் ஒன்றுதான். கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடுபவர் கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவரைப் போற்றுவார்கள். பழைய ஏற்பாட்டில் ஏழு பண்டிகைகளை ஆசரிக்கும்படி தேவன் திட்டமாய் கட்டளையிட்டார். இந்தப் பண்டிகைகளின் நோக்கம் தேவனைத் தொழுது கொள்வதும், அவரது நன்மையான ஈவுகளை நினைத்து நன்றி சொல்வதும்தான். தேவ மக்களை தேவனில் களிகூர செய்வதுதான் இந்நாட்களின் சிறப்பு! இந்நாட்களில் சபையாய் கூடிவந்து அதைக் கர்த்தருக்குப் பரிசுத்த நாட்களாக ஆசரிப்பார்கள். இவைகளைக் கர்த்தருடைய பண்டிகையென்றும், கர்த்தருக்குப் பண்டிகையென்றும் வேதம் கூறுகிறது. **இப்பண்டிகைகளின் கவர்ச்சி மையமும் கதாநாயகனும் கர்த்தர் ஒருவரே!**

ஏழாம் நாள் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாள், அது வாரம்தோறும் ஆசரிக்கும் ஆராதனை நாள். இதை இன்றும் கூட கர்த்தருடைய ஓய்வுநாள் என்றே நாம் கொண்டாடுகிறோம். இதை நமது முன்னோர்கள் **ஆராதனை** நாள் என்று அழைத்தார்கள்.

அடுத்த பண்டிகை பஸ்கா பண்டிகை! நமக்காக பஸ்கா ஆட்டுக்குட்டியாய் பலியான கர்த்தரின் மீட்பைக் கொண்டாடுதல். சிலுவை நாயகனைக் கொண்டாடும் பண்டிகை இது! சிலுவையில் கிறிஸ்து செய்த எல்லாவற்றையும் நினைத்து, தியானித்து, அவரது வெற்றியைக் கொண்டாடுவதும் தொழுகைதான்! கிறிஸ்து சிலுவையில் பாவத்தை, நோய்களை, சாத்தானை, சாபங்களை எப்படி வென்றார் என்று தியானித்து கொண்டாடுவதும் தொழுகை! தன் சொந்தக் குமாரனென்றும் பாராமல் நமக்காக அவரைத் தந்தருளின பிதாவின் அன்பைக் கொண்டாடுவது, அவரது தியாகத்தைப் புகழ்வது, அவர் சிலுவையில் நமக்கருளின வெற்றிகளைக் கொண்டாடுவது இவையாவும் தொழுகையே! ஆம், தேவனுக்கு **வெற்றி விழா காண்பதுதான் தொழுகை!** உயிரற்ற தெய்வங்களுக்கு அஞ்ஞானிகள் பண்டிகை கொண்டாடி மகிழுகின்றார்கள். ஆனால் சதாகாலமும் உயிரோடிருக்கிற இரட்சகருக்கு பண்டிகை கொண்டாடாமல் இருப்பது எப்படி? அவருடைய ஜனங்கள் கொண்டாடும் பண்டிகைதான் தொழுகை! அன்றைய பெலிஸ்தரின் பிரபுக்கள், தங்கள் தாகோன் தெய்வம்தான் சிம்சோனை நம் கைகளில் கொடுத்தது என்று பெருமிதம் கொண்டார்கள். அந்தத் தாகோனுக்கு பலியிட்டு பண்டிகை கொண்டாடினார்கள். நாமோ நமது பகைஞனாம் சாத்தானை நமது கைகளில் கொடுத்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, அவைகளை வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தவருக்கு ஏராளமான

ஸ்தோத்திர பலிகளை தாராளமாய் இட்டு ஆரவாரத்தோடும் அகமகிழ்வோடும் அவருக்குப் பண்டிகை கொண்டாடுகிறோம்.

மூன்றாவது பண்டிகை **புளிப்பில்லாத அப்பப் பண்டிகை.** ஏழுநாளும் புளிப்பில்லாத அப்பங்களைப் புசித்து, ஏழு நாளும் கர்த்தருக்குத் தகன பலியிடவேண்டும். நான் தேவனுடையவன், உலகத்தின் அருவருப்புகளுக்கும், மாம்சத்தின் போராட்டங்களுக்கும் அப்பாற்பட்டவன், தேவனுக்காக பிரிந்து வாழ்பவன் என்பதை அறிக்கையிடும் ஆராதனை இது. ஆம், ஆராதனை என்பது சில வேளைகளில் மட்டும் செய்யப்படும் செயல் அல்ல, அதுவே வாழ்க்கை முறை! **வாயில் சொல்லும் துதிகள் மட்டும் ஆராதனை அல்ல, வாழ்க்கை முழுவதும் தேவனுக்கு நறுமணமாய் மாறுவதுதான் உண்மை ஆராதனை!** துர்க்குணம், பொல்லாப்பு எனும் புளித்தமாவை அகற்றி, துப்புறவு, உண்மை எனும் புளிப்பில்லாத வாழ்க்கையை வாழ்ந்து, தேவ சமுகத்தில் தகன பலியாய் எரிவதுதான் **மேன்மையான ஆராதனை!** (1கொரி. 5:6-8) தனக்கென்று வாழாமல், ஆவி, ஆத்துமா சரீரத்தை தேவனுக்கு பிரியமான ஜீவபலியாகப் படைத்து வாழ்வதுதான் **புத்தியுள்ள ஆராதனை!** (ரோம.12:1) தான் நேசிக்கும் எவரையும், எவைகளையும் அவரது பலிபீடத்தில் வைத்து அவரையே வாழ்வின் மையமாய் மதித்து வாழும் வாழ்க்கையே ஒப்பற்ற ஆராதனை! வாரம் முழுவதும் மாம்சமும், மனதும் விரும்பினபடி வாழ்ந்து, ஆராதனை நாளில் வாய் திறந்து துதிப்பது ஆராதனை அல்ல! **ஆராதனை என்பது வாழ்க்கை நெறி!** தேவனுக்கு புளிப்பில்லாத வாழ்க்கை வாழ்வதும் ஆராதனைதான். அந்த வாழ்க்கையிலிருந்து வரும் துதிகள் தேவன் விரும்பும் ஆராதனையாகின்றது. கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கையை வாழும்போது அவரைப் பலவிதங்களில் துதித்துப் பாட ஏவப்படுகிறோம். இந்த எழுச்சியே ஆராதனை! அப்பழுக்கற்ற தொழுகை! ஆண்டவருக்கு உகந்த ஸ்தோத்திரப்பலி.

இப்படி எல்லாப் பண்டிகைகளுமே ஆராதனைக்கு நம்மை அறைகூவி அழைக்கின்றது. இவைகளை எழுதப் பக்கங்கள் போதாது. ஆராதனையின் அர்த்தங்கள் ஆயிரம். அவைகளில் சிலவற்றை மட்டுமே இதுகாறும் சிந்தித்தோம்.

3. தொழுகையா? தொண்டா?

"கர்த்தருக்காக எழும்பி வேலை செய்ய வேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டதே அவருக்குச் சேவை செய்யத்தான். ஆத்துமாக்கள் அழிகிறதே! அவர்களுக்காக என்ன செய்கிறாய்?" என்பது போன்ற அறைகூவல்கள் எங்கும் தொனிக்கும் காலமிது. "ஒரே ஒரு வாழ்க்கை, அது சீக்கிரமாய் கடந்து செல்கிறது. கிறிஸ்துவுக்காக நீ செய்வது மட்டுமே கடைசிவரை நிலை நிற்கும்." என்பது போன்ற உணர்ச்சிமிகு உரைகள் மக்களை உந்தி எழுப்புகிறது. பலர் இரவு பகலாய் அவருக்காக உழைத்து எரிந்து கொண்டிருக்கிறார்கள். இவைகள் அனைத்தும் மிகமிக நல்லதுதான். ஆனால் வேதம் இத்தகு ஊழியத்துக்கு முதலிடம் தரவில்லை. இப்படி நான் சொல்வது உங்களுக்கு அதிர்ச்சியாய் இருக்கலாம். ஆனால் திறந்த மனதோடு இவ்வத்தியாயத்தை திறந்து தியானியுங்கள்.

தேவன் நம்மிடம் முதலாவது எதிர்பார்ப்பது தொழுகையும் துதியும்தான். "தொழுகை முன்னே, தொழில் பின்னே" என்பதுதான் வேதம் காட்டும் நெறி. **அவருக்குச்** செய்யும் **ஊழியம்** வேறு, **அவருக்காகச்** செய்யும் **ஊழியம்** வேறு! இந்த வித்தியாசத்தை விளங்கிக்கொள்ளாமல் நாம் படுகிற பிரயாசம் விருதா? இறுதிநாளில் அப்படிப்பட்ட பிரயாசம் தேவனுடைய பாராட்டையும் பரிசையும் பெறாது. **கர்த்தர் நம்மிடத்தில் முதலாவது உறவை நாடுகிறார். நாமோ அதைச் சிந்திக்காமல் ஊழியத்திற்கு ஓடுகின்றோம்.** ஆத்தும மணவாளனாம் இயேசு தமது மணவாட்டிச் சபையின் கனிவையும், பாசத்தையுமே முதலாவது காண விரும்புகின்றார். ஆனால் நாமோ செய்ய வேண்டிய கடமையை மட்டுமே செய்து காலம் கழித்துவிடுகின்றோம்.

உறவு நாடும் தகப்பன்

உண்மைத் தகப்பன் பிள்ளைகளிடத்து உறவையும், பாசத்தையும் விரும்புகின்றான். மாறாக, அவர்களது தொண்டு மட்டும் போதும் என்று திருப்தியடைய மாட்டான். கிறிஸ்து காட்டின எடுத்துக்காட்டை எண்ணிப் பாருங்கள். விட்டுச்சென்ற இளைய மகன் வீட்டுக்கு வந்தான். தகப்பன் உள்ளம் கனிந்தது, களிகூர்ந்தது. அந்த மகிழ்ச்சிப்பெருவெள்ளத்தில் தனது மூத்த மகனும் பங்குகொள்ள வேண்டுமென்று அவன் உள்ளம் துடித்தது. ஆனால் மூத்த மகனோ உள்ளே போக மனமின்றி வெளியே நின்றான். "**இத்தனை வருஷகாலமாய் நான் "உமக்கு ஊழியம்" செய்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை**" (லூக்.15:28-29) என்று அங்கலாய்க்கின்றான். நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க

வேண்டுமே எனும் தகப்பன் ஏக்கக் குமுறல் அவன் காதுகளுக்கு எட்டவே இல்லை, காரணம் "மூத்த மகன் **ஊழியம் செய்தான் ஆனால் உறவு கொள்ளவில்லை.** இன்று எத்தனையோ தேவ ஊழியர்கள் இப்படித்தான் வாழ்கிறார்கள். உறவுக்கு ஏங்கும் தகப்பனோடு, நெருங்கிப் பழக நேரம் எடுக்காமல் இத்தனை வருஷமாய் ஊழியம் செய்தேன் என்று வீண் பெருமை பேசுகிறார்கள். சிநேகிதரோடுதான் அவர்கள் சந்தோஷமெல்லாம்! அந்தோ! இப்படி தேவாதி தேவனுடைய, "**தந்தை உள்ளத்தைப்**" புண்படுத்தும் ஊழியர் எத்தனை! எத்தனை! அவரோடு அன்பு செலுத்தாமல் நாம் ஊழியம் செய்ய முடியும். ஆனால் ஊழியம் செய்யாமல் அவரிடம் அன்பு செலுத்த முடியாது. **பாசத்தின் மிகுதியால் வரும் பணியைத்தான் பரம தந்தை விரும்புகின்றார்.** தம்மை ஆராதிக்கும் அன்பர்களிடம்தான் அவர் தமது அலுவலை நாடுகின்றார். **தேவனைத் துதியாலும் தொழுகையாலும் மகிழ்ச்சிப் படுத்த மனமற்றவர்கள் ஊழியம் செய்வதில் ஒரு பயனுமில்லை.** அது மனித முயற்சியால் பிறக்கும் இஸ்மவேலின் ஊழியம். தேவனுடைய புன்முறுவல் அத்தகைய ஊழியத்தில் இருக்காது! தேவப் பிரசன்னமும் அங்கு நிரம்பி வழியாது.

வேதம் முழுவதையும் புரட்டிப் பாருங்கள். தேவன் முதலாவது தொழுகையைத்தான் தேடுகின்றார் என்பது தெளிவாய்ப் புலனாகிறது! பாவம் உள்ளே வருமுன்பு ஆதாமின் முதல் கடமை தேவனோடு உறவாடி மகிழுவதுதான். நிலத்தைப் பண்படுத்திக் காப்பது அவனது இரண்டாந்தர பணிதான். ஆனால் தேவனோடுள்ள உறவு முறிந்ததும், வேலை முதலிடம் பிடித்தது. முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிக்கும் சாபத்தைப் பெற்றான். ஆனால் கிறிஸ்து மீண்டும் நம்மை அந்தச் சாபத்திலிருந்து மீட்டெடுத்தார். ஆராதனைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே அவர் அப்படிச் செய்தார். அவரோடு ஐக்கியமாயிருக்கவே நம்மை அவர் அழைத்தார். தேவனைப் போற்றிப் பணிவதுதான் ஒரு விசுவாசியின் தலையாய கடமை.

பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களில், லேவிக் கோத்திரத்தை தேவன் தனக்காகப் பிரித்தெடுத்தார். அவர்களில் ஆசாரியப்பணிக்கு ஆரோனின் குமாரர்களை மிகச் சிறப்பாகத் தெரிந்துகொண்டார். இது குறித்து தேவன் மோசேக்கு சொல்வதைக் கேளுங்கள். "**உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு நீ ஆரோனையும் . . . . ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உன்னிடத்தில் சேர்த்துக்கொள்வாயாக.**" (யாத். *28:1*) ஆரோனும் குமாரரும் மக்களுக்கு ஊழியம் செய்யும்படி பிரித்தெடுக்கப்படவில்லை. "**எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு**" என்று தேவன் அழுத்தம் திருத்தமாய் அறிவிக்கிறார். தேவ சமுகத்தில் நின்று அவருக்குத் தூபம் காட்டவும், துதி செலுத்தவும்

அழைக்கப்பட்டவர்கள் அவர்கள். அவர்களுக்கு தேவனே சுதந்தரம்! தேவனுடைய திருப்திதான் அவர்களது பிரதான நோக்கம். மக்களது தேவைகளைவிட மாமன்னரின் சேவைதான் அவர்களுக்கு முக்கியம். தேவனுக்கு அல்லும் பகலும் ஆராதனை செய்வதுதான் அவர்கள் அழைப்பு. இவர்கள் உலகத்தாரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலரிலிருந்து, மீண்டும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். தேவனுடைய ஊழிய அழைப்பைப் பெற்றவர்கள். இவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் ஆராதனையை அதி முக்கியத் தொழிலாகக் கொள்ள வேண்டும். இது கிடைத்தற்கரிய பாக்கியம்.

புதிய ஏற்பாடு, விசுவாசிகளை **"ஆசாரியர்கள்"** என அழைக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு விசுவாசியும் ஒரு **ஆராதனைக்காரன்** என்பதே பொருந்தும். புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளைக் குறித்து குறிப்பிடும்போது **"தேவனை வணங்குகிறவளுமாகிய, லீதியாள்"** என்றும் **"தேவனை வணங்குகிறவனாகிய, யுஸ்து"** என்றும் பேசுகிறது. (அப். 16 : 14 ; 18 : 7) புதிய ஏற்பாடு விசுவாசிகளுக்கு சிறப்பாக வழங்கும் பெயர், **"தேவனை வணங்குவோர்"** என்பதுதான்.

நம்மைக் கர்த்தர் உலகத்திலிருந்து வேறுபிரித்து அழைத்ததின் நோக்கமே அவரை ஆராதிக்கும் ஆசாரியர்களாக்கத்தான். அப்போஸ்தலனாகிய பேதுரு **"தேவனுக்குப் பிரியமான" ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக கட்டப்பட்டு வருகிறீர்கள்.** (1பேது.2:5) என்று எழுதுகிறான். ஆம், ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கு ஆசாரியர்தான். ஆனாலும் அந்த ஆசாரியரிலிருந்தும் தேவன் ஒரு சிலரை வேறுபடுத்தி விசேஷித்த முழு நேர ஊழியத்திற்கு அழைக்கின்றார். அவர்கள் மற்றவர்களைவிட மிகவும் நெருக்கமாய் தேவனோடு உறவு கொண்டு அவரை ஆராதிக்க வேண்டியவர்கள். அதுதான் அவர்களது அழைப்பின் முதல் நோக்கம்.

கிறிஸ்து தமது அப்போஸ்தலரை முப்பெரும் நோக்கத்தோடு அழைத்தார். ஒவ்வொரு தேவ ஊழியனும் இந்த வரிசைக்கிரமத்தை மாற்றக் கூடாது. இது குறித்து வேதம் விளம்புவதை வினயமாய்க் கவனியுங்கள். "அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, **"அவர்கள் தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கி பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாய் இருக்கவும்,** அவர்களை ஏற்படுத்தினார்". (மாற். 3:14,15) நாம் அவரோடு கூட உறவாடி இருக்கத்தான் முதலாவது அழைத்தார். அப்படி இருக்கும்போது, தேவைக்கேற்ப நம்மை அவர் சுவிசேஷம் சொல்லும்படி அனுப்புவார். அப்படி அனுப்பப்பட்டவர்களுக்கு

வியாதிகளைக் குணமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் தேவன் அதிகாரம் கொடுக்கின்றார். அவரோடு கூட இருந்து, உறவாடி மகிழ்வதுதான் தொழுகையின் உயிர்நாடி! ஆகவே ஆராதிக்கவே முதலாவது அவர் தமது ஊழியர்களைப் பிரித்தெடுக்கின்றார். ஆராதனை செய்பவரைத்தான் ஊழியத்திற்கு அனுப்புகின்றார். அப்படி அனுப்பப்பட்டவர்களிடம் தமது அதிகாரத்தை அளவின்றி அளிக்கின்றார். ஆம், ஆராதனை முன்னே, அவர் அலுவல் பின்னே, ஆராதனை முன்னே, அதிகாரம் பின்னே! இந்த உண்மையை தேவ ஊழியர்கள் தெளிவாக்கிக் கொண்டால் ஊழியத்தில் அளவில்லா அறுவடையை அதிவிரைவில் காண்பார்கள்.

அப்போஸ்தலரின் ஆயத்தம்

அப்போஸ்தலர் நடபடிகளைக் கவனித்துப் பாருங்கள். கிறிஸ்து பரமேறும் முன்பு தமது அப்போஸ்தலர்களை நோக்கி ***"உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்".*** (லூக்.24:49) கடமையைச் செய்ய உடனே செல்லுங்கள் என்று அவர் கட்டளையிடாமல், முதலாவது என் சமுகத்தில் காத்திருங்கள் என்றார். கிறிஸ்து பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு எருசலேமுக்குத் திரும்பி, ***"நாடோறும் தேவ ஆலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்".*** (லூக்.24:53) ஆம், ஆசாரியர்களின் வேலையை அனுதினமும் முறையாய் செய்துகொண்டிருந்தார்கள். ஆராதனையில் திளைத்திருந்த அவர்களைத்தான் அகில உலகிலும் அவரது சேவகராய் அனுப்பி வைத்தார். அவர்களுக்குத் தமது அதிகாரம், வல்லமையை அருட்கொடையாய் அளித்திருந்தார்.

உலக சுவிசேஷத்தைக் குறித்த தேவனுடைய முறைமை இதுதான். ஆராதனையில் துவங்கிய அப்போஸ்தலர் பணி அதி தீவிரமாய் வளர்ந்தது. அவனியில் ஆலமரம் போல் படர்ந்தது. எதிர்ப்புச் சுவர்களைத் தாண்டி, வெகுவிரைவில் எருசலேமை அவருடைய போதகத்தால் நிறைத்தது. சீஷர்கள் தொகை ஆயிரமாயிரமாய் பெருகிவிடவே ஏழுபேர் பந்தி விசாரணைக்கு அமர்த்தப்பட்டார்கள். எருசலேமிலும், சமாரியாவிலும், யூதேயாவிலும் அநேக சபைகள் எழும்பின! ஆம், தேவனுக்கு ஆராதனை செய்வதை அனுதின கடமையாக்கிக் கொண்டவர்கள், அசாதாரண வல்லமையோடு அவரது ஊழியத்தில் பிரகாசிப்பார்கள். ஆராதிக்கிறவனைத்தான் அவரது அறுவடைக்கு அனுப்புகின்றார். தேவனோடு உறவாடாமல், ஆராதனையில் அவரை மகிழ்விக்காமல், பணிக்களத்தில் நுழைவது பரிதாபம்! அவர்கள் அனுப்பப் பட்டவர்களல்ல, தானாய் பணிக்களம் நுழைந்துவிட்டவர்கள்.

இத்தகையத்துணிவு பேராபத்தை விளைவிக்கும். அவர்களது ஊழியம்; எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், பாடுகள் வரும்போது, இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துவிடும். தேவனை ஆராதிக்கத் தவறுகிறவர்களின் ஊழியத்தில் கனிகள் அதிகம் காணப்படாது. பல ஆண்டுகள் ஊழியம் செய்தும் பலனேதும் இராது. சில ஆத்துமாக்களைப் பிடித்துவிட்டோம் என்ற வெற்று கவுரவத்தில் வீணாக வாழ்வார்கள்.

எருசலேமில்

தேவனைத் துதிக்கப் பழகிய ஊழியமும், சபையும் நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும். ஆதிச்சபையின் வளர்ச்சிக்கு அதுதான் முதல் காரணம். அவர்கள் "**தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்**". (அப்.2:47) இங்கே வரும் கிரமமான தேவ ஒழுங்கைக் கவனியுங்கள். தேவனைத் துதித்து, ஜனங்களின் தயவைப் பெற்றார்கள். அனுதினமும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டது. துதியினால் தோற்றுவிக்கப்பட்ட சபை வளர்ச்சி இது!

அப்போஸ்தலர்கள் தேவனைத் துதித்துப் போற்றி தேவ வல்லமையோடு, ஆயிரங்களை அவரிடம் கொண்டு வந்தார்கள். ஒரே நாளில் ஆயிரங்களைக் கொண்ட சபை பிறந்தது. பிறந்த சபையும் தேவனைத் துதிக்கப் பழகிவிட்டது. ஆம், தாயைப் போலப் பிள்ளை என்பது போலத்தான் இதுவும்; **அப்போஸ்தலரின் ஆராதனை ஆவி, அவர்கள் பெற்றெடுத்த சபையையும் பிடித்துக்கொண்டது! ஆராதனை தொற்றிப் பரவும் தன்மையுடையது!** தேவ ஊழியர்கள் ஆராதனை ஆவியை உலகத்தில் அவிழ்த்துவிட வேண்டியவர்கள். தேவ ஊழியர்கள் எப்படியோ, அப்படித்தான் சபையும். தேவ ஊழியர்கள் துதிக்கப் பழகிவிட்டால் திருச்சபைகளும் துதிக்கும் சபையாய் உயர்ந்துவிடும் என்பது நிச்சயம்.

ஆதிச்சபை தேவனைத் துதித்தது! தேவனாகிய கர்த்தர் அநுதினமும் மக்களை இரட்சித்து, சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார். ஆத்துமாக்களை இரட்சிப்பவர் தேவன்! அவருக்கு ஆராதனை செய்வது நாம்! **நாம் தேவனைத் துதிக்கவும், அவருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவும் முதலிடம் தருவோமானால், திரள் கூட்ட மக்களை திரட்டித்தரும் வேலையை தேவன் எடுத்துக்கொள்ளுவார். வீட்டு சந்திப்புக்கு முன்பாக தேவ சந்திப்புக்கு நேரம் கொடுங்கள்.**

அருமை ஊழிய நண்பரே, உங்கள் அயராத ஊழியத்தைவிட, ஆராதனை செய்ய அதிக நேரம் எடுங்கள். நீங்கள் அவரோடு இருக்கவும், அவருக்கு உகந்த ஆசாரிய ஊழியம் செய்யவும் அழைக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். நீங்கள் அவரோடு வாழும்போது, அவர் உங்களோடு கிரியை நடப்பித்து,

அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்துவார். அனுதினமும் ஆத்துமாக்களை அள்ளித் தருவார். இரட்சிப்பு கர்த்தருடையது. உங்களது ஊழியத்தில் தேவப் பிரசன்னம் இருப்பதை மக்கள் காண்பார்கள். அப்போது உங்களைத் தேடி வந்து கனம் பண்ணுவார்கள். ஆராதிக்கும் சபைகளை எழுப்புவீர்கள். மக்களின் தயவும், மட்டில்லாத ஆத்துமாக்களும் தாராளமாய்க் கிடைக்கும்! சபைவளர்ச்சிக்கு, "ஆராதனை" அன்றி வேறு குறுக்கு வழியே இல்லை.

அந்தியோகியாவில்

அப்போஸ்தல உபதேசத்தில், ஆராதனை அபரிமிதமாய் இருந்தது. இதனால்தான் அங்கு ஆராதிக்கும் பழக்கம் வேர்பற்றிச் செழித்தது. சபை ஆழமான ஆசீர்வாதங்களினூடே கடந்து சென்றது. எருசலேமின் சபைத் தலைவரும், மக்களும் மட்டுமல்ல, அந்தியோகியா சபையும் ஆராதித்த சபைதான். அந்தியோகியா சபைத் தலைவர்களும் ஆராதனை வீரர்கள்தான். அந்த ஆராதனை செய்தவர்களிடமிருந்துதான் மிஷனரிப் பணி முதலாவது மலர்ந்தது. அதைக்குறித்து வேதம் சொல்வதைக் கவனியுங்கள்.

"அந்தியோகியாப் பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது : பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்". (அப்13:1-4)

அந்தியோகியா சபைகளில் தீர்க்கதரிசிகளும், போதகர்களும் கர்த்தருக்கு ஆராதனை செய்வதற்காகவே உபவாசித்தனர். உபவாசம் என்றாலே ஜெபிக்கத்தான் என்பதில்லை. தேவனுக்கு நன்றி சொல்லவும், நற்புகழ்பாடவும்கூட ஆதிச்சபை உபவாசம் எடுத்தது. என்னே மாதிரி! ஆராதித்த சமயத்தில் ஆராதித்த ஊழியர்களிலிருந்து இருவரைக் கர்த்தர் விரிவான மிஷனரிப் பணிக்கு வேறுபிரித்தார். அவர்களாய் புறப்பட்டு ஊழிய வாஞ்சையில் ஓடிவிடவில்லை. அவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு அவரது திருப்பணிக்கு அழைக்கப்பட்டார்கள். தேவன் அவர்களது ஊழிய எல்லையை வெகுவாய் விரிவுபடுத்தினார். ஆம், தம்மை ஆராதிக்கிற ஊழியர்களின் எல்லையை கர்த்தர் நாளுக்குநாள் அற்புதமாய் விசாலப்படுத்துகின்றார். இந்தச் சபைத் தலைவர்கள் மக்களுக்கு ஊழியம் செய்யப் புறப்படுமுன்பு, மகிபனுக்கு ஆசாரிய ஊழியம் செய்து கொண்டிருந்தனர். ஆராதனையில் பிறந்தெழுந்த இந்த மிஷனரிப்

பயணம் எத்தனை ஆசீர்வாதமாய் இருந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்.

"அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு . . . . சீப்புரு தீவுக்குப் போனார்கள்". முதலாவது ஆராதனை; அடுத்தது ஆவியினால் அனுப்பப்படுதல் என்பதுதான் இங்கு நாம் காணும் ஒழுங்கு முறைமை. அப்படி ஆவியினால் அனுப்பப்பட்டவர்களது ஊழியத்தின் ஆசீர்வாதங்கள் ஏராளம், ஏராளம். மாயவித்தைக்காரன் எலிமா என்பவனை பரிசுத்த ஆவியினால் நிறைந்து மேற்கொண்டார்கள். அவன் குருடனானான். (அப்.13:6-12) ஆம், ஆராதனையில் துவங்கும் ஊழியத்தில் தேவ வல்லமையும் அதிகாரமும் காணப்படுகிறது. பவுல் சென்ற இடமெல்லாம் சபைகள் எழுப்பப்பட்டன. பிறவிச் சப்பாணி குதித்தெழுந்து நடந்தான். (அப்.14:8-10) எதிர்ப்புப் புயல் அவர்கள் ஊழியத்தை எடுத்தெறியவில்லை. கட்டுகளும், உபத்திரவங்களும் அவர்கள் சந்தோஷத்தைக் களவாடவில்லை. வேதனைகள் நடுவில் சாதனை புரிந்தார்கள். பல சபைகளை எழுப்பி அதற்கு மூப்பர்களையும் நியமித்தார்கள். ஆராதனையில் உதயமான ஊழியம் மகிமையான அறுவடையைக் கண்டது. அவர்கள் திரும்பவந்தபோது "சபையைக் கூடி வரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்தார்கள்'.

ஆனால் இந்த பயணத்தின் இடையில் யோவான் எனும் மாற்கு அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேம் சென்றுவிட்டான். (அப்.13:13) ஒரு வேளை பவுலும், பர்னபாவும் செல்வதைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டு அவர்களோடு அவன் ஓட்டிச் சென்றிருக்கலாம். உணர்ச்சிவசப்பட்டுச் சென்றவன் இறுதிவரை உறுதியாய் இருக்க முடியாமல் திரும்பிவிட்டான். ஆராதனை செய்து அனுப்பப்பட்ட தாசரோ, தடைகளை மிதித்து முன்னேறினார்கள். என்னுடைய ஊழிய அனுபவத்தில் நான் கண்ட ஒரு உண்மையுண்டு. தேவ சமுகத்தில் தரித்திருந்து, அவரைத் தேடி, அவரால் அழைக்கப்பட்ட ஊழியர்கள், எவ்வகைச் சோதனைத் தீயினாலும் சுட்டெரிக்கப் படுவதில்லை, அவர்கள் எத்தனைப் பாடுகளையும் சகித்து, காடானாலும் மேடானாலும் தொண்டு செய்கிறார்கள். விழுந்தாலும் எழுந்து வீறுநடை போடுகின்றார்கள். அவர்கள் ஊழியம் ஒரு மிஷனரிச் செய்தியால் மட்டும் உருவாவதில்லை. ஆத்தும பாரத்தை அஸ்திபாரமாகக் கொண்டதும் இல்லை கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் கட்டப்பட்ட ஊழியம் அது! அவர்மீது கொண்ட அன்பினாலும், ஆராதனையாலும் அரும்பின ஊழியம் அரைகுறையில் நிற்காது. மிஷனரிப் பணி குறித்து இன்று ஏராளம் அறைகூவல் செய்திகள்

கொடுக்கப்படுகின்றன. உணர்ச்சி மிகுதியில் வாலிபர்கள் ஊழியக்களத்தில் உட்புகுந்து விடுகின்றனர். வெள்ளங்கள் புரண்டு, வேகமாய்ப் புயல் வீசும் வேளையில், உணர்ச்சியெனும் மணல் சரிந்துவிடுகிறது. ஊழியம் எனும் கட்டிடம் விரிசலடைந்து விழுந்துவிடுகின்றது. சிலர் மாற்குபோல வீடு திரும்பி விடுகின்றனர். வேறு சிலர் உள்ளத்தில் சோர்ந்துபோய் ஊழியத்தில் குளிர்ந்து விடுகின்றனர். மனதில் மகிழ்ச்சி இல்லை. தொழிலில் மெய்யான ஆர்வம் இல்லை. கர்த்தரது பணியைக் கடமைக்காகச் செய்து காலம் கழிக்கின்றனர். இன்னும் சிலர் இதை ஒரு வேலை வாய்ப்பு வசதியெனக் கருதி, இழிவான ஆதாயத்துக்காக உழைக்கின்றனர்.**இத்தனைக்கும் காரணம் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்வதை விட்டு, கர்த்தருக்காக அலைந்து செய்யும் பணியில் மூழ்கிவிடுவதுதான்!** ஏறத்தாழ கால் நூற்றாண்டுகள் கர்த்தரோடு வாழ்ந்து, அவரது பணிக்களத்தில் பல ஆண்டுகள் தரித்திருந்து, நான் கண்ட இந்தக் குறைபாடுகளை வேதனையோடு பகிர்ந்து கொள்ளுகிறேன்.

தேவ சமுகத்தில் துதியோடும், ஜெபத்தோடும் பல மணி நேரம் தரித்திருந்து, அந்தச் சமுகத்தைச் சுமந்து செல்லும் ஆசாரியர்களை கர்த்தர் தேடுகின்றார். அவர்கள் செல்லுமிடங்களில் தேவ சமுகம் நிழலெனப் பின்தொடர்கின்றது. கடினமான பகுதிகளும் கர்த்தருக்குச் சரணடைகின்றது. ஊழியத்தில் கனிகள் கிடைக்கின்றன. ஆவியானவர் தமது ஊழியர்களை இவ்வித ஆராதனை பணிசெய்ய அழைக்கின்றார்.

அந்தியோகியா சபை ஊழியர்கள் தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தாலும், அந்த அழைப்பிலேயே மூழ்கிவிடாமல், தம்மை அழைத்தவரை ஆராதிப்பதிலும் அக்கறை செலுத்தினர். கிறிஸ்துவின் மேலிருந்த அன்பு அவர்கள் நெஞ்சத்தை நிறைத்தது. அவர்களும் கர்த்தரும் ஒன்றிணைந்து பணியில் இறங்கினர். தேவ அன்பு அவர்கள் ஊழியத்தை நெருக்கி ஏவியது. ஆத்தும பாரமாய் உருவெடுத்தது. இத்தகைய ஊழியம் என்றுமே தோல்வி முகம் கண்டதில்லை. ஆராதனையில் துவங்கின பவுலின் மிஷனரிப் பணி, முடிவு பரியந்தம் ஆராதனைக்குத்தான் முதலிடம் கொடுத்தது. ஊழியம் தடைபட்டு, சாத்தானின் சீற்றத்தினால் சிறைப்பட்ட போதும் பவுல் தேவனைத் துதித்துப்பாடி மேற்கொண்டான். (அப்16:25) இரண்டாம் மிஷனரிப் பயணத்துக்கு வந்த இந்த மாபெரும் எதிர்ப்பை ஆராதனையால் முறியடித்து ஜெயம் எடுத்தான். அவன் ஊழியத்தை ஒரு நாளும் தெய்வமாக்கிவிடவில்லை. "தொண்டு செய்வதே தொழுகை" எனும் கண்ணிக்கு அவன் இரையாகவில்லை. முதலாவது தொழுகை செய்து தேவனைப் பிரியப் படுத்தினான். அடுத்து தொண்டு செய்து தேவனுக்காக ஆத்துமாக்களை

ஆதாயப்படுத்தினான். இதுதான் பவுல் கண்ட ஊழியத்தின் நெறிமுறை.

பல ஊழியர்களை இன்று மனச் சோர்வும், தனிமை உணர்வும் வாட்டி வதைக்கின்றது. அடுத்த ஊழியர் மீது ஆற்றொண்ணா எரிச்சல் அடைகின்றனர். சில மூத்த ஊழியர்கள் இதற்கு எளிதில் இலக்காகிவிடுகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர்களது ஆராதனைக் குறைவுதான். அழைத்தவரைவிட, அதிகமாக அலுவல்கள் அவர்களை ஆட்கொண்டுவிடுவதுதான். தேவனுடைய உறவுக்கு நேரம் கொடுப்பதைவிட தேவனுடைய ஊழியத்துக்கு அதிக நேரம் எடுப்பதுதான். இதற்கு வேதத்திலிருந்து இரண்டு எடுத்துக் காட்டுகளைக் காட்ட விரும்புகிறேன். ஒன்று மார்த்தாள் மரியாளின் வாழ்க்கை. அடுத்தது பரிசேயனும், பாவியான ஸ்திரீயும் படைத்த விருந்து!

கிறிஸ்துவை முதலாவது கண்டு, வீட்டுக்கு அழைத்தவள் மார்த்தாள். அழைத்தவள் அவரண்டை அமராமல் அவருக்காக அலுவலில் ஈடுபட்டாள். அவளுடைய சகோதரி மரியாளோ இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து இருப்பதில் பேரார்வம் காட்டினாள். அவருடைய திரு வசனத்தைக் கேட்பதில் தெவிட்டாத பேரின்பம் கண்டாள். இந்த மரியாள் எப்பொழுதும் இயேசுவின் பாதத்தை சுற்றி, சுற்றி வட்டமிட்டவள். அவளைக்காணும் இடங்களிலெல்லாம் இயேசுவின் பாதத்தைக் காணலாம். அவள் அவரை சுற்றினாள். அவரது கனிவான பார்வையோ அவளையே வட்டமிட்டது. இதுதான் வெற்றி வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை இரகசியம். லாசரு மரித்தபோது, இயேசுவைக் "கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து", அழுதாள். லாசரு எழும்பின பிறகு, விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். இயேசுவின் பாத பூசைதான் மரியாளுக்கு மகத்தான ஆசை! அவரது பாதங்கள்தான் அவளது பணிக்களம்! தொழுகைக்கு மரியாள் ஒரு நல்ல முன்மாதிரி! அவளை கிறிஸ்து மெச்சிப் பேசினார். "தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள்" என்றார். மரியாள் அழுகிறதைக் கண்டு தானும் உடன் சேர்ந்து அழுதார். அற்புதம் செய்யத் தீவிரித்தார். இறுதிவரை இவள் செய்ததும் நினைவுகூறப்படும் என்றார். அவள் கர்த்தருக்கு ஊழியம் செய்து நிலையான நற்சாட்சி பெற்றாள்.

மார்த்தாள் தொழுகையற்ற தொண்டிற்கு முன்மாதிரி. அவள் கர்த்தருக்காக அயராது உழைத்தவள். "மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில்

வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி, என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலை இல்லையா? என்று கூறி எரிச்சலடைந்தாள். எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்று வாதிட்டாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக.மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்" என்றார்.

மார்த்தாள் பற்பல வேலைகளில் ஈடுபட்டு பாரப்பட்டாள். தனியே வேலை செய்கிறேன் என்று சலித்துக்கொண்டாள். கர்த்தருக்கே தன்மீது அக்கறையில்லை என்று கசந்து கொண்டாள். மரியாள் மீது எரிச்சல் அடைந்தாள். அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்கினாள். வீட்டுக்குள் வந்தவர் உறவு நாடி, உரையாட வந்தார். அவளோ அவரது உறவைக் காட்டிலும் ஊழியத்தைப் பெரிதாகக் கருதினாள். ஆம் தேவனுக்கு பாதபூசை செய்ய நேரம் எடுக்காமல் பணிக்களத்தில் மூழ்கிவிடும் ஊழியர், விரைவில் மார்த்தாளைப்போல மனச்சோர்வு அடைவார்கள். ஆராதனை ஊழியரைக் கண்டு அதிக எரிச்சலும் கொள்ளுவார்கள். ஆவியிலும் சரீரத்திலும் களைப்படைவார்கள். பிறகு தேவனுடைய அன்பையே சந்தேகிப்பார்கள். ஆராதனை இல்லாத ஊழியர் இளைஞராயிருந்தாலும் இனம்புரியாத சலிப்பால் இடறிவிழுவார்கள். கர்த்தருடைய பாதத்தில் காத்திருப்போர் நாளுக்கு நாள் புதுப் பெலன் அடைந்து, கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் கர்த்தருக்காக ஓடி உழைத்தாலும் இளைப்படையமாட்டார்கள். நடந்து திரிந்தாலும் சோர்ந்து போகமாட்டார்கள். ஆம், ஆராதனை வீரர் தேவ வல்லமையால் செல்லுமிடமெல்லாம் வாகை சூடி மகிழ்வார்கள். சோர்வு, கவலை, மன வேதனை, தனிமையுணர்வு அத்தனையையும், அவர் பாதத்தில் உட்காரப் படித்தவர்கள் எளிதாக மேற்கொள்ள முடியும். அந்தோ! தேவனுடைய ஊழியப்பளு தாங்காமல் உருக்குலைந்து போனவர்கள் ஏராளம்! ஊழியமே மனச் சோர்வை உண்டாக்கும் வேளைகளும் உண்டு. ஆனால் அவரை ஆராதித்து அனுபவிப்பவர் அதனைக்கண்டு ஒருபோதும் அயர்ந்து போவதில்லை. அவர்கள் ஊழியத்தில் நாளுக்குநாள் ஆண்டவரது அடிச்சுவடுகளைக் காணமுடியும். எந்நாளும் வறண்டுபோகாத ஊழியம் அவர்கள் பங்காகும். ஆராதனையில் ஆண்டவரது புன்முறுவலைக் கண்டு இன்புறமுடியும். இதைத்தான் இயேசு மிகத் தெளிவாக "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" என்றார். நாம் எப்பொழுதும் தொண்டு செய்ய முடியாது. ஆனால் நித்தியம் நித்தியமாய் தொழுகை செய்ய முடியும். ஆராதனையோடு

செய்யப்படாத ஊழியம் அழிவது திண்ணம். தேவையானதைத் தெரிந்து கொள்ளுங்கள். தேடற்கரிய பலனைக் காண்பீர்கள்.

ஆராதனையற்ற ஊழியம் பரிசேயன் செய்த விருந்து போன்றது. கிறிஸ்துவை விருந்துக்கு அழைத்தான். அழைப்பை மதித்து அவரும் வந்தார். அவனோ அவருக்குச் செய்யவேண்டிய **அன்பு உபசரிப்புகளை** அறவே மறந்தான். அலுவலில் ஈடுபட்டுவிட்டான். உணவுப் பரிமாற்றத்தில், வந்த விருந்தினரை கண்காணிப்பதில் அவனது கவனம் சிதறிவிட்டது. பாலைவனப் பிரதேசமாகிய அந்நாட்டில் பல மைல் தூரம் நடந்து களைத்து வந்த இரட்சகரை, அவன் முத்தமிட்டு வரவேற்கவும் இல்லை. உஷ்ணத்தால் உலர்ந்து போன தலைக்கு எண்ணெய்கொடுத்து குளிர்ச்சியாக்கவுமில்லை. மணலில் நடந்து வந்த மாமன்னரின் பாதத்தைக் கழுவ தண்ணீரும் தரவில்லை. விருந்தினருக்கு இவைகளைச் செய்வது அக்கால மரபு. அழைக்கப் பட்டவருக்காக அடிப்படை உபசரிப்புகளைக்கூட பரிசேயன் செய்ய வில்லை. கிறிஸ்துவை விருந்துக்கு அழைத்த வெற்றுப் பெருமைதான். ஆம், இன்றும் எத்தனை ஊழியர் கிறிஸ்துவிடம் தரித்து காத்திருப்பதைவிட அவருக்காகச் செய்யும் அலுவலில் கவனம் செலுத்தி கவலைப்படுகின்றனர்! உலகின் கண்களுக்கு தேவ ஊழியர் என்று தன்னைக் காட்டிக்கொண்டு உன்னதர் பாதத்தில் ஒரு சில மணி நேரங்கூட உட்கார்ந்து பழகவில்லை. தேவசித்தம் கேட்க அவரது சீரடி நாடவில்லை. ஊழியம், ஊழியம் என்று ஓடி உழைக்கின்றனர். ஆம், தொழுகையோடு தொண்டினைச் செய்யாதவர் தேவ ஊழியர் என்று சொல்லிக்கொள்வதில், பெருமை இல்லை. மனுஷனைப் பிரியப்படுத்துவதில் மனதைச் செலுத்துபவன் ஒருபோதும் தேவ ஊழியன் அல்ல. ஒவ்வொரு தேவ ஊழியனும், **"நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கின்றேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாய் இருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே".** *(கலா.1:10)* என்ற உணர்வினால் நிரம்ப வேண்டும். அந்த உணர்வு அவனது ஊழியப் பாதையை செம்மைப்படுத்தும்.

பரிசேயனின் வீட்டுக்கு மீண்டும் வருவோம். பாவியான ஒரு ஸ்திரீ இயேசு அங்கு வந்ததைக் கேள்விப்பட்டாள். அவளது பாச உள்ளம் பதைத்தது. அவளது நேச உள்ளம் நெகிழ்ந்தது. கிறிஸ்துவின் இன்பப் பிரசன்னம் காண ஓடோடி வந்தாள். தொழுகைக்கு இலக்கணம் வகுத்தவள் அவள். கட்டாயத்திற்காக அவள் அங்கு வரவில்லை. நன்றி சொல்ல வந்தாள். பரணியின் பரிமளத்தை உடைத்து ஊற்றினாள். தேவ அன்பு அவளது கல்லான உள்ளத்தை உடைத்தது. கண்ணீரைப் பொழியச் செய்தது. ஆம், கர்த்தருக்குப் பிரியமான பலிகள் நொறுங்குண்ட ஆவிதானே! அவளது

நொறுங்குண்ட இருதயத்திலிருந்து புரண்டு வந்த கண்ணீர், கிறிஸ்துவின் வெந்த பாதத்திற்கு மருந்தாக இருந்தது. தேவனது உள்ளத்தை குளிரச் செய்வதுதான் தொழுகை. தனக்கு மகிமை யாயிருந்த தலைமயிரினால் அவரது நனைந்த பாதத்தை துடைத்தாள். நீரே என் மகிமை! உமது பாத பூசையே எனது பாக்கியம் என்று சொல்லாமல் செய்தாள். பாதங்களை மாறி மாறி முத்தமிட்டாள். பாச மழையைக் கொட்டினாள். ஆம், அவள் பந்தியில் அல்ல, பரமனில் திளைத்தாள். "பாதம் ஒன்றே வேண்டும், இந்தப் பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம், உம் பாதம் ஒன்றே வேண்டும்" என்று அவளது உள்ளம் பாடிப் பரவசப்பட்டது. இப்படியாக அவரைத் தொழுதுகொண்டவள் பாவமன்னிப்பின் நிச்சயம், தேவசமாதானம், விடுதலை, இரட்சிப்பு என ஏராளம் ஆசீர்வாதங்களுக்கு சொந்தக்காரியானாள்.

ஆனால் பணிவிடையில் மட்டும் மனதைப் பறிகொடுத்து, பணிந்து கொள்ளத் தவறியவன் இன்றும் அவமானச் சின்னமாய் நிற்கிறான். பாவியான ஸ்திரீயைக் கண்டு அவன் உள்ளம் முறுமுறுத்தது. இவர் தீர்க்கதரிசிதானா என்று சந்தேகப் புயலால் தத்தளித்து நின்றான். "கொஞ்சமாய் அன்பு கூர்ந்தாய்" எனும் சாட்சி பெற்றான். இன்றும் தேவனுடைய வீட்டில் இப்படிப்பட்ட இரு கூட்டம் உண்டு. இருவரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள்தான். தேவன் எல்லாரிடத்தும் ஒரே அளவாக அன்பு கொண்டிருந்தாலும் நாம் அவரை ஒரே அளவாக நேசிப்பதில்லை. அவரில் மிகவும் அன்பு கூறுவோரும் உண்டு. கொஞ்சமாய் அன்பு கூறுவோரும் உண்டு. தேவனை நாடி, அவரைப் போற்றி, அன்பு காட்டி துதிசெய்வோரும் உண்டு. அவரது அலுவலில் மூழ்கி மனிதரை நாடி அயராத உழைப்பினால் அன்பரை மறப்போரும் உண்டு. அருமை ஊழிய நண்பரே, இந்த இரு கூட்டத்தில் நீங்கள் எப்பக்கம் இருக்கிறீர்கள்? அவருக்கு நீங்கள்தான் முக்கியம்! "**நான் உன் ஊழியத்தின் மீது அல்ல, உன் மீதுதான் அதிக அக்கறை கொண்டுள்ளேன்**" என்கிறார் இயேசு! உங்கள் பதில் என்ன? இன்றே தீர்மானியுங்கள்!

ஆலயத்தில் ஊழியம் செய்வது வேறு, ஆண்டவருக்கு ஊழியம் செய்வது வேறு என்பதை தமது தீர்க்கன் எசேக்கியேலுக்கு கர்த்தர் மிகத் தெளிவாய் தெரிவித்தார். நாற்பத்து நான்காம் அத்தியாயத்தில் இதைக் காணலாம். இஸ்ரவேலர் வழிதப்பினபோது, லேவியரும் சிலர் வழி விலகி, விக்கிரகங்களை வணங்கினார்கள். அவர்களுக்கு தேவன் கொடுத்த தண்டனையைக் கவனியுங்கள். அவர்கள் தேவனுக்கு ஆசாரியராய் அவருக்கு ஆராதனை செய்யும்படி அவர் அருகில் வரக்கூடாது. மகாபரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் தொடக்கூடாது. ஆனால் அவர்கள் ஆலயத்தின்

வாசல்களைக் காத்து வரவேண்டும். அங்கு ஊழியம் செய்து பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருக்க வேண்டும். அவர்கள் ஜனங்களுக்காக தகன பலிகளையும் மற்ற பலிகளையும் செலுத்தி ஜனங்களுக்கு ஊழியக்காரராய் இருக்க வேண்டும். இவர்களுக்கு விரோதமாக தேவன் தமது கையை இப்படி உயர்த்திவிட்டாராம். (எசே.44:10-14) ஆனால் அந்த லேவியருக்குள்ளும் சாதோக்கின் புத்திரர் தேவனை விட்டு விலகாது பரிசுத்த ஸ்தலத்தில் பாங்காய் பணிவிடை செய்து வந்தார்கள். இவர்களைக் குறித்து தேவன், "எனக்கு ஆராதனை செய்ய என் சமீபத்தில் சேர்ந்து நிணத்தையும் ரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்கள் . . . . பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்கள். இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக் கிட்டி வந்து, என் காவலைக் காப்பார்கள் என்றார். (எசே.44:15,16)

சாதோக்கின் புத்திரராகிய ஆசாரியர் தேவ சமுகத்தில் வந்து அவருக்கு ஆராதனை செய்யும் பாக்கியம் பெற்றார்கள். மற்ற ஆசாரியர் ஆலயத்தின் வேலைகளைச் செய்து மக்களுக்காகப் பலியிட்டு, பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராய் இருந்தார்கள். இதுதான் தேவன் செய்யும் திருவிளையாடல். ஆம், தேவனுக்காக செய்யும் **"ஆராதனை ஊழியம்"** அதிஉன்னதமானது என்பதை இன்றாவது உணர்ந்து கொண்டீர்களா? பாக்கியமான இப்பணி செய்ய உங்களையே படைப்பீர்களா? ஆலயத்தின் வேலையில் திருப்தி யடைவதைவிட்டு ஆண்டவர் சமுகத்தை முதலாவது நாடுவீர்களா? அவருக்குச் சமீபமாய் சேர்ந்து அவருக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்று ஆவல் கொள்ளுவீர்களா? தொழுகைதான் தேவனுக்குச் செய்யும் தொண்டிற்கு அஸ்திபாரம் என்பதை உணர்ந்து கொண்டீர்களா? தொழுகை வீரன் செய்யும் தொண்டுதான் தேவனைப் பிரியப்படுத்தும் என்பதை தெரிந்துகொண்டீர்களா? ஆராதனையில் பிறக்கும் ஊழியம் ஆசீர்வாத மழை காணும் என்பதை திட்டமாய் தெரிந்து கொண்டீர்களா? அப்படியானால் இன்றே மற்ற ஊழிய அலுவல்களைச் சற்றே குறைத்து, ஆராதனை நேரத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஊழியத்திலும், தேவ மக்களை **"துதிப்பதற்கு"** ஊக்குவியுங்கள். தேவனைத் துதித்துப் போற்றாமல், தேவ செய்திக்குப் போகாதீர்கள். ஆராதனை செய்யாமல் ஊழியத்திற்கு அடி எடுத்து வைக்காதீர்கள். தேவ மக்களை ஆராதிக்கச் செய்யும் அபிஷேகத்தை வாஞ்சித்துக் கேளுங்கள். மோசே இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து வந்து, யேகோவா தேவனைப் பணிந்து கொள்ளச் செய்தான். ஆராதனையின் அபிஷேகம் அவன் மேல் இருந்தது. ஆதலால் அவன் இஸ்ரவேல் மக்களை நாற்பது ஆண்டுகள் வழிநடத்தி சென்றான். தாவீது ராஜாவும் ஆராதனைக்குள் மற்றவரை நடத்தும் அபிஷேகம்

பெற்றிருந்தான். ஆதலால் ஆற்றொண்ணா பாடுகளினூடே ஆர்ப்பரித்து நடந்தான். தாவீதின் குமாரனாம் இயேசுவும், மக்களை தொழுகைக்குள் அழைத்துச் செல்லும் அபிஷேகம் அளவின்றி பெற்றிருந்தார். அந்த அபிஷேகத்தினால்தான் திரள்கூட்ட மக்களை அவரால் திருப்தி செய்ய முடிந்தது. நொறுங்குண்ட ஆவிக்குப் பதிலாக துதியின் உடையை அவரால் கொடுக்க முடிந்தது. இன்றும் தேவ ஆவியானவர் திருச்சபையை, தொழுகை சபையாய் மாற்ற வாஞ்சையோடு செயல்படுகின்றார். அவர்தான் இந்தப் புத்தகத்தை உங்கள் கைகளில் கிடைக்க அருள் செய்தார். உங்களை ஆராதிக்கும் ஆசாரியராய் மாற்றுவதோடு, தேவ மக்களை ஆராதனையின் ஆசீர்வாதத்துக்குள் வழி நடத்திச் செல்லும் பாத்திரமாய் பயன்படுத்த விரும்புகின்றார். இத்தகு மகத்தான பணிக்கு இன்றே உங்களை அர்ப்பணம் செய்வீர்களா? இயேசுவின் நாமத்தில் உங்கள் மீது ஆராதனையின் அபிஷேகம் அளவில்லாமல் பொழியப்படுவதாக!

4. ஆராதனை வீரர் இயேசு

கிறிஸ்துவைக் கவனித்துப் பாருங்கள். பிதாவை முழுவதுமாய் பிரியப்படுத்தின குமாரன் அவர். "**இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்**" என்று பிதா வானத்திலிருந்து முழக்கமிட்டார். அவர் மக்களுக்கு தொண்டு செய்யுமுன்பே தமது பிதாவுக்குத் தொழுகை செய்வதில் அதிக நேரம் செலவழித்திருப்பார் என்று நான் நம்புகிறேன். அடிக்கடி ஸ்தோத்திர பலிகளையிட்டு தேவனை திருப்திப்படுத்தியிருப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக பிதாவின் சமுகத்தை மிகவும் பிரியமாய் நாடினார். தேவனுக்கு முதலிடம் கொடுத்து, அவர் மீது தமது நேசத்தை ஊற்றினார். தம்மைத் தேடி அலைந்து திரிந்த பெற்றோரைப் பார்த்து, "**நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா**" என்று அறுதியிட்டுக் கூறினார்.

உபவாச நாட்களில்

தமது நாற்பது நாள் உபவாசத்திலும் அவர் அதிக நேரம் ஆராதனையில் செலவிட்டிருப்பார். அதனைக் கண்டு சகிக்க முடியாத சாத்தான் அவரது ஆராதனையை தன் பக்கம் திருப்ப திட்டமிட்டான். ஆகவே அவரை மலைச் சிகரத்தில் நிறுத்தி உலகின் மகிமையை ஒரு நிமிடத்தில் காண்பித்து "நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும்" என்று ஆசை வார்த்தை பேசினான். ஆனால் கர்த்தரோ "**எனக்குப் பின்னாகப் போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக**" என்று எழுதியிருக்கிறதை எடுத்துக் காட்டி, தனது ஆராதனையை தொடர்ந்து செய்தார்.

நாற்பது நாட்கள் முடிந்த பிறகும் கிறிஸ்து அடிக்கடி ஜெபம்பண்ணும்படி மலை, காடு, தோட்டங்களில் இரவு பகலாக செலவிட்டார். ஜெபம் என்பது பலவகைப்பட்டது. அந்த வகைகளில் அதி உன்னதமானது தொழுகையும், துதியும்தான்! பொது இடங் களிலும் அவர் தேவனை அடிக்கடி துதிக்கவும் ஸ்தோத்திரிக்கவும் செய்தார்.

எழுபது சீடரோடு

தாம் அனுப்பிய எழுபது சீடர்கள் பிசாசுகளைத் துரத்திவிட்டு வெற்றிப் பெருமிதத்தில் வீறுநடைபோட்டு வந்தார்கள். உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்று பெருமிதம் கொண்டார்கள்! அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து, துதிக்கத் துவங்கினார். "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும், கல்வி மான்களுக்கும்

மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் '' என்று புகழாரம் சூட்டினார். சீடர்களின் வெற்றியைத் தொடுத்து தமது பிதாவுக்குப் புகழ் மாலை சாற்றினார். தமது நாமத்திலுள்ள அதிகாரத்தை தேவனுக்கு ஆராதனையாக அணிவித்தார்! பிதா இந்தத் துதியைக் கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தி மனம் பூரித்தார்!

அப்பங்களோடும் மீன்களோடும்

மற்றொரு சமயம் அதிசயிக்கத்தக்க அற்புதம் ஒன்றை நிகழ்த்தினார். திரளான மக்கள், பசியோடு அவர் திருமுகம் பார்த்து நின்றனர். அவர் கையிலோ சிறு பையன் கொண்டு வந்த ஐந்து அப்பங்களும் இரு மீன்களுமே உண்டு! அதுசமயம் கூட்டத்தைப் பார்த்து அவர் குழம்பவில்லை. குமுறி அழுதும் ஜெபிக்கவில்லை. தன் கையில் இருந்ததைப் பார்த்தார். ஸ்தோத்திரம் பண்ணினார். அவரது விசுவாசம் அதிவேகமாய் வளர்ந்தது. அப்பங்களும் மீன்களும் வளரத் துவங்கின. தேவனைத் துதிப்பதினால் உண்டாகும் வல்லமையை அறிந்தவர் இயேசு! “**துதிக்கும்போது விசுவாசம் பெருகும். விசுவாசம் பெருகும்போது அற்புதங்கள் நடக்கும்**'' என்ற இரகசியத்தை அப்பியாசித்துக் காட்டினார். அவரது துதியும், விசுவாசமும் பிதாவைப் பிரியப்படுத்தியது. விசுவாசம் துதிக்கச் செய்கிறது. துதி விசுவாசத்தை வளரச் செய்கிறது. இது கிறிஸ்து நமக்குக் காட்டிச் சென்ற பாடம்! விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் அல்லவா? துதியும் விசுவாசமும் கர்த்தரின் உள்ளத்தை களிகூரச் செய்கிறது! ஆம், நீங்களும் தேவைகளைப் பார்த்து திகையாமல் தேவனைப் பார்த்துப் பாடுங்கள்! இல்லாமையைப் பார்த்து இளைத்துப் போகாமல் எப்போதும் இருக்கிறவரைப் பார்த்து மகிழுங்கள். கொஞ்சத்தைக் கண்டு குழம்பாமல் கொடுப்பவரைக் கண்டு கொண்டாடுங்கள். தன்னிடத்து, அற்பமாய் இருக்கிறதைக் கண்டு அஞ்சாமல் அவர் அற்புதக் கரங்களைக் கண்டு ஆனந்தப்படுங்கள். இயலாமையை எண்ணி சோர்ந்து போகாமல் இயக்குபவரைக் கண்டு துதியுங்கள். இப்படி எல்லாவற்றிற்காகவும் நாம் தேவனைப் பார்த்து **ஸ்தோத்திரம் செய்யும்போது தேவன் நமது தேவைகளைப் பார்த்துக் கொள்ளுகிறார்!**

லாசருவின் கல்லறையில்

கிறிஸ்து செய்தவைகளில் மிகச் சிறப்பான அற்புதம் லாசருவை எழுப்பினதுதான். நான்கு நாளாக கல்லறையில் கிடந்து நாறின பிணம் அவரை நடுங்கச் செய்யவில்லை. சூழ நின்றவர்களின் அவிசுவாசம் அவரது துதியின் உடையை மாசுபடுத்தவில்லை. கல்லை எடுத்துப் போடச் சொன்னார். கல்லறையைப் பாராமல் கண்களை ஏறெடுத்துப்

பார்த்தார். ஜீவனில்லையே என்று சிந்தியாமல் ஜீவனைக் கொடுக்கவல்ல, ஜீவாதிபதியை ஏறெடுத்துப் பார்த்தார். "பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று வாய்விட்டுச் சொன்னார். அவரது `துதி' அவருக்குள்ளிருந்த விசுவாசத்தை அலைமோட்டி எழுப்பியது. லாசருவே, வெளியே வா என்று அதிகாரத்தோடு அழைக்கச் செய்தது! இதுதான் பிதாவை பிரியப்படுத்தும் விசுவாசம்! தேவனை மகிழ்விக்கும் தொழுகை! அற்புத சக்தியை வெளியாக்கும் ஆராதனை. ஆயிரம் நாளின் அழுகை ஜெபத்தைவிட ஒருநாள் ஆராதனையின் வல்லமை ஒப்பற்றது!

ஆனந்த கிறிஸ்து

தாவீதின் குமாரன், தாவீதுபோல் துதிபாடல் பாடினாரா? பாடாமல் எப்படி இருந்திருக்க முடியும்? **"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்"** (எபி2:12) என்று அவரைக் குறித்து சொல்லப்பட்டதே! கிறிஸ்துவைக் குறித்த ஒரு தவறான படத்தை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். வேதனையும், கவலையும் நிறைந்தவராய் தொய்ந்து போன கிறிஸ்துவையே நாம் எப்பொழுதும் கற்பனை செய்கிறோம். துயரமும் துக்கமும் துதிக்கு விரோதிகள். துதிக்கும் கிறிஸ்தவனுக்கு துக்கமில்லை. துக்கிக்கும் கிறிஸ்தவனுக்கு துதியில்லை. கிறிஸ்து சிலுவை மரத்தில் **துக்கம் நிறைந்தவராய்** இருந்தது உண்மைதான். (ஏசா.53:4) மக்களின் வேதனைகளைக் கண்டபோதெல்லாம் மனதுருகினார். மழைக் கண்ணீர் பொழிந்தார். ஆனால் அவர் மீது தங்கியிருந்த **`அபிஷேகம்' ஆனந்த தைலம்** என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கிறிஸ்துவைக் குறித்து கூறும்போது, **"நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்"** என்று எழுதியிருக்கிறது. (எபி.1:9) கிறிஸ்துவை அவரது தோழர்களின் நடுவினின்று வேறுபடுத்தி காண வேண்டுமானால், அவரது முகத்தின் பொலிவையும், மகிழ்ச்சிப் புன்னகையையும் அளவுகோலாய் கொண்டு அறிந்து கொள்ளலாம். அது உலகம் கொடுத்த மகிழ்ச்சி அல்ல, உன்னதரிடம் உறவாடிப் பெற்ற மகிழ்ச்சி. இப்பொழுது சொல்லுங்கள், அவர் எப்பொழுதும் துதிபாடல் பாடியிருப்பாரா? அவரது ஜெப வேளையில் அதிக நேரம் ஆண்டவரோடு உறவாடி இருப்பாரா? ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். ஆம், தேவ சமுகத்தில் எப்போதும் செலவிட்டு மகிழ்ந்திருந்த கிறிஸ்து எந்நாளும் பிதாவின் புகழ்பாடி துதித்துக்கொண்டிருந்தார் என்பது முற்றிலும் உண்மை!

ஆராதனை வீரன்

கிறிஸ்து ஆராதனை வீரனாய்த்திகழ்ந்தார். அவரைக் குறித்து தாவீது சொன்னதை மீண்டும் பேதுரு நினைவுபடுத்துவதை எண்ணிப்பாருங்கள். **"அவரைக் குறித்து தாவீது, கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக் கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலது பாரிசத்திலே இருக்கிறார். அதனால் என் இருதயம் மகிழ்ந்தது. என் நாவு களிகூர்ந்தது. . . . ஜீவ மார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர், உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான்."** (அப்.2:25-28)

இந்த வசனத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள். கிறிஸ்து தமது ஜெப நேரத்தில் அதிகமாக துதியிலும் தொழுகையிலும் செலவிட்டார் என்பதற்கு இதைக்காட்டிலும் மற்றொரு சான்று உளதோ? எப்பொழுதும் கர்த்தரை நமக்கு முன்னே நிறுத்தி அவரைநோக்கி பார்ப்பதுதான் ஆராதனையின் கருப்பொருள். அப்படி அவரை நோக்கிப் பார்த்ததினால் இயேசுவின் இதயம், மகிழ்ச்சியில் பொங்கி வழிய, நாவு களிகூர்ந்தது. இதுதான் துதியாய், புகழ் பாடலாய், புரண்டு வந்திருக்கும். இப்படி அவர் தொழுகையில் இருந்தபோது தேவன் அவருக்கு தமது வழிகளை தெரியப்பண்ணினார். பிதாவின் சமுகம் அவரை சந்தோஷத்தினால் நிறைத்தது.

இன்ப கீதம் துன்ப நேரம்

இத்தனை துதி நிறைந்த வாழ்க்கையில் வேதனைகள் இருக்காது என்பது பொய்! ஆனால் ஆராதனை வீரன் துயர வேளையிலும் துதிபாடல் பாடிக்கொண்டிருப்பான் என்பது மெய். துதித்துக் கொண்டே சோதனைகளை சந்திப்பவன் ஜெய வீரனாய் வெளிவரு கிறான். நமது அருமை இரட்சகர் இதற்கும் முன் மாதிரியாகத் திகழுகின்றார். துயரத்தின் சிகரத்தை எட்டுமுன்புகூட அவர் வாயில் துதிபாடல் புரண்டு வந்தது. தனது சீட்ரோடுகூட பாடித் துதித்த பின்புதான் ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார். **"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்** (மத்.26:30) தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி நமக்கு மாதிரியை பின்வைத்துப் போனவர், துதி நிறைந்த வாழ்க்கைக்கும் தமது அடிச்சுவடுகளை முன் மாதிரியாய் வைத்துப் போனார். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்" எனும் அறக்கட்டளையை அனுபவமாக்கி நமக்கு இன்றும் அறைகூவல் விடுக்கின்றார்.

துதிப்பாடலோடு ஒலிவ மலைக்குச் சென்றவர், தமது மரணத்திலும் தம்மையே பலியாக அவரது பலிபீடத்தில் வைத்தார்.

அதுதான் அவரது ஆராதனையின் கொடுமுடி! காலமெல்லாம் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்தவர், இன்று தன்னையே ஆராதனைப் பலியாக்கினார். எல்லா நாளும் தமது ஆராதனையின் மூலம் பிதாவைப் பிரியப்படுத்தினவர், சிலுவையில் "தம்மையே தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்தார்" (எபே5:2) அந்த பலியையும், ஆராதனையையும் அங்கீகரித்த தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார்! துரைத்தனங்களையும், அதிகாரத்தையும், வல்லமைகளையும் அவரது பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார். அவரோடு இணைந்து துதியின் வாழ்க்கைக்கு தம்மை அர்ப்பணித்தவர்களை இன்றும் தமது ஜெயத்தினால் சிறப்பிக்கின்றார்! மெய்யாகவே அவர் யூதா கோத்திரத்தின் சிங்கமும், தாவீதின் வேருமானவர்தான். யூதா கோத்திரம் துதியின் கோத்திரம் என்று கண்டோம்! துதிக்கும் கோத்திரத்துக்கு அவர் சிங்கமாய் இன்றும் செயல்படுகின்றார்! தாவீதின் தொழுகை அனுபவங்களுக்கெல்லாம் அவர்தான் ஆணிவேரானவர்.

துதியின் உடை கொடுக்க வந்தவர்

இன்றும் கிறிஸ்து உங்களை துதிக்கும் வீரராய் மாற்ற விரும்புகின்றார். சீயோன் துதிக்கும், தொழுகைக்கும் பேர்போன இடம்! அது கர்த்தர் கொண்டாடப்படும் இடம். ஆனால் அந்த சீயோனில் இன்று துயரம்! தாழ்வெண்ணம் என்னும் சாம்பல்! ஒடுங்கின ஆவி! மனச் சோர்வு! இதுதான் இன்றைய சபையின் நிலைமை! ஆனால் நமக்கு ஒரு செய்தி! **"சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்கு பதிலாகத் துதியின் உடையைக் கொடுக்கவும்"** (ஏசா.61:3) கிறிஸ்து வந்தார்! சுருங்கச் சொன்னால், "அழுகின்ற மனிதனை, தொழுகின்ற மனிதனாய் மாற்றவும், அங்கலாய்ப்போரை ஆராதிப்போராய் மாற்றவும் துன்புற்றோரை துதிக்கும் மனிதராய் மாற்றவுமே இயேசு வந்தார்! தாழ்வெண்ணம் எனும் சாம்பலை உதறித் தள்ளுங்கள்! கிறிஸ்துவைத் தரித்து சிங்காரமாகுங்கள்! துயரத்தை இயேசுவின் நாமத்தில் துரத்துங்கள்! அவர் அருளும் ஆனந்த தைலமாம் ஆவியானவரால் நிரம்பி வழியுங்கள்! மனச் சோர்வெனும் ஒடுங்கின ஆவியை ஓட விரட்டுங்கள்! கிறிஸ்து தரும், `துதியின் உடையை உடுத்திக் கொள்ளுங்கள்."

5. துதிகளின் நடுவில் தேவ சமுகம்

தேவனைத் துதிப்பதற்கும் (PRAISING) அவரது சமுகத்திற்கும் (PRESENCE) நெருங்கிய தொடர்புண்டு. வேதம் முழுவதிலும் இதற்கு ஆதாரம் உண்டு. தேவன் வாசம் செய்ய தெரிந்துகொண்ட இடத்திலெல்லாம் அவர் தொழுது கொள்ளப்பட்டார். நமது தேவன் இன்றும் துதிகளின் நடுவில் வாசம் பண்ணுகிறார். "**இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்**" என்று தாவீது பாடினான். (சங்.22:3) தேவ மக்கள் துதி செய்யும்பொழுது தேவன் அங்கு வந்து நிரந்தரமாய் கூடாரம் போடுகின்றார். வேறொரு மொழியாக்கம், "இஸ்ரவேலின் துதிகளையே தமது அரியணையாகக் கொண்டு தேவன் அதில் வந்து அமர்ந்து விடுகின்றார்." என்று கூறுகிறது. **நாம் துதிக்கும் பொழுது அவர் நம் நடுவில் வந்து உட்கார, நாம் நாற்காலி போடுகிறோம்.**

நமது அற்பத் துதிகள் அதி உன்னத நாதனுக்கு அரியாசனம் ஆகுமென்றால், அதில் அவர் விரும்பி வந்து அமருகின்றார் என்றால் அதற்கு நாம் தடைக்கல்லாய் இருக்கக் கூடுமோ? தனியாகவும், குடும்பமாகவும், சபையாகவும் அவரைத் துதித்து, எந்நாளும் அவரது பிரசன்னத்தில் இருக்க வேண்டாமா? துதிக்கும் கிறிஸ்தவன் தேவப் பிரசன்னத்தால் சூழ்ந்து கொள்ளப்பட்டவன். காரணம், துதிக்கும் கிறிஸ்தவனுக்கு தேவாதி தேவன் ஒளியாயிருக்கின்றார். சுருங்கச் சொன்னால் துதிப்பவன் தேவ வெளிச்சமாயிருக்கிறான். அவன் செல்லுமிடமெல்லாம் மக்கள் தேவ சமுகத்தை அவனில் உணருவார்கள். **துதிக்கும் குடும்பத்தில் தேவப் பிரசன்னம் நிறைவாய் இருக்கும். அங்கு வேறெந்த தீய சக்திகளுக்கும் இடமில்லை. துதிக்கும் சபைகளில், தேவனின் இன்ப சமுகம் மூடியிருக்கும்.** அந்த சபைகளில் ஆவியானவரின் அற்புதக் கிரியைகள் அபரிமிதமாயிருக்கும். துதிக்காத சபைகள் தூங்கிவிழும் சபைகள்! அங்கு புத்துணர்வோ, புதுத் தெம்போ இருக்காது. களிகூரல் இருக்காது, கல்லறைபோல் இருக்கும். வறட்டுக் கூச்சல் எழும்பும். வல்லமை வெளிப்படாது! அந்தோ பரிதாபம்!

தேவாதி தேவனின் பிரசன்னம் நமக்கு தேடற்கரிய பாக்கியம். நமக்கும் புற ஜாதிகளுக்குமுள்ள வேறுபாடு அவர் பிரசன்னத்தினால் விளைவதுதான். அவர் பிரசன்னம் நம்மோடிருப்பது நமக்குள்ள பெரும் பாதுகாப்பு! ஆதாமும், ஏவாளும் சிருஷ்டிகரைவிட்டு, சிருஷ்டியை பணிந்து கொண்டார்கள். அன்று முதல் கர்த்தருடைய சந்நிதிக்கு தூரமாக்கப்பட்டார்கள். ஆராதிக்கத் தவறிய காயீன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டான். ஆராதித்த ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் போன்ற முற்பிதாக்கள் தேவ சமுகத்தில் திளைத்து களிகூர்ந்தார்கள். மோசேயும் தேவ சமுகத்தோடுகூட இஸ்ரவேலரை

வனாந்தரத்தில் வழி நடத்தி வந்தான். இஸ்ரவேலர், கர்த்தரை விட்டு விலகினபோதும், கன்றுக்குட்டியைத் தொழுதுகொண்ட போதும், தேவனது திவ்விய சமுகத்தை இழந்தார்கள். அப்பொழுதெல்லாம் சபை கலங்கினது. மோசே துடிதுடித்தான். "உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்" என்றான். ஒவ்வொரு தலைவனும் இதை மனதில் கொள்ள வேண்டும். தேவப்பிரசன்னத்தை ஜனங்களுக்குக் கொண்டு வருவதுதான் தலைவர்களின் தலையாயக் கடமை. தேவப் பிரசன்னம் நம் நடுவில் இல்லையென்று தெரிந்தால், அடுத்த அடி எடுத்து வைக்க அச்சப்பட வேண்டும். அவரது சமுகம் எப்போதும் நம்மை சூழ்ந்திருப்பதுதான் நமக்குள்ள தனிச் சிறப்பு.

இதை மோசே எப்படி விவரிக்கின்றான் என்று கவனியுங்கள். *"எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும், நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின்மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்".* (யாத்.33:16) தேவப் பிரசன்னம் நம் நடுவில் வெளிப்படுவதுதான் அவர் கிருபை நமக்குக் கிடைத்தது என்பதற்கு அத்தாட்சி. பூமியின் ஜனங்கள் எல்லாரிலும் நாம் விசேஷித்தவர்கள் என்பதும் இதனால் அறியப்படும். இந்த விசேஷத்தை நாம் இழந்துவிட்டால் நாம் உப்பில்லா பண்டம்போல் உதவாது போவோம். ஆம், துதியற்ற வாழ்க்கை சுவையற்ற வாழ்க்கை என்பது திண்ணம். ஆராதனை இல்லா வாழ்க்கை அலங்கோல வாழ்க்கை என்பது உண்மை.

அசுத்த ஆவிகளின் பிரசன்னம்

புறஜாதிகள் துதியின் வல்லமையை உணர்ந்தவர்கள். விக்கிரகம் ஒரு பொருளல்ல. அவைகளுக்குச் சக்தியும், புத்தியும் இல்லை. ஆனால் அவைகளுக்கு பூசை செய்து, தொழுது கொள்ளும்போது, தீய ஆவிகள் அவர்கள் மேல் இறங்கிவிடுகிறது. அதனால்தான் வேதம் "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று" சொல்லுகின்றது. (1கொரி.10:20) இப்படித்தான் இன்று நமது நாடுகளில் அசுத்த ஆவிகள் ஆளுகை செய்கின்றன. தங்கள் தேவர்களைத் துதி பாடியும், தொழுகை செய்தும், தீய ஆவிகளின் பிரசன்னத்தை பூமியில் இறக்கி விடுகின்றனர். ஆனால் இதற்கு மாற்று ஒன்றுண்டு. தேவ சமுகத்தை நமது நாடுகளில் கொண்டுவர வேண்டும். சூரிய ஒளி, ஏனைய ஒளிகளைத் தன்னுள் விழுங்கி மேலோங்கி நிற்பது போல் தேவ சமுகம் தீய ஆவிகளின் சமுகத்தை அழித்து ஆளுகை செய்கிறது. இதற்கு தேவன் வகுத்துள்ள சுலபவழிதான் துதியும் ஆராதனையும்!

பிதாவின் பிரசன்னமும் மகிமையும்

துதியும் தொழுகையும் நிரம்பி வழியும் சூழ்நிலையில் தேவ மகிமை தடையேதுமின்றி, மடைதிறந்த வெள்ளமாய் இறங்குகின்றது. அப்போது தேவக் குமாரன் வெளிப்படுகின்றார். ஆவியானவர் வரங்களோடு வருகை புரிகின்றார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பக்தர்கள் தேவனைத் தொழுது கொண்டபொழுதெல்லாம், தேவன் அவர்களுக்குச் சமீபித்து வந்தார். பலிகளை அவர் பிரசன்னம் வந்து பட்சித்தது. தொழுகை நேரத்தில் தேவன் தரிசனமாகி, தமது தாசரோடு பேசினார். சபையாய்க்கூடி பணிந்துகொண்டு, துதி பாடினபோது, தேவன் தமது மகிமை பிரஸ்தாபத்தோடு இறங்கி வந்து அருள்பாலித்தார். இதற்கான ஒரு எடுத்துக்காட்டை வேதத்திலிருந்து கவனிப்போம்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்தபின்பு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோனிலிருந்து ஆலயத்துக்குக் கொண்டு வந்தான். பெட்டிக்கு முன்பாக எண்ணிக்கைக்கும் தொகைக்கும் அடங்காத ஏராளமான ஆடு மாடுகளைப் பலியிடச் செய்தான். ஆசாரியர் தங்களைச் சுத்தம் பண்ணினார்கள். பாடகரான லேவியர்கள் திரள் கூட்டமாய் கைத்தாளங்களையும், தம்புருகளையும், சுரமண்டலங்களையும் பிடித்து நின்றார்கள். நூற்றிருபது ஆசாரியர்கள் பூரிகைகளை ஊதினார்கள். “**அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏக சத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள். ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீத வாத்தியங்களுடைய சத்தத்தை தொனிக்கப் பண்ணி, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியம் செய்து நிற்கக்கூடாமற் போயிற்று, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.**” (2 நாளா.5:13-14)

தேவதாசர்கள் ஒருமித்து தேவனை ஸ்தோத்திரிக்கும்போது, தேவ மகிமை வல்லமையாய் இறங்கியது. ஆசாரியர்கள் நிற்கமுடியாமல் விழுந்தார்கள். தேவாலயம் மேகத்தினால் மூடப்பட்டது. ஆம், அருமையானவர்களே, நமது கர்த்தர் என்றும் மாறாதவர், இன்றும் தம்மை கொண்டாடும் பக்தர் நடுவில் தமது மகிமையோடு இறங்கி வருகின்றார். நாங்கள் நடத்தும் பயிற்சி வகுப்புகளில் இதைக் கண்கூடாகக் கண்டு களிக்கின்றோம். தேவனை ஒருமித்துப் பாடி, துதிக்கும்போது தேவ மகிமை எங்களை மூடிக் கொள்கின்றது. பலர் நிற்க முடியாமல் தடுமாறி விழுகிறார்கள். சூரிய ஒளி வீசும் நேரத்தில், வகுப்பறையில் மழைத்துளிகள் தம்மேல் விழுவதைக் கண்டு,

பரவசத்தோடு சாட்சி பகர்ந்தவர்கள் உண்டு. இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டோர், கூடி ஆராதிக்கும்போது ஆண்டவர் சமுகம் இறங்காமல் எப்படி இருக்க முடியும்? விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பது உறுதி! **"மகிமையும், கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது. வல்லமையும், மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது".** (1 நாளா.16:27) ஆகவே, இன்றைய திருச்சபை மகிமையிழந்து, இக்கபோத் எனும் அவலப் பெயர் அடைய அவசியம் இல்லை! கனவீனமடைந்து உலகில் தலைகுனியக் காரணம் இல்லை! வல்லமையற்று வளமற்ற சபையாய் வாடவும் வேண்டியதில்லை. மகிழ்ச்சியினை இழந்து இகழ்ச்சியினை ஏற்கவும் தேவை இல்லை. தேவ சமுகம் தேவ சபையை மூடிவிட்டால், திருச்சபை தேவவல்லமையை மிகச் சாதாரணமாய் வெளிப்படுத்தும். அந்த வல்லமைக்கு முன்பு பர்வதங்கள் மெழுகு போல் உருகும்! (சங்.97:5) அந்த மகிமைப் பிரசன்னத்தில் வியாதிச் சாபங்கள் விலகிப்போகும். பர்வதம் போன்ற பிரச்னைகள் மெழுகுபோல் உருகிப்போகும். **"அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகும், அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்".** (நாகூம் 1:5) தேவனுடைய பிள்ளைகளுக்கு மலைபோல் வரும் துன்பங்கள் யாதாயினும் பனிபோல் மறைந்து போகும். எதிர்த்து வரும் உலகத்தார் எடுபட்டுப் போவார்கள். **"தேவ சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், அவரது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு"** என்பதை சபை அனுபவமாக்கட்டும். அப்போது உலகம் சபையைக் கண்டு அதிரும்! இத்தகைய தேவ சமுகத்தை தொழுகையோடும், துதியோடும் கொண்டு வருவது எத்தனை எளிது! குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பது எத்தனை உண்மை!

துதியும் தேவப் பிரசன்னமும் பிரிக்க முடியாதவை எனும் உண்மையை மறந்து **விடாதீர்கள்.** தேவ சமுகத்தில் நுழைய வேண்டுமானால், துதி எனும் வாசலின் வழியாகத்தான் செல்ல வேண்டும். இதைத்தான், **"துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக் கடவோம்"** என்றும் **"அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்"** என்றும் கூறி வேதம் நம்மை வரவேற்கிறது. தேவ சமுகம் செல்ல நீங்கள் நீண்ட நேரம் பிரயாசப்படவேண்டாம். தேவாதி தேவன் செய்த நற்கிரியைகளையும், மேன்மை பிரஸ்தாபங்களையும் ஒவ்வொன்றாய் எண்ணி நன்றியும், துதியும் சொல்லிக்கொண்டிருங்கள். அதி வேகமாய் அவர் சமுக உணர்வில் மூழ்கிவிடுவீர்கள். அதற்குப் பிறகு அவரது சுபாவங்களை புகழ்ந்து

பேசுங்கள்! அவரது வல்லமையை வாய்விட்டு முழக்குங்கள்! அவரது மகத்துவத்தைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்! அவருடைய இரக்கத்தை எண்ணி புகழ்மாலை சூட்டுங்கள்! பாடுங்கள்! அவரது மகிமை உங்களைத் திணறடிக்கும். அவரது சமுகம் உங்களைப் பரவசப்படுத்தும். சில வேளைகளில் நிற்கமுடியாமல் சாஷ்டாங்கமாய் விழுவீர்கள்! அவரும் நீங்களும் மட்டும் இருப்பதுபோன்ற உணர்வு உங்களை தேவ ரசிகர்களாகவே மாற்றிவிடும்!

தேவக் குமாரனின் பிரசன்னம்

தேவக் குமாரனாம் கிறிஸ்துவும் தொழுகைச் சூழ்நிலையில்தான் அவனியில் அவதரித்தார். மரியாளை தேவதூதன் சந்தித்து இரட்சகரின் பிறப்பை முன்னறிவித்தான். எலிசபெத்தும் அதை ஆமோதித்து அவளை வாழ்த்தினாள். அப்பொழுது மரியாள், "***என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது***" என்று ஆராதனைப் பாடல் பாடினாள். அவளது ஆராதனை வேளையில் உலகரட்சகர் அவளில் உதயமானார். அவர் தோன்றினபொழுது எங்கும் ஆராதனை மயம். அன்றுமுதல் மக்கள் அவரை வாழ்த்தி வணங்கினர். இன்றும் துதிபாடல் பாடும் நெஞ்சங்களில் கிறிஸ்துவின் இன்ப பிரசன்னம் நிரம்பி வழிவதைக் காணலாம். அன்று அவரைத் தொழுது கொண்டவர்களுக்கெல்லாம் அற்புதங்களைச் செய்தார். தொழுகைச் சூழ்நிலையில் கிறிஸ்துவின் இன்ப சமுகத்தை எளிதாக உணரலாம்.

பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம்

பரிசுத்த ஆவியானவர் ஆராதனை நேரத்தில் பட்சமாய் இறங்கி கிரியை செய்கின்றார். தேவக் குமாரனைப்போலவே, இவரும் ஆராதனைச் சூழ்நிலையில்தான் பூமியில் இறங்கி வந்தார். ஆதி அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்குச் செய்த ஆயத்தம் தொழுகையும் துதியும்தான்!

கிறிஸ்து அவர்களை விட்டு பரலோகம் சென்றவுடன் "***அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்.***" (லூக்.24:52-53) நாள் முழுவதும், நீண்ட நேரம் தேவனைப் புகழ்ந்து கொண்டும், துதித்துக்கொண்டும் இருந்தபோதுதான், பெந்தெகொஸ்தே எனும் நாளில் ஆவியானவர் இறங்கி வந்தார். அத்தனைச் சீடரும் அந்நிய பாஷையில் பேசும் கிருபை வரம் பெற்றனர். மிகப்பெரும் எழுப்புதல் பூத்து மலர்ந்தது. அன்றுமுதல் ஆவியானவரின் அரும்பணி அளவில்லாமல் நடந்தேறியது.

ஆம், துதிக்கும் கிறிஸ்தவனை இன்றும் ஆவியானவர் கரத்திலெடுக்கின்றார். அசாதாரண வரங்களை அவன் மூலம்

வெளிப்படுத்துகின்றார். ஆம், ஆவியின் வரங்கள் உங்களில் அதிகமாய் வெளிப்பட வேண்டுமா? ஆவியின் நிறைவு உங்கள் வாழ்க்கையில் அவசியம் தேவையா? ஆதிச் சபையைப் போல அனுதினமும் தேவனைப் புகழ்ந்து துதிக்கப் பழகுங்கள்! உன்னதத்திலிருந்து வரும் பெலனால் கட்டாயம் தரிப்பிக்கப்படுவீர்கள். உங்களைப் போலவே வல்லமைக்கு ஏங்கித் தவிக்கும் சீடர்களோடு சேர்ந்து, துதிக்க நேரம் எடுங்கள். இன்றைய சபை ஆராதிக்கப் பழகிவிட்டால் ஆவியின் அருள்மாரி அளவின்றி ஊற்றப்படும் என்பது நிச்சயம். பரிசுத்த ஆவியின் வரங்களும் ஆராதிக்கும் சபைகளில் அனுதின அனுபவமாகி விடும். இது மறுக்க முடியாத உண்மை! ஆதிச் சபையினர் கூடும்பொழுதெல்லாம் ஆராதிக்க அதிக நேரம் எடுத்தனர். அதனால்தான் அப்போஸ்தலர் நடபடிகளை **ஆவியானவரின்நடபடிகள்** என்பார்கள்.

அந்தியோகியாவில் ஆவியானவர்

அந்தியோகியாவில் தீர்க்கதரிசிகளும், போதகர்களும் கூடி தேவனை ஆராதித்துக் கொண்டிருந்தனர். தங்களைக் குறித்த தேவ சித்தம் அறிய விரும்பினர் போலும். எந்தச் சூழ்நிலையில் ஆவியானவர் அவர்களோடு பேசினார் என்பதை நமக்காக எழுதி வைத்திருக்கின்றார். "அவர்கள் **கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது:** பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த **ஆவியானவர் திருவுளம் பற்றினார்."** (அப்.13:2)

ஆதிச் சபைத் தலைவர்கள் ஆராதனை செய்வதற்காகவே சில நாட்களாக உபவாசித்தனர். ஆராதனை செய்யும்போது நமது ஆவிக்குரிய காதுகளும், கண்களும் திறக்கப்படுகின்றன. ஆவியானவர் அழகாக திருவுளம் பற்றத் துவங்குவார்! இந்த அந்தியோகியா சபையின் ஊழியர்கள் ஆராதனை செய்தபோது ஆவியானவர் இறங்கி அவர்களோடு பேசினார். இன்றும் ஆவியானவர் குரல் கேட்க விரும்பினால் ஆராதனையில் அதிக நேரம் செலவிடுங்கள். அருள் மாரி என ஆவியானவர் உங்களில் வந்து நிரம்புவார்.

கொரிந்து சபையில் ஆவியானவர்

கொரிந்து சபை ஒரு குழந்தை சபைதான். ஆனால் அவர்கள் ஆவிக்குரிய வரங்களை அப்பியாசித்தார்கள். ஒவ்வொருமுறை அவர்கள் கூடும்பொழுதும் ஆராதனையும் ஆவியின் வரங்களும் அதிகமாய்க் காணப்பட்டது. அவர்களுக்குப் பவுல் எழுதுவதைக் கவனியுங்கள்.

"நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நிய பாஷையைப் பேசுகிறான். ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்து

கிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்". வெளிப்பாட்டு வரங்களும், போதக வரமும், பாஷை வரங்களும் வெளிப்படுமுன்பு சங்கீதங்கள் பாடி தேவனைத் துதித்தார்கள். என்னுடைய ஊழிய அனுபவத்தில் துதியிலும் தொழுகையிலும் அதிக நேரம் செலவிட்ட போதெல்லாம் ஆவியானவரின் இனிய பிரசன்னம் கூட்டத்தில் விடுதலையோடு இறங்கிவருவதைக் கண்டிருக்கிறேன். கர்த்தருடைய செய்தி வல்லமையோடு வெள்ளமெனப் புறப்பட்டு வருவதை நான் உணர்ந்திருக்கின்றேன். இத்தகு ஆராதனை நிறைந்த இடத்தில் தீர்க்கதரிசனங்களும், வெளிப்பாடுகளும் எளிதாக வெளிப்படுவது அதிக நிச்சயம். வியாதியஸ்தர்கள், ஆராதிக்கும் பொழுதே சுகம்பெறுவதும் உண்டு. பலநாள் ஜெபம் பண்ணியும் கிடைக்காத பதில்களை, உங்கள் துதி ஸ்தோத்திரத்தின் மூலம் உடனடியாய் பெற்றுக்கொள்ள முடியும். ***"ஜெபம், கேட்டுக் கொண்டிருக்கிறது, ஆனால் துதி, அவைகளை எடுத்துக்கொள்கிறது"*** என்றார் ஒருவர். ஆம், ஒரு நல்ல ஊழியன் தேவனிடமிருந்து செய்திகளைக் கொண்டு வருகிறான். ஒரு நல்ல ஜெபவீரன் தேவனிடமிருந்து பதில்களைக் கொண்டு வருகிறான். ஒரு நல்ல ஆராதனை வீரனோ தேவனையே அழைத்து வந்து நேரில் நிறுத்திவிடுகிறான்! தேவனே இறங்கி நேரில் வந்துவிட்டால் தேவைகள் சந்திக்கப்படாமல் இருக்க முடியுமா? தேவைகளை சுற்றிவருவது ஜெபம். தேவனையே சுற்றிவருவது ஆராதனை! தேவனை சுற்றி வட்டமிடும் போது தேவன் சூழ்ந்து நின்று பாதுகாப்பது திண்ணம்.

ஆம், தேவாதி தேவனின் திவ்விய பிரசன்னம் வேண்டுமா? துதியோடு அவர் பிராகாரத்திற்கு துரிதமாய் வாருங்கள். ஆராதனையோடு அவர் சன்னதியை அவசரமாய் அடையுங்கள். அப்போது தேவ பிரசன்னம் உங்களைத் தேடி வந்து ஆசீர்வதிக்கும்! தேவனை இடைவிடாமல் துதிக்கப் பழகினவன் செல்லுமிடமெல்லாம் தேவ பிரசன்னத்தை தம்மோடு கொண்டு செல்லுகின்றான். இந்த அனுபவத்திற்குள் இன்றே ஆர்ப்பரித்து நுழைந்துவிடுங்கள்!

6. எந்த காலத்திலும் எந்த நேரத்திலும்

தேவனைத் துதித்து இன்புறுவது எப்போதும் எளிதானதல்ல. சில வேளைகளில் ஆராதிப்பதும் துதிப்பதும் மிகக் கடினமாய்த் தோன்றும். இந்தச் சூழ்நிலையில் தேவனைத் துதிப்பது இயலாது என்று மனம் சொல்லும். சில சமயம் மனதில், மகிழ்ச்சியின் துளிகள் எள்ளளவும் காணப்படாது. வாழ்க்கை வறட்சியாகத் தென்படும். தேவனைத் துதிப்பது என்று நினைத்தாலே வேம்பாய்க் கசக்கும். இத்தகு வேளையில் மனதைத் திடப்படுத்திக்கொண்டு, பிடிவாதமாய்த் தேவனைத் துதிப்பதுதான் விசேஷம். இதுதான் **பலியிடுவது** போன்றது. பலியிடுவது பிரியமான தொழில் அல்ல. தான் வளர்த்து பராமரித்த ஆடு மாடுகளை வெட்டி பலியிடுவது மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கும் காரியம் அல்ல. ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளின் இரத்த வெள்ளத்தைக் கண்டு இன்புற முடியுமா? நிச்சயமாய் முடியாது. ஆபிரகாம் தனது அருமை மகன், ஏக புதல்வன் ஈசாக்கை பலிபீடத்தில் கிடத்தினான். அள்ளி எடுத்து, அம்புலி காட்டி, அமுதுஊட்டிய தனது சொந்தக் கைகளினாலேயே, தான் தள்ளாத வயதில் பெற்றெடுத்த தவப்புதல்வனை, தனக்கென்றிருந்த ஒரே மகனை ஆபிரகாம் பலியிடத்துணிந்தான். இந்தக் காரியம் மகிழ்ச்சிக்குரியதாய் இருக்க முடியுமா? ஆம், இந்நிலையில் கர்த்தருக்குள் களிகூருவதும் துதிப் பாடல்களைப் பாடுவதும் கூடாத காரியம்தான். ஆனாலும் தன் முழு மனதையும், முழு சிந்தனையையும் ஆராதனையில் உடைத்து ஊற்றி, "தனக்குப் பிடித்தமில்லாதபோதும் பிதாவைப் பிரியப்படுத்துவதுதான் பெரிதான ஆராதனை". இந்த ஆராதனை தேவனுக்கு உகந்த சுகந்த வர்க்கமாய் இருக்கும். இந்த இரகசியத்தை அறிந்து கொண்டவன் ஆபிரகாம்.

வேதம் ஒருபோதும் துன்பமில்லாத கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வாக்களிக்கவில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு பஞ்சு மெத்தையல்ல. 'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு' என்றார் நமது அருமை இரட்சகர். அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்றார்கள் ஆதி அப்போஸ்தலர். தன் நேசர் இயேசுவின் மேல் சார்ந்தே, துன்ப வனாந்தரத்தில் வாழ்பவள்தான் அவரது மணவாட்டி. நமது மணவாளன் இயேசு, நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலியிடப்படும் பாவ நிவாரண மிருகங்களை பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிப்பார்கள். நாமும் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளையத்துக்குப் புறம்பே புறப்பட்டுப் போகவேண்டுமாம். இதைக் குறித்து வேதம் சொல்வதைக் கேளுங்கள். "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப் போகிறதையே நாடித் தேடுகிறோம்.

ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய **ஸ்தோத்திரபலியை** அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்'' என்கிறது. (எபி.13:11-15) இவ்வுலக வாழ்க்கை நிரந்தரமானதல்ல. எதிலும் நம் உள்ளம் திருப்தியடைந்துவிடக்கூடாது. தம் பிள்ளைகள் தம்மிலே திருப்தியும், மகிழ்ச்சியும் கொள்ள வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகின்றார். மற்றெதிலும் நமது மனம் மயங்கிவிடக் கூடாது. இந்தப் பாடத்தை நாம் கற்கும்பரியந்தம் அவர் நம்மை வெறுமையாக்குகின்றார். உலகத்தில் எதையும் சார்ந்துவிடக்கூடாதே என்பதற்காகவே ஏமாற்றங்களை அனுமதிக் கிறார். துன்பங்கள், துயரங்கள், மனக்காயங்கள், மலைப்புகள், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், வேதனைகள், சோதனைகள், சாத்தானின் சதிகள், உறவு முறிவுகள், உள்ள பாரங்கள் நமது வாழ்க்கையில் குறுக்கிடத்தான் செய்யும். இத்தகு நேரத்தில் எபிரேயர் 13:14,15 வசனங்களை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். நிலையான நகரம் நமக்கு இங்கு இல்லாததால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய **ஸ்தோத்திர பலியை** எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்திப் பழக வேண்டும். தற்காலிக உலகத் துன்பங்கள் நமது துதியின் வாழ்க்கையைத் தகர்த்துவிடக்கூடாது. அதனால்தான் எபிரேயர் ஆசிரியர் நிந்தை, புறக்கணிப்பு என்பதோடு, ஸ்தோத்திரப்பலியிடுவதை இணைத்துப் பேசுகிறார். ஆம், **ஸ்தோத்திரம் என்பது ஒரு வகை பலிதான்!** இந்தப் பலியை எப்பொழுதும் தேவனுக்கு செலுத்துபவன் இயேசுவையே தனது ஆனந்தமும், மகிழ்ச்சியுமாக எண்ணி மதிக்கிறான். அவனது உள்ளக் கிளர்ச்சியும், மன மகிழ்ச்சியும் தேவனிடமிருந்தே வருகின்றது. தேவனே எல்லா ஆனந்தத்துக்கும் வற்றாத நீரூற்றானவர். அவனது ஆறுதலை அவரிடமிருந்தே பெறுகின்றான். ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் அவனது சமாதானமும், ஆனந்தமும் மாறுவதில்லை. "எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் நன்றியால் உம்மை நான் துதிப்பேன்'', என்று உணர்ச்சிமிகு பாடல் பாடுவான். எந்தச் சூழ்நிலையிலும் நமது இதயத்தை இன்ப வெள்ளத்தில் மூழ்கடிக்க இயேசு போதுமானவர்! "மனிதர் என்னைக் கைவிட்டாலும் மாமிசம் அழுகி நாறிட்டாலும், ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும், ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும் இயேசு போதுமே'', என்று நன்றி அறிதலோடு நாவிசைத்து புகழ்ந்து பாடுவதுதான் 'ஸ்தோத்திர பலி' என்பது.

தாவீதின் துதிப்பலி

இவ்வாறு ஸ்தோத்திரப் பலியிட்ட பரிசுத்தவான்கள் வேதத்தில் பிரகாசித்தார்கள். எல்லாம் சாதகமாகும் நிலையில் அல்ல, பாதகச் சூழ்நிலையிலும் பாட்டுப் பாடினார்கள். **ஆராதனை வீரன் தாவீது** இவ்வித பலிகளையிட்டுத்தான், தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்

என்று பாராட்டப்பட்டான். அவனது தீர்மானங்களையும் அனுபவங்களையும் தியானித்துப் பாருங்கள். தேவனைத் தொழுதுகொண்ட வீரர்கள் உங்களைப் போல் பிரச்சனைகளை அனுபவிக்காதவர்கள் என்று நினைக்காதிர்கள். ஆயிரக்கணக்கான ஆராதனைப் பாடல்களைப் பாடின தாவீது உங்களைப் போல ஆயிரம் மடங்கு வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்தவன். அவனது குடும்பத்திலும் அவன் ஏளனமாய் எண்ணப்பட்டவன். அவனது தகப்பன், தனது ஏழு குமாரர்களை சாமுவேலுக்கு முன்பாக ராஜ அபிஷேகத்திற்காக நிறுத்தினான். தனது எட்டாவது குமாரனை தேவன் தெரிந்து கொள்வார் என்று கிஞ்சித்தும் எண்ணாமலிருந்தான்.

ஆனால் தேவனோ அவனை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்! ஆவியானவர் நிறைவைப் பெற்ற பின்பும் அவனது வேதனை நீங்கியபாடில்லை. தன் உயிரைப் பணயம் வைத்து, கோலியாத்தோடு போராடிய பின்பும், அரசனால் துரத்தப்பட்டான். முழு இராணுவமும் அவனது உயிரை வேட்டையாட இரவும் பகலும் கழுகுகள் போல் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. மனம் நிறைந்த மனைவியை இழந்தான். உற்றதோர் துணையான நண்பனை இழந்தான். காடு மலையென களைத்து திரிந்தான். ஆனாலும் அவனது ஆராதனை அற்றுப் போகவில்லை. துதிப்பாடல்களை பாடிக் கொண்டே இருந்தான். தனிமையின் துயரில் தவித்தாலும், தேவன் மீதுள்ள நேசமும் பாசமும் அணுவளவும் தணிந்தபாடில்லை. வாழ்க்கையின் ஏமாற்றங்கள், அவனது துதியின் வல்லமையால் தூக்கியெறியப்பட்டது. ஏழ்மையைக் கண்டான். எப்பொழுதும் போர்க்களத்தில் நின்றுகொண்டிருந்தான். ஆனாலும் அவன் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்கப் படாமல், அந்த வெள்ளத்தை உன்னத ஆராதனையாக அணையிட்டு மாற்றினான். தன்னுடைய வேதனை உணர்ச்சிகளின் வேகத்தில் அவன் அடித்துச் செல்லப்படவில்லை, அவைகளின் நடுவில் கர்த்தரைத் துதித்தான். இதைத்தான், 'ஸ்தோத்திரபலி' என்கிறேன். வேதனையின் கொடுமுடியிலும் தேவனைத் துதிக்கும் பக்குவத்தை அவன் பெற்றிருந்தான். ஆராதனை எனும் தெப்பமேறி துன்பம் எனும் ஆழ்கடலைக் கடந்தான். கரைஏறினான், களிகூர்ந்தான்!

காத்தின் ராஜாவாகிய ஆகீசுக்கு பயந்து நடுங்கி அவன் முன்பாக பித்து பிடித்தவன் போல் பிதற்றி, வாசல் கதவுகளில் தன்னைக் கீறிக்கொண்டு, தன் வாயிலிருந்து நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணிக்கொண்டிருந்து அரசனால் துரத்திவிடப்பட்டபோது அவனது மனநிலைமை எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். ஆனாலும் அந்த நாளில் அவன் பாடிய பாடல் இன்றும் நம்மை துதியின் வாழ்க்கைக்கு சவால் விட்டழைக்கிறது. அவன் அன்று

பாடின பாடல் என்ன தெரியுமா? அதுதான் 34-ஆம் சங்கீதம். "**கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்**" என்று துவங்கி ஒரு அழகிய துதிபாடல் பாடினான். "இனிப்புத் தண்ணீர் பாட்டிலை எவ்வளவு குலுக்கினாலும் அதிலிருந்து வெளிப்படும் துளிகள் இனிக்குமேயன்றி கசக்காது'. என்றார் ஏமி கார்மைக்கேல் அம்மையார். ஆம், தேவனைத் தங்கள் இதய நாயகனாய்க் கொண்டு, அவரைத் தன் நம்பிக்கையாய்க் கொண்டவனை எவ்வளவு பிரச்னைகள் மோதி குலுக்கினாலும் அவன் நாவில் துதியொலிதான் கசிந்து வரும். இப்படிப்பட்ட வாழ்க்கை சுலபமாக வந்துவிடாது. தாவீதைப்போல் நல்ல தீர்மானம் எடுக்க வேண்டும். கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். துன்ப காலத்திலும் இன்ப காலத்திலும் அவர் துதி என் வாயிலிருக்கும் என்று பிடிவாதமாய் நிற்கவேண்டும். சுய சித்தத்திற்கு விரோதமாய் நின்று துதி செலுத்த வேண்டும்.

தாவீதுக்கிருந்த சத்துருக்கள் ஏராளம் ஏராளம். அவனது உள்ளமோ அதைக்கண்டு பதறவில்லை. **அவனது துதிக்கும் தீர்மானம்தான் அதற்குக் காரணம்.** அவனைச் சுற்றி பகைவர் பாளையம் இறங்கியபோதும் அவன் பயமின்றி துதிப்பாடல் பாடினான். அவனது விசுவாசத்துக்கு இராகம்போட்டு, விசுவாச அறிக்கையை துதிப் பாடலாக்கினான். `கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன்,' என்று வெற்றி முரசம் கொட்டினான். சத்துருக்களின் வார்த்தைகளையும், சூழ்ச்சிகளையும் தியானிக்காமல், கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும் தன் மனதை முற்றிலும் ஈடுபடுத்தினான். விக்கினம் சூழ்ந்தபோது விடுதலையைப் பாடினான். சத்துருக்கள் நடுவில் கர்த்தருக்காக சங்கீதம் பாடினான். வெளியே ஆனந்தம் கொள்ள ஒன்றுமே இல்லாதபோது, உள்ளே இருந்த ஆனந்த வெள்ளத்தை, மடைதிறந்து ஓட விட்டான். "**இப்போழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும். "அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்**", என்றான். இந்த வசனத்தைச் சற்று ஆழமாய் ஆய்ந்து பாருங்கள். அவனைச் சுற்றிலும் சத்துருக்களின் கூட்டம்! அவனோ சங்கீதம் பாடுகிறான். அப்பப்பா! எப்படிக் கூடும்? அனைத்திற்கும் பெரியவர் மீதிருந்த, அவனுக்குள்ள பெரும் பிடிப்புதான் என்னே! அவனது தலை உயர்த்தப்படும் என்று அவனுக்கிருந்த அழுத்தமான விசுவாசம்தான் பாடலாய் வடிவெடுத்தது. அதினால் ஆனந்த பலிகளையிட அவனால் முடிந்தது. துன்ப நேரத்தில் இன்பப் பாடல் பாடுவதும் ஒருவகை பலியிடுதல்தான். இதை **ஆனந்த பலி** என்கிறான்

தாவீது. **வேதனை உணர்ச்சிகளை மிதித்து, சோதனைகளை ஜெயித்து வெற்றிப் பாடல் பாடுவதுதான் ஆனந்த பலி.** இவைகளில் தேவன் பிரியம் கொள்கிறார். ஆனந்தம் இல்லாதபோது தேவனுக்காக ஆனந்தப் பாடல் பாடுவதுதான் "ஆனந்தபலி"!

ஆபகூக் ஆனந்த பலி

ஆபகூக் தீர்க்கதரிசி இவ்வித ஆனந்த பலிகளையிட்டவன். அத்திமரம் துளிர்விடாமல் போனாலும் ஆண்டவருக்குள் அவனுக்கிருந்த மகிழ்ச்சி பூத்துக் குலுங்கினது! திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமல் போனாலும் அவனது இருதயத்தைக் கர்த்தர் மகிழப் பண்ணினார். ஆவியானவரின் திராட்சைரசம் அவனை பேரின்ப வெள்ளத்தில் மயங்கச் செய்தது. ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், அவனுக்குள்ளிருந்த ஆனந்த தைலம் அவனது முகத்தில் ஆனந்த களையைத் தோற்றுவித்தது. வயல்கள் தானியத்தை விளைவியாமல் போனாலும், நீதிமானுக்கு அப்பம் தரும் நிமலனைப் பார்த்து நிம்மதியடைந்தான். கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடுகள் இல்லாமற் போனாலும், ஆடுகளின் நல்ல மேய்ப்பன், தனது ஐசுவரிய சம்பன்னர் என்று ஆர்ப்பரித்தான். எந்தக் குறைவிலும் **"நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்"** (ஆபகூக் 3:18) என்று பாடினான். இதுதான் தேவனுடைய உள்ளத்தைப் பரவசப்படுத்தும் 'ஆனந்தபலி' என்பது! இந்த ஆனந்தப்பலிகள்தான் ஸ்தோத்திர பலிகளாக மாறுகின்றன!

அருமையானவர்களே, இவ்வித ஸ்தோத்திர பலிகளை எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்தத் தீர்மானிப்பீர்களா? வேதனை உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் இருப்பீர்களா? "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி; நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய் என்று உங்களுக்கு நீங்களே புத்தி சொல்லிக் கொள்வீர்களா? " இதுதான் தேவனை உருக்கும் ஸ்தோத்திர பலியென்பது! வேதம் முழுவதிலும் நமது தேவன் பலிகளைத் தேடினார். அந்தப் பலிகள் நம்மைப் பாதிக்க வேண்டும். இப்படி நீங்கள் துதிக்கும்போது கர்த்தர் தமது வல்லமை பராக்கிரமத்தோடு எழும்பி உங்களுக்கு அற்புதம் செய்வார்.

பவுலின் பாடல் பலி

புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் பவுலும் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாவான். தேவனுக்கு ஸ்தோத்திரப்பலியிட்ட தியாகி அவன். கட்டப்பட்டு சிறைச்சாலையில் கிடந்தபோதும் சந்தோஷப்படுங்கள் என்று கடிதம் எழுதினான். பிலிப்பு பட்டணத்துச் சிறைக் காட்சியை யார்தான் மறக்கமுடியும்? தன்னைச் சூழ காரிருள்!

கைகளிலும் கால்களிலும் விலங்கு கட்டுகள்! எதிரிகள் கூட்டம் எட்டுத் திக்கும்! உடல் முழுவதும் காயங்கள்! நடுத்தெருவில் செத்த நாய்களைப்போல் இழுத்துவரப்பட்ட அவமானம்! கிழிந்த ஆடைகள்! கன்னங்களில் பாய்ந்தோடும் கண்ணீர்த் துளிகள்! தடைபட்ட ஊழியம்! தனக்காக வழக்காட ஒருவரும் இல்லையெனும் தனிமைத் துயரம்! இந்தச் சூழ்நிலையில் துதிப்பாடல் பாட முடியுமா? ஆனந்தப் பலிகளிடும் நேரமா இது? அப்பப்பா, யாரால் இத்தகு கொடிய சூழலில் குதூகலித்து பாட முடியும்? ஆனால் பவுலும் சீலாவும் சத்தமிட்டுப் பாடின துதிப்பாடல் விண்ணைப் பிளந்தது. காவல் கைதிகள் அத்தனைபேர் காதுகளையும் துளைத்தது. ஆம், தேவனைத் துதிப்பது வெறுமனே உணர்ச்சிகளைச் சார்ந்ததல்ல. இது மனதில் கொண்ட தீர்மானத்தால் மலர்வது. தேவன் மீதுள்ள விசுவாசத்தால் மட்டுமே விளைவது. சில வேளைகளில் கண்ணீர் பொங்கக் கதறியழும்போதும், வாயில் துதிகள் வரும்! இதுதான் பலி! இத்தகு வேளைகளில் நாம் செலுத்தும் ஸ்தோத்திரங்கள் அளவிடமுடியா அற்புதங்களைச் சாதிக்கும்! பவுல் இப்படிப்பட்ட துதியினை ஏறெடுக்கக் காரணம் என்னவென்று நினைக்கின்றீர்களா? அவன் தேவ சித்தத்தை அறிந்தவன். "**எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது**" என்பதை அறிந்து, அவர் சித்தம் செய்ய துணிவு கொண்டவன் அவன்! (1 தெச.5:16-18) தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்து கொண்டவன் அவன்! இத்தகைய அறிவு உங்களுக்கு உண்டா? இப்படி பவுல் சொல்லும்போது, எல்லா பிரச்சனைகளும் தேவன் கொடுப்பது; ஆகவே எல்லா வியாதிகளுக்கும், சோதனைகளுக்கும் அவரை ஸ்தோத்திரம் செய்யுங்கள் என்று பொருள் அல்ல! எல்லா பாடுகளின் நடுவிலும் பரமனை ஆளுநராகக் கண்டு, அவர் சகலத்தையும் நன்மையாக மாற்றுவார் என்று மதித்து துதிப்பதைத்தான் இது குறிக்கும். "**உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, நாசமோசமோ கிறிஸ்துவின் அன்பை விட்டு ஒருபோதும் பிரிக்காது என்றும், இவை எல்லாவற்றிலேயும் நாம், நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே!" என்று விசுவாச முழக்கமிடுபவர்தான்** 'துதி வீரராக' பிரகாசிக்க முடியும்.

அருமையானவர்களே, மாறுபட்ட சூழ்நிலையையும், மன்னர் இயேசு ஆளுகை செய்கின்றார். அவர் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பு வரையறுக்க முடியாதது. துன்ப நேரங்களில் துங்கவன் மீது கவனம் செலுத்துங்கள்! கொடிய சூழ்நிலையிலும் கொற்றவனை துதித்துப் பழகுங்கள்! உலகம் புலம்பிக் கொண்டிருக்கிறது. நீங்களோ அவரது புகழ்பாடி பூரித்து மகிழுங்கள்! ஜீவ ஊற்றாகிய

அவரிடமிருந்தே உங்கள் ஆறுதலையும், மகிழ்ச்சியையும் கொண்டு கொள்ளுங்கள். நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; விடுவிக்காமல் போனாலும் அவருக்கு பிரியமான ஆராதனைப் பலிகளையிடுவேன் என்று தீர்மானியுங்கள்! உங்களையே ஜீவ பலியாக ஒப்புவித்து புத்தியுள்ள ஆராதனை செய்ய பிரதிக்ஞை எடுங்கள். யோனாவைப் போல மீனின் வயிற்றில் சிக்கித் தவித்தாலும், பாதாளத்தின் வயிற்றில் புதையுண்டிருந்தாலும் பரமண்டல நாதனைப் பாடிப் புகழுங்கள். யோனாவின் ஆத்துமா தொய்ந்து போனபோதும் **"நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்" என்று ஆனந்தப் பள்ளு பாடினான். (யோனா 2:9)** இதுதான் துதியின் பலி! யோனா துன்ப நேரத்தில் துதி பாடினான். அற்புதம் நிகழ்ந்தது! ஆம் துன்ப நேரத்தில் நாம் இடும் ஸ்தோத்திரப் பலிகளைக் கர்த்தர் கண்டு மனதுருகி மகத்தான அற்புதங்களைச் செய்து காட்டுவார்!

வேதாகமப் பக்தர்கள் கடந்து சென்ற பாதைகளினூடே நீங்கள் நடந்து செல்லலாம். இத்தகு நேரத்தில் அவர்களைப்போல துதித்து வெற்றி வாகை சூடுங்கள். இன்றே அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய **ஸ்தோத்திரப் பலியை** அவர் மூலமாய் **எப்போதும்** தேவனுக்கு செலுத்தத் துவங்கிடுங்கள்! காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள் நீங்கள்! விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நீங்கள் ஸ்தோத்திர பலிகளையிட்டுத்தான் ஆகவேண்டும்!

ஆண்டவரே, உற்சாகத்துடன் நான் உமக்குப் பலியிடுவேன், உமது நாமத்தைத் துதிப்பேன். ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, உம்முடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பேன் என்று இன்றே தீர்மானம் செய்யுங்கள்! அப்போது தேவாதி தேவனின் திவ்விய மகத்துவத்தைக் காண்பீர்கள்!

7. ஆராதனை ஒரு போராயுதம்

நாம் ஒவ்வொருவரும் மாபெரும் ஆவிக்குரிய போராட்டக் களத்தில் நிற்கிறோம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்த நிமிடத்திலேயே நமக்கெதிராக அசுத்த ஆவிகளின் சேனைகள் போரிட தயார்நிலையில் இருக்கின்றன. இது ஒரு மாமிசப் போராட்டம் அல்ல. "**ஏனெனில் நமது போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல**". நமக்கெதிரே துரைத்தனங்களும், அதிகாரங்களும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் அணிவகுத்து நிற்கின்றன. ஆகவே நமது போராயுதங்களும் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாய் இருக்க வேண்டும். தேவனே இதற்கு தமது சர்வாயுதவர்க்கத்தை அருளுகின்றார். ஆனால் இத்தனை ஆயுதங்களையும் ஆராதனையோடு இணைக்கும்போது மிகப்பெரும் வெற்றி நமக்கு சொந்தமாகும். ஆராதனை எனும் ஆயுதம் ஆவிக்குரிய போரில் அவசியமானதும், ஆற்றல் வாய்ந்ததும் ஆகிய அனுகூலமான பேராயுதம் ஆகும்!

ஆராதனையின் சத்துரு

ஆராதனையை சாத்தானால் சகித்துக்கொள்ள முடியாது. தேவனை நாம் கொண்டாடும்போதெல்லாம், சாத்தானின் சேனைகள் செய்வதறியாது திண்டாடி விழிக்கின்றன. சாத்தானுடைய வீழ்ச்சியே இங்குதான் துவங்கியது. ஆதியில் சாத்தான் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியாய் தேவ சமுகத்தில் மேள வாத்தியங்களோடும், நாகசுரங்களோடும் தொழுது கொண்டிருந்தவன். (எசேக்.28:13) ஆனால் ஒருநாள் அவனை இறுமாப்பு எனும் பெருநோய் பற்றிக்கொண்டது. அவன் "**நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வட புறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்.... உன்னதமானவருக்கு ஒப்பாவேன்**" " (ஏசா.14:13-14) என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போகச் செய்தார். ஆதியில் தேவனுக்குச் செய்த ஆராதனையைக் கண்டு அதை இச்சித்து விழுந்தவன் அவன். அன்றுமுதல் இன்றுவரை 'தேவனுக்கு ஆராதனை' என்றால் அவனுக்கு ஆகாததாயிருக்கிறது. தேவ ஆராதனையை தன் பக்கம் திருப்ப காலமெல்லாம் பாடுபட்டான். மக்களை; மாமிசம், உலகம், செல்வாக்கு என்பவைகளைக் காட்டி, மெய் தேவ வணக்கத்தை விட்டு தன்னை வணங்கும்படிச் செய்வது அவனது மிகப்பெரிய தந்திரம். இன்று உலக நாடுகள் விக்கிரக ஆராதனையில் சிக்குண்டு மீளமுடியாமல் இருப்பது இவனது தந்திரத்தால்தான். சில நாடுகளை, தங்களது செல்வச்

செழிப்பையும், மாமிச இச்சைகளையும், வணங்கும்படித் தூண்டுகிறான். இதன்மூலம் மக்களைத் தன்னைத் தொழுதுகொள்ளும்படிச் செய்கிறான். ஆதாமின் காலம் முதல் தேவனை ஆராதிக்கும் மக்களை அடியோடு அழித்துவிட முயன்றும் படுதோல்வியினை சந்தித்தான். ஆதாமை தேவனிடத்தினின்று திசை திருப்பி, தன்னை வணங்கும்படிச் செய்தான். ஆனால் ஆபேல் கர்த்தருக்குப் பிரியமான பலியைச் செலுத்தி ஆராதித்தான். அந்த ஆராதனை வீரனைக் கொலை செய்வதற்காக காயீனைக் கைக்கூலியாக்கினான். **"பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீன்"** என்று (1யோவா. 3:12) வேதம் அவனை விமர்சிக்கிறது. ஆபேலின் ஆராதனையைக் கண்ட சாத்தான் ஆத்திரம் அடைந்தான். காயீனை ஏவி எழுப்பி, ஆபேலை அழித்தான். ஆனால் தேவனோ சேத்தை எழுப்பி தமது ஆராதனை சந்ததியை உருவாக்கினார். **"சேத்துக்கும் ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்".** (ஆதி.4:26) சாத்தானுக்கு இதிலும் படுதோல்விதான். இந்த ஆராதனை வம்சத்தில் ஏனோக்கு, நோவா போன்ற தேவனுடைய நண்பர்கள் எழும்பினார்கள். இவர்களது சந்ததியைக் கறைபடுத்த சத்துரு கருதினான். தேவனோ நோவாவின் குடும்பத்தை மட்டும் பாதுகாத்து சாத்தானுக்கு தோல்வியைத் தேடித் தந்தார். அவனது வரிசையில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் தொழுகை வீரர்களை எழுப்பினார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த விடிவெள்ளியின் மகனாகிய சாத்தான், தேவனை ஆராதிக்கும் கூட்டத்தினருக்கெதிராக செயல்பட்டான். தனது படைகளை அனுப்பி அவர்களை பழிதீர்க்கப் பார்த்தான். தேவனோ தமது மக்களுக்காக யுத்தம் பண்ணி வெற்றி விழா காணச் செய்தார்! தேவன் தமது மக்களுக்குக் கொடுத்த போர் முறைகளில் எல்லாம் மிகச் சிறந்த முறை ஆராதனையும், ஆரவாரமும்தான். **எந்த ஆராதனையை சத்துரு களவாடப் பார்த்தானோ, அந்த ஆராதனையைக்கொண்டே அவனது தந்திரங்களை தேவன் முறியடிக்கின்றார்.**

ஆரவாரம் எரிகோவை விழத்தள்ளிற்று

ஆராதனை எதிரியை வீழ்த்தும் **போர் ஆயுதம்** என்பதற்கு இது ஒரு அழகிய சித்திரம். தேவ மக்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமிக்கு வந்து விட்டார்கள். கானான் தேசத்துப் பலனை புசிக்கத் துவங்கின வேளை. ஆனால் எரிகோ நாட்டு மன்னனும் மக்களும் நடுங்கிப்போய் எரிகோவின் உயர்ந்த வாசலை இறுக்கமாய் பூட்டிவைத்தனர். ஒருவரும் வெளியே போகவும் உள்ளே செல்லவும் முடியவில்லை. எரிகோ மன்னனின் பீதியும் அச்சமும்தான் அதற்குக் காரணம் என்பதை ஆகாப் வேசியின் வார்த்தையின் மூலம் அறியலாம்.

வேவு பார்க்கச் சென்றவரிடம் அவள் கூறுவதைக் கவனியுங்கள். "கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன்..... எங்கள் இருதயம் கரைந்து போயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப் போயிற்று." (யோசு.2:9-11) இந்தத் திகிலும், மனச்சோர்வும்தான் எரிகோ ராஜாவை ஆட்டிப் படைத்தது. இதனால்தான் எரிகோவின் வாசலை மூடிப்போட்டான்.

இன்றும் நமது போராட்டம் இதுபோன்றதுதான். வாக்குத்தத் தங்களைச் சுதந்தரிக்க வேண்டியவர்கள் நாம்! கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்கும் உரிமைக்காரர்கள் நாம்! பாலும் தேனும் ஓடுகிற கானானைப் போல, நமக்குள்ளிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓட வேண்டிய அனுபவத்திற்கு சுதந்திரவாளிகள் நாம்! வெற்றி வாழ்க்கையும், சரீர சுகமும், பொருளாதார ஆசீர்வாதங்களும், ஊழிய வல்லமையும், ஆவிக்குரிய கனிகளும் வரங்களும் பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் நாம்! ஆனால் இன்னும் நாம் பெற வேண்டிய அளவுக்கு அவைகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம், எரிகோவின் மதில் பூட்டப் பட்டிருக்கிறது. தேவன் எரிகோவை இஸ்ரவேலருக்கு கையளித்த பின்பும் அவற்றை அரசன் பூட்டிவிட்டது போல, தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை அளித்தபின்பும் அவற்றை அடையமுடியாதபடி இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் தடையாய் நிற்கின்றன. வீரத்தால் அல்ல, விவேகத்தாலும் அல்ல. நம்மைக் கண்டு வரும் அச்சத்தால் அவைகள் அப்படிச் செய்கின்றன. கிறிஸ்துவின் சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளாது என்பது குறித்தும் அவைகள் அறியும். (மத்.16:18) தேவனுடைய சபை வீறு கொண்டு முன்னேறி அவைகளை மோதும்போது அந்த வாசல்கள் உடைபட்டுப்போகும் என்பதும் இந்த ஆவிகளுக்குத்தெரியும். ஆனாலும் தனது முயற்சியைக் கைவிடாமல், எரிகோ மதில் போல நமக்கு எதிரிட்டு நிற்கின்றன.

வெற்றியின் இரகசியம்

யோசுவாவுக்கு தேவன் கொடுத்த வெற்றியின் இரகசியங்களைக் கூர்ந்து கவனியுங்கள். எரிகோ மூடப்பட்ட நேரத்தில் கர்த்தருடைய சேனாதிபதி உருவின பட்டயத்தோடு அவனுக்கு எதிரே நின்றார். யோசுவா அவரை ஏறிட்டுப் பார்த்தான். இந்தப் பார்வைதான் இன்று நமக்கும் வேண்டும். எரிகோ மதிலையும், மன்னனையும், அவனது சேனைவீரரையும் பார்ப்பதைவிட்டு, சேனையதிபனாம் கர்த்தரைப் பார்க்கும் பார்வை நமக்கு வேண்டும். கர்த்தருடைய சேனாதிபதி என்று அறிந்ததும் யோசுவா முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டான். அதுபோலவே நாமும் நமது சேனை அதிபனைக் கண்டு

சிரம் தாழ்த்தி பணிய வேண்டும். ஆவிக்குரிய போராட்டத்துக்கு முன்னே ஆண்டவரைக் கண்டு பணிந்து கொள்ள வேண்டும். கொந்தளிக்கும் ஜாதிகளையும், கொக்கரிக்கும் ராஜாக்களையும் கண்ட தாவீது உடனே சீயோன் பர்வதத்தில் வீற்றிருக்கும் ராஜாவைப் பார்த்தான், பணிந்தான், பாட்டுப் பாடினான். பாடுகளை மேற்கொண்டான். அதுபோல நாமும் பரமனைப் பார்த்து பாட்டுப்பாடி பணிந்து கொள்ள வேண்டும். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் (எதிரிகளைக் கண்டு) நகைப்பார். அதுபோல நாம் சத்துருக்களைக் கண்டு சஞ்சலப்படாமல்-மாறாக, நகைக்க வேண்டும். பின்னர் பரமனைப் பார்த்து பரவசப்பட்டு பாட்டுப் பாடவேண்டும். இதுதான் சத்துருக்களை மேற்கொள்ள எளிதான வழி. ஆம், சத்துருக்கள் சீறி எழுந்து ஆசீர்வாதங்களைத் தடுத்து நிறுத்தும் வேளையில், பட்டயம் உருவின சேனையதிபனைக் கண்டு பணிந்து கொள்ளுவதுதான் வெற்றியின் முதற்படி! தடைகளைத் தருபவனை விட்டு தடைகளைத் தகர்ப்பவரைப் பார்த்து தைரியம் கொள்ள வேண்டும்.

தன்னைப் பணிந்து கொண்ட யோசுவாவைப் பார்த்து, "உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்" சேனையதிபன்! ஆம், பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்வது எத்தனை அவசியம் பாருங்கள்! தன்னைப் பார்த்து நிற்கும் தலைவனைப் பார்த்து சேனையதிபர் சொன்ன யுத்த நுணுக்கங்களை ஆழ்ந்து தியானிக்க வேண்டும். தயவு செய்து இந்த வசனங்களை கருத்தாய் படியுங்கள்.

"இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன். யுத்த புருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒரு தரம் சுற்றி வாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக் கொண்டு போக வேண்டும்; ஏழாம் நாளில் பட்டணத்தை ஏழு தரம் சுற்றி வரக் கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்கள் ஊத வேண்டும். அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காள சத்தத்தைக் கேட்கும்போதும் ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக் கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழும். உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள்". (யோசு.6:2-5)

இதை அப்படியே யோசுவா செய்தான். ஆறு நாளும் தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஆசாரியர்கள் எக்காளம் ஊதிச் செல்ல, இராணுவ வீரர்கள் பின்தொடர்ந்து எரிகோவைச் சுற்றி வந்தார்கள். ஏழாம் நாளில் ஏழு முறை எக்காளத் தொனியோடு சுற்றி வந்து, ஏழாந்தரம் ஆசாரியர் தொனிக்கும்போது, ஜனங்கள் மகா

ஆரவாரத்தோடு முழக்கமிட்டார்கள். அலங்கம் இடிந்து விழுந்தது. வீரர்கள் பட்டணம் பிடித்தார்கள். சத்துருக்கள் முறிந்து விழுந்தார்கள்.

ஆம், சேனை வீரரே, இப்பாடத்தை படித்துக் கொள்ளுங்கள். எரிகோவின் ராஜாவையும், யுத்த வீரரையும் அன்று அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்த சேனைகளின் கர்த்தர், இன்று உங்கள் கையில் சாத்தானையும் அவனது குட்டிப் பிசாசுகளையும் கொடுத்துள்ளார். **"சர்ப்பங்களையும் (சாத்தான்) தேள்களையும் (பிசாசுகள்) மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது"** (லூக்.10:19) எனும் மாறாத தேவ வாக்கை மனதில் கொள்ளுங்கள். இந்த யுத்தத்தைப் பண்ணுபவர் உருவின பட்டயத்தோடு உங்கள் முன்னே செல்லுகின்றார். நீங்கள் இப்போராட்டத்தை கொண்டாட்டமாக்கலாம். இதுதான் விசுவாசப் போராட்டம்! இப் போராட்டத்தில் இஸ்ரவேலர் வெற்றி கொள்ளக் காரணமாயிருந்தது என்ன? கர்த்தருடைய பிரசன்னத்தைக் குறிக்கும் பெட்டி! அதற்கு முன்னே ஆராதனை செய்யும் ஆசாரியர் அணிவகுத்துச் செல்ல வேண்டும். முன்னே ஆராதனைக் காரர், அடுத்து உடன்படிக்கைப் பெட்டி. ஆம், **ஆராதனைக்காரர் முன்னே, ஆண்டவர் சமுகம் பின்னே,** தொழுதுகொள்ளும் கொம்பு, எக்காளம், இஸ்ரவேலரின் ஆர்ப்பரிப்பு! இவை தொடர்ந்து ஏழுநாள் நடக்க வேண்டும். இவைகள் நமது அறிவுக்கு எட்டாதவைகள்தான். இந்த ஏழு நாட்களும் இஸ்ரவேலர் செய்ததை அறிவாளிகள் எப்படி கணித்திருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள். ஆனால் தேவாதி தேவனின் ஞானம் பெரிது! அது குறித்து சிந்திக்க, நமது பிஞ்சு மூளைக்கு பெலனில்லை. இது என்ன? புரியாத புதிராய் இருக்கிறதே என்று கேட்க நமக்கு உரிமை இல்லை. சித்தம் செய்கின்றேன் என்று யோசுவா கரம் குவித்தான். ஜெயம் பெற்றான்! ஆசாரியர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். ஆம், இன்றைய சபையின் வெற்றி, ஆராதனைக்காரர் கைகளில் உண்டு. அவர்கள் கர்த்தருக்கு எக்காளம் ஊதினார்கள். இந்த ஆறு நாளும் போர் வீரர்கள் வாய் திறக்கவில்லை. கர்த்தருடைய பெட்டியின் மேல் கண்ணை வைத்து, எக்காள தொனி கேட்டு அணிவகுத்ததுதான் அவர்கள் செய்த வேலை. இந்த நாட்களில் ஒரு வேளை அவர்கள் வாயைத் திறந்திருந்தால் எரிகோவின் மதிலைக் குறித்துப் பேசியிருக்கலாம். பயமுள்ள வார்த்தைகள் புறப்பட்டு அவர்கள் விசுவாசத்தை பாழ்படுத்தியிருக்கலாம். சந்தேகமும், சஞ்சலமும், அவர்கள்ள முறுமுறுக்கச் செய்திருக்கலாம். இத்தகு சூழ்நிலையில் தேவ வல்லமை ஒருபோதும் வெளிப்படாது. உங்கள் சந்தேகப்பேச்சு, உங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களுக்குத் தடைக்கல்லாய் இருக்கும் என்பதை தயவுசெய்து மறவாதீர்கள். இந்த

சந்தேகத்துக்கு கைகண்ட மருந்துதான் துதியின் சத்தம். ஏழாம் நாள் ஆசாரியர் எக்காளங்களை ஊதுகையில் யோசுவா ஜனங்களை நோக்கி: "ஆர்ப்பரியுங்கள்; பட்டணத்தைக் கர்த்தர் உங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்" என்றான். ஆம், கர்த்தர் நம்மை ஆசீர்வதித்துவிட்டார் என்று ஆர்ப்பரிக்கும்போது அற்புதம் நடக்கின்றது. சிலுவையில் என்னுடைய நோய்களை சுமந்துவிட்டார் என்று ஆர்ப்பரித்து பாடும்போது அற்புத சுகம் கிடைக்கிறது. சாபங்களுக்காக இயேசு சாபமாகி, என்னை மீட்டுக் கொண்டார் என்று ஆர்ப்பரிக்கும்போது சாபங்கள் சரிந்து விழுகின்றன! துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் என்று பாடி முழங்கும்போது, சத்துரு புறமுதுகிட்டு ஓடுகின்றான். இதனால்தான் கிறிஸ்து, பதில் கண்ணுக்குத் தெரியுமுன்பே, கிடைத்த பதிலுக்காக துதிகளை ஏறெடுத்தார். இந்த உண்மையை அறிந்த பவுலும் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று ஆர்ப்பரித்தான். ஆம், கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இந்த விசுவாசத்தின் செயல்பாடுதான் துதியின் முழக்கம்! இப்பொழுதே ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!

தாவீதின் போராட்டங்கள்

சங்கீதக்காரன் தாவீது துதியின் வல்லமையைக் குறித்து வெளிப்பாடு பெற்றவன். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் மிகப் பெரிய போர் வீரன். சிறு வயதிலேயே சிங்கத்தையும் கரடியையும் மிக எளிதாக கிழித்துக் கொன்ற வீரத் திருமகன். கோலியாத்தை வீழ்த்தின கோமகன். தனது இறுதி மூச்சு வரை, எதிரிட்ட போர்களில் எல்லாம் மாற்றாரை வீழ்த்தி மகத்தான வெற்றி கண்ட மாவீரன். அவனுடைய வெற்றியின் இரகசியம் துதிதான். "துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்(சங்.18:3) என்பது அவனது விசுவாசப் பாடல். தனது சத்துருக்களை வெறுமனே சரீரங்களாய் அவன் பார்க்கவில்லை. அவர்களுக்கு பின்னே பதுங்கி நின்று இடையூறு செய்யும் ஆவிகளைப் பார்த்தான். அந்த ஆவிகளை மேற்கொள்ள ஆவியின் கூராயுதங்களை எடுத்துக் கொண்டான். அவைகளில் பிரதானமானதுதான் ஆராதனையெனும் போராயுதம்.

தாவீது இதை எத்தனை அழகாக விளக்குகின்றான் பாருங்கள்:

பெலனே துதி! துதியே பெலன்

"பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப் போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால்

பெலன் உண்டு பண்ணினீர்". (சங்கீ.8:2) இந்த வசனத்துக்கு தாவீதின் குமாரனாம் இயேசு விளக்கம் அளிப்பதைச் சற்று கவனியுங்கள். "***குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா ?***" என்றார். (மத்.21:16)

குழந்தைகள் பாலகர் வாயினால் **பெலனை** உண்டு பண்ணினீர் என்று தாவீது பாடினான். அந்தப் **பெலன்தான் துதி** என்று கிறிஸ்து விளக்கம் அளிக்கின்றார்.

பகைஞனாகிய சாத்தானையும், பழிகாரனாகிய அவனுடைய சேனைகளையும் அடக்கிப் போடவும், அமைதிப்படுத்தவும் தேவன் குழந்தைகள் வாயில் **துதியாகிய பெலனை** உண்டு பண்ணுகிறார்! "துதிதான் பெலன்" எனும் சத்தியத்தை உணர்ந்து கொண்டதால் தாவீது எப்பொழுதும், எந்நிலையிலும் வெற்றிக்கு மேல் வெற்றியினைக் குவித்தான். ***நமது வாயில் துதி சத்தம்! அப்போது, தேவனுடைய அசாதாரண பெலன் நம்மில்!*** அது சமயம் எந்தச் சத்துருவும் நம்முன் நிற்கக் கூடாத தடுமாற்றம்! இதுதான் உலகத்தை ஜெயிக்கும் உன்னத வழி! துதிக்கும் கிறிஸ்தவனுக்கு முன்பாக சத்துருவானவன் வாய்பொத்தி கைகட்டி நிற்க வேண்டியதுதான்! பாலகன் பாட்டுப் பாடினாலும், பாதகன் பயந்து நடுங்குகிறான். இது தேவன் விதித்த விதி! குழந்தைகளைப் போல் மாறுகிறவர் இந்தத் துதியின் வல்லமையை சந்தேகிப்பதேயில்லை. இன்று பகைஞனாகிய சத்துரு உங்களுக்கு விரோதமாக பரிகாசம் பண்ணுகிறானா? பயமுறுத்தும் வார்த்தைகளால் உங்களைப் பதட்டப் படுத்துகிறானா? உடனே உங்கள் வாயிலிருக்கும் தேவபெலனை அவிழ்த்துவிடுங்கள். சத்துருக்கள் வீழும்வரை, துதியை நிறுத்தாதீர்கள்! இதுதான் வெற்றியின் இரகசியம்!

கோலியாத்தின் வீழ்ச்சி

கோலியாத்தைக் கண்டு இஸ்ரவேல் சேனை நடுநடுங்கி நிற்கும்போது, சிறுவன் தாவீதின் நெஞ்சத்தில் சிறிதேனும் பயமில்லை! ஏன்? அவன் துதிக்கப் பழகினவன். தேவனைத் துதித்துப் புகழும்போது, அசுத்த ஆவிகள் அலறி ஓடுவதைப் பலமுறை பார்த்து ரசித்தவன்.

பொல்லாத ஆவி சவுல் ராஜாவை அலைக்கழிக்கும்போது, தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசித்து தேவனை துதிப்பான். அதினால் பொல்லாத ஆவி சவுலைவிட்டு நீங்க, சவுல் ஆறுதல் அடைந்து சொஸ்தமானான் (1சாமு.16:23). தாவீதின் மேலிருந்த அபிஷேகம் அவன் துதிக்கும்போது வெள்ளமெனப் பாய்ந்து வெளிக்கிளம்பும். அந்த அபிஷேக வெள்ளத்தில் அசுத்த ஆவிகள் நிற்கக்கூடாதபடிக்கு அடித்துச் செல்லப்படும். ஆம், கோலியாத்துக்குள்ளும் கொலைகார ஆவிகள் குடி கொண்டிருந்தன.

அதனால்தான் அவன் தன் தேவர்களைக் கொண்டு தாவீதைச் சபித்தான். (1 சாமு. 17:43) துதிக்கப் பழகின தாவீது வாயில் துதியோடும், கையில் கவணோடும் வெற்றி வாகை சூடினான். ஆம், அருமையானவர்களே, இன்றும் உலகில் பலவிதக் கொடிய ஆவிகள் மனிதர் மூலம் செயல்படுகின்றன. இந்த ஆவிகள், தேவனைத் துதிக்கும்போது, அஞ்சி, நடுங்கி அபயமிட்டு ஓடிவிடுகின்றன. ஆவிகள் விரட்டப்பட்டவுடன் மக்கள் ஆறுதலும், ஆரோக்கியமும் அடைகின்றார்கள். தேவ மக்கள் ஸ்தோத்திரப்பாடலைப் பாடி, அவர் நாமத்தை உயர்த்தும்போது, அசுத்த ஆவிகள் அலறி ஓடுவதைப் பல முறை நான் கண்டு வருகின்றேன். இவ்வாறு பல அனுபவங்களை என்னால் எழுத முடியும். தேவனைத் துதிக்கும் போது, தேவப் பிரசன்னம் அந்த இடத்தை நிறைக்கின்றது. தேவப் பிரசன்னம் வெளிப்படும்போது, தீய ஆவிகள் அங்கு நிம்மதியாயிருக்க முடிவதில்லை. ஆம், துதியின் வல்லமையை, ஏட்டில் எழுதி அடக்கிவிட முடியாது. சொல்லினால் அளந்து சுருக்கிவிட முடியாது. அத்தனை அளவுக்கு துதி மகத்தான மாண்பினைப் பெற்றது!

யோசபாத்தின் வெற்றி

இந்த தாவீதின் வழிவந்த யோசபாத் எனும் அரசன் துதியின் வல்லமையால் சத்துருக்களை மேற்கொண்டான். தனக்கு விரோதமாய் திரண்டெழுந்த முப்பெரும் நாடுகளைக் கண்டு கலங்கினான். தனது தேச மக்களைக் கூட்டி, தேவனைத் தேடினான். ஆவியானவர் இறங்கி, **"இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது"** (2நாளா. 20:15-17) என்று திருவுளம் பற்றினார். இந்த வார்த்தைகள் அவனையும் அவனது சேனையையும் துதிக்கச் செய்தது. தனது மக்களோடு ஆலோசனை செய்து, கர்த்தரைப் பாட்டினால் துதிக்கும் பாடகரை போர்க்களத்தில் நிறுத்தினான். ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னே ஆராதிக்கிறவர்களை அனுப்பினான். பட்டாளத்துக்கு முன்னே பாடகரை பவனிவரச் செய்தான். அவர்கள் பாடித் துதி செய்யத் தொடங்கினபோது எதிரிகள் ஒருவரோடொருவர் மாறுகொண்டு வெட்டி வீழ்த்திக்கொள்ளும்படி கர்த்தர் கிரியை செய்தார். அவர்களில் ஒருவராவது தப்பவில்லை! என்று எழுதப்பட்டிருக்கிறது. (2நாளா. 20:21-24) பாடிக்கொண்டே சென்ற வீரர்கள் கொள்ளை பொருளை, ஆடிக்கொண்டே அள்ளித் திரும்பினார்கள். கர்த்தரே இறங்கி அவர்களுக்காக போராடினார். அவர்களோ அவரைக் கொண்டாடினார்கள்! இதைக் கேள்விப்பட்ட அனைத்து மன்னரும் கதி கலங்கினார்கள். யுத்தமில்லாத இளைப்பாறுதலைக் கர்த்தர் கட்டளையிட்டார். எதற்காக ஆவியானவர் இதை எழுதி வைத்துள்ளார்? வெறுமனே கதையாய் வாசித்து ருசிக்கவா? இல்லை! இதை நாமும் அனுபவமாக்கிக் கொள்ளத்தான்.

தேவனைத் துதித்துப் பாடும்பொழுது ஆவிகளின் உலகில் அற்புதம் நடக்கின்றது. தேவ ஆவியானவர் சத்துருக்களைச் சிதறடிக்கின்றார். நாம் துதிக்கும்போது நமக்காக தேவ தூதர்கள் போர்க்களத்தில் இறக்கிவிடப்படுகிறார்கள். நமது துதிப்பாடலும், ஆரவாரமும் சத்துருக்களின் சேனையை சடுதியில் நாசப்படுத்தி விடுகின்றன. தயவு செய்து இன்றே எழும்பித் துதியுங்கள்! கிறிஸ்துவின் சிலுவை வெற்றியைக் குறித்து முரசம் கொட்டுங்கள். அவரது நாமத்தைக் குறித்துப் பேசுங்கள். கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்துப் பாடுங்கள். சபையாய் சேர்ந்து கர்த்தரை உரத்த குரலில் ஆராதித்து புகழும்போது அந்தகார ஆவிகள் அதமாகிவிடுகின்றன. ஊழியத் தலைவர்கள் தமது மக்களுக்கு துதியின் வல்லமையைப் பேசி அப்பியாசம் கொடுங்கள். வெற்றிக்கு மேல் வெற்றியைக் குவித்துக் கொள்ளுங்கள்.

பவுலும் சீலாவும்

நமக்குத் தெரிந்த புதிய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்றை நினைவுபடுத்துகிறேன். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் துதி பாடினதை யார் மறக்க முடியும்? நடு ராத்திரியில் அவர்கள் ஜெபம் பண்ணி **தேவனைத் துதித்துப் பாடினார்கள்**. வெறுமனே ஜெபம் பண்ணி முடித்துவிடாமல் தேவனைத் துதித்துப் பாடினார்கள்! துதியின் மகத்துவத்தைக் குறித்து அறிந்தவர்கள் அவர்கள். சாத்தானுடைய போராட்டத்தை மேற்கொள்ள, தேவனிடம் வேண்டினால் மட்டும் போதாது, துதியெனும் ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்தார்கள். வேதனை நேரத்தில் ஜெபிப்பது எளிது, ஆனால் பாடுவது அரிது. அவர்களோ தேவனைத் துதித்துப் பாடினார்கள். தேவ வல்லமை இறங்கியது! அஸ்திபாரங்கள் அசைந்தது! பூமி அதிர்ந்தது! சிறைச்சாலை கதவுகள் யாவும் திறந்தது! பவுல், சீலாவின் கட்டுகள் மட்டுமன்றி, அனைத்து கைதிகளின் கட்டுகளும் கழன்றன! முந்தினநாள் சித்திரவதை செய்த சிறைச்சாலைக்காரன், இன்றோ ஆண்டவமாரே என்று அவர்களது அடி பணிந்து விழுந்தான். கனிவோடு அவர்கள் காயங்களைக் கழுவி, வீட்டார் அனைவரோடும் திருமுழுக்கும் பெற்றான். நடந்தவைகளைக் குறித்து அறியாத அதிகாரிகள், அடுத்த நாள் காலையில் காரணம் ஏதுமின்றி விடுதலை உத்தரவை விரைவாகப் பிறப்பித்தார்கள். பவுலும் சீலாவும் ரோமர் என்று கேள்விபட்டதும், அதிகாரிகள் வந்து தயவோடே பேசினார்கள். முன்னர் நடுத்தெருவிலே நாயென இழுத்துவரப்பட்டவர்கள் இப்போது ராஜ மரியாதையோடு அனுப்பி வைக்கப்பட்டார்கள். எப்படி வந்தது இத்தனை மரியாதை! ஆராதனையால் வந்தது அத்தனை மரியாதை! துதிப்பாடல் அவர்களைச் சிறைபடுத்தின ஆவிகளைச் சிறைப்படுத்திவிட்டது. அதனால் அவர்களது சோகக் கதை ஒரு சொகுசு காவியமாகிவிட்டது. ஒரு வேளை அன்று இரவு அவர்கள்

துதித்திராவிட்டால என்ன நடந்திருக்கும். எண்ணிப்பாருங்கள். சிறைச்சாலையிலேயே அவர்கள் ஜீவன் முடிந்திருக்கும்.

அருமை ஊழிய நண்பரே, தேவனுக்குத் தொண்டு செய்வது ஒரு பெரும் போர்க்களத்தைப் போன்றது. மக்களை சாத்தானுடைய அதிகாரத்தினின்று பிடுங்கி எடுத்து தேவனிடத்திற்குத் திருப்பும் பணி அது! நீங்கள் ஊழியம் செய்யும் பகுதிகளில், ஆளுகை செய்யும் அந்தகார அதிபதிகள் உங்களைத் தாக்குவார்கள். உங்கள் மனதைத் தங்கள் இஷ்டம் போல் இழுத்துச் செல்வார்கள். உங்கள் உடலையும் குறிவைத்துத் தாக்குவார்கள். உங்கள் உள்ளான மனிதனை சிறைபிடித்து, ஊழியத்தில் முன்னேற விடாமல் தடுப்பார்கள். இதுதான் சாத்தானின் போராட்டம். இத்தகு நேரத்தில் ஆவியின் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஆராதனை செய்து தேவனைக் கொண்டாடுங்கள். உங்கள் பிரச்சனையின் அஸ்திபாரங்கள் அசையும்! வியாதி, பயம் எனும் கட்டுகள் கழன்றுவிழும்! மூடப்பட்ட கதவுகள் திறக்கும்! ஊழிய வாய்ப்புகள் குவியும்! உங்களைச் சுற்றியுள்ள மக்களின் கட்டுகளும் கழன்றோடும்! உங்களைக் காயப்படுத் தினவர்களே உங்களுக்கு காயங்கட்டி ஆறுதல் செய்வார்கள். ஆயிரங்கள் ஆண்டவரிடம் திரும்பும்! கனமும் மரியாதையும் உங்கள் காலடி பணியும்! ஊழியத்தின் எல்லையும், வல்லமையும் பெருகும் ! தேவனைத் துதித்துப் பாடுங்கள். "**துதி முன்னே விடுதலை பின்னே**" என்பதை மறவாதீர்கள்!

மாபெரும் ஆயுதம்

இன்றைய திருச்சபை மீண்டும் மீண்டும் தியானிக்க வேண்டிய இரகசியம் ஒன்றுண்டு. அதை சங்கீதக்காரன் வெளிப்படுத்துகிறான். அதைக் கருத்தாய் வாசியுங்கள்.

"ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன் மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத் தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா". (சங்149:6-9)

ஆவிகளின் சேனைகளோடு போராடிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இந்த வசனத்தை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். தேவன் சத்துருக்களை மேற்கொள்ளும் அதிகாரம் முழுவதையும் நமது கைகளில் ஒப்புக் கொடுத்துவிட்டார். சாத்தானுடைய சேனைகளைத் தேவன் தோற்கடிக்கும்படி ஜெபிக்கவே கூடாது. இவைகளுக்காக ஜெபம் பண்ணும்படி புதிய ஏற்பாட்டில் ஓரிடத்திலும் சான்றுகளில்லை. கிறிஸ்துவோடு அரியணையில்

அமர்ந்திருக்கும் நாம் பிசாசுக்கு எதிர்த்து நின்றாலே போதும். அவன் ஓடிப்போவான். நமது வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியொலியின் மூலம் புற ஜாதிகளை நாம் பழி வாங்கலாம்! கிறிஸ்துவுக்கு விரோதமாய் எழும்பும் பகைஞர்களைப் பழி தீர்க்கலாம்! கீழ்ப்படியாத தேவ மக்களைத் தண்டிக்கலாம்! இவர்களை ஆட்டிப் படைக்கும் அந்தகார ஆவிகளை இயேசுவின் நாமத்தில் கட்டி வீழ்த்தலாம். தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் செலுத்தலாம்! இவ்வளவு பெரிய வல்லமை நமது வாயில் இருக்கிறது! வாயினால் கர்த்தரை உயர்த்த அச்சப்படாதீர்கள்! அதில்தான் உங்கள் வெற்றியின் இரகசியம் மறைந்துள்ளது. கைகளில் தேவ வசனமாம் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! **துதியும் வேதவசனமும் இணைந்துவிட்டால் சாத்தானின் அரசுக்கு சாவு மணிதான்.** இந்தக் கனம் ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியது! யாரோ ஒருசில செல்லப்பிள்ளைகளுக்கல்ல! உங்களுக்குரியது! தேவனுடைய திருச்சபை ஒன்று சேர்ந்து துதி பாடினால், கற்பனைக்கெட்டாத காரியங்கள் நடக்கும்! அதனால்தான் சத்தரு தன்னாலான மட்டும் துதிக்கு விரோதமாக உபதேசிக்கத் தூண்டுவான்! அவனுடைய தந்திரங்களை முறியடியுங்கள்! எத்தனையாய் அவன் உங்களைத் தாக்குகின்றானோ அத்தனைக் கதிகமாய் தேவனைத் துதியுங்கள்! நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்!

8. ஆராதனையின் எதிரிகள்

தேவனைத் துதிப்பதும் தொழுவதுமே பிரதானமானது எனக் கண்டோம். இக்கடைசி நாட்களில் கர்த்தர் தமது சபையை துதியாடையால் அலங்கரிக்க விரும்புகின்றார். ஆனந்த தைலத்தால் அபிஷேகிக்க விரும்புகின்றார். துதியின் ஆவியால் நிரப்பிவிட விரும்புகின்றார். இந்த துதியின் ஆவியால் நீங்கள் நிரம்ப விரும்புகின்றீர்களா? துதிக்கும் சேனையில் பங்கு பெற விரும்புகின்றீர்களா? அப்படியானால் ஒரு சிலவற்றை உங்கள் வாழ்க்கையிலிருந்து புறம்பே தள்ள வேண்டும். தேவ ஆவியானவர் உங்களுக்குள் தாராளமாய் கிரியை செய்யும்படி தடைகளை நீக்க வேண்டும். திராட்சத்தோட்டத்திலிருக்கும் சில கற்களை அகற்ற வேண்டும். கிளை நறுக்கி, களை பிடுங்கப்பட வேண்டும் இந்த செய்தியை ஜெபத்தோடு தியானியுங்கள். ஆவியானவர் உங்களை ஆராதனை வீரராக்க இடம் கொடுங்கள்.

பெருமை

உள்ளத்தில் பெருமை குடி கொண்டிருக்கும் வரை ஆராதனை ஆவி உங்களை நிரப்ப முடியாது. பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். வேறு விதத்தில் சொன்னால் தேவனே எதிரியாக மாறிவிடுவார் என்று பொருள். தேவனுடைய சிநேகிதர்கள்தான் அவரது தொழுகையாளராக முடியும். வேதாகம தொழுகை வீரர் அனைவரும் தேவனுக்கும் ஏற்ற நண்பர்கள்தான். தேவனுக்கு எதிராளி தேவனை ரசிக்க முடியுமா? தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் தமது துதியின் ஆவியை அபரிமிதமாக அருளுகின்றார்.

ஆதியில் தேவனை துதித்து மகிழ்ந்த லூசிபர், ஆராதனையின் ஆவியைப் பறிகொடுத்தது அவனது பெருமையினால்தான். தேவனைத் துதிக்கும் கூட்டத்துக்குத் தலைமையாயிருந்தான் என்று ஏற்கனவே கண்டோம். தேவனைப் போற்றிப் பாடிக் கொண்டிருந்த அவனது உள்ளம் திடீரென்று தன்னையே ரசிக்கத்துவங்கி விட்டது. தானே துதிக்கப்படத்தக்கவன் எனும் ஆணவம் பிறந்தது. தனது மகிமை, தனது அந்தஸ்து எனும் சுய பெருமை தலை · தூக்கியது. அவ்வளவுதான். நொடிப் பொழுதில் தேவனைத் துதிக்கும் மாபெரும் பாக்கியத்தை இழந்தான். பெருமையுள்ளவன் தன்னையே பெரியவனென்று எண்ணுவான். தன்னை மற்றவர் பாராட்ட வேண்டும் என்பதே அவனது இலட்சியம். தேவனைப் புகழவேண்டிய அவனது நாவு தன்னைத்தானே புகழத்துவங்கி விடும். அந்தகாரத்திலின்று தன்னைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதை விட, தனது

புண்ணியங்களை அறிவிக்கத் துவங்கிவிடுவான். ஆனால் தாழ்மையுள்ளவர்களோ எப்பொழுதும் கர்த்தரை உயர்த்துவதிலும், அவரது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதிலும் கருத்தாயிருப்பார்கள். "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்று மனமாற வாஞ்சிப்பார்கள். எப்படியாவது மக்கள் கர்த்தரைக் கனம் பண்ண வேண்டும் என்ற பாரத்தோடு, எப்போதும் அவரை உயர்த்துவதில் கவனம் காட்டுவார்கள். கர்த்தரை விட மக்கள் தம்மீது பாசமும் மரியாதையும் காட்டும்போது, அவர்கள் உள்ளம் நடுங்கும். கிறிஸ்துவை எவ்வளவு உயர்த்த வேண்டுமோ அவ்வளவு உயர்த்தி, எல்லாரையும் அவரிடம் இழுத்துக் கொள்ளுவதில் தனிப் பிரியம் காட்டுவார்கள். மணவாளன் இயேசுவை உயர்த்திக் காட்டி, அவர் இரசிக்கப்படும்போது அருகிலிருந்து ஆனந்திக்கும் மணவாளனின் தோழர்கள் அவர்கள். தேவன் தங்களைக் கொண்டு செய்யும் எல்லாவற்றிற்கும் துதிகனம் மகிமையை அவருக்குக் கொடுப்பதில் விழிப்பாயிருப்பார்கள். பிறவிச் சப்பாணியை எழுப்பி குதித்தோடச் செய்த பேதுருவையும் யோவானையும் மக்கள் எப்படிப் பார்த்திருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்த்திருக்கின்றீர்களா? தேவன் பயன்படுத்தும் பாத்திரங்களைக் கண்டு ரசிப்பது இயற்கைதான். ஆனால் பிரமிப்போடு தம்மை நோக்கி ஓடிவரும் திரள் கூட்ட மக்களைப் பார்த்து பேதுரு, "**இஸ்ரவேலரே, இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன ? ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்,**" (அப். 3:12, 13) என்று திட்டவட்டமாய்ப் பேசியதை சிந்தித்துப் பாருங்கள். அற்புதங்கள் நடக்க ஒரே காரணம் **இயேசுவை மகிமைப்படுத்தத்தான்.** இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும் ஜெபங்கள் பதில் பெறுவது எதனால்? குமாரனில் பிதா மகிமைப் படும்படிக்குத்தான். தேவன் தமது மகிமையை எவரோடும் பங்கிட்டுக் கொள்வதில்லை. இந்த எண்ணம் நமது ஆவியில் வேரூன்ற வேண்டும்.

பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் உண்டாவதாக என்று மனமாறப்பாடுவதுபோல ; பூலோகப் பரிசுத்தவான்களும் தேவனுக்குரிய கனத்தையும் மகிமையையும் அவருக்கே செலுத்துவதில் மிகக் கவனமாயிருக்க வேண்டும். இதற்குத்தான் கர்த்தருக்கு முன்பாக நாம் தாழ்மைப் பட வேண்டும். இயேசுவைக் காட்டி தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய அபிஷேகமும் ஆசீர்வாதமும் நம்மீது பெருகும்போது,

பெரிய மனிதர்களும் நம்மிடம் ஓடி வருவார்கள். இராணுவ அதிகாரி கொர்நேலியு பேதுருவின் பாதத்தில் விழுந்து பணிந்து கொள்ளவில்லையா? அந்தகு வேளையில் பேதுருவைப் போல், துடித்து நின்று, "எழுந்திரும், நானும் ஒரு மனுஷன்தான்" என்று உண்மையை உணர்த்த வேண்டும். பவுலையும் பர்னபாவையும் தெய்வங்களென்று எண்ணி, திரள் கூட்ட மக்களோடு கூட அவர்களுக்குப் பலியிட வந்த கூட்டத்தினரின் முன்னே மனம்பதைத்த அப்போஸ்தலரின் செயலைப் பார்த்தீர்களா? "அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக்கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்: மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே" (அப்.14:14, 15) என்று பதட்டத்தோடு பேசியதைப்பாருங்கள். இந்தத் தாழ்மையில்தான் ஆராதனையின் மணம் கமழும். "தன் ஐசுவரியத்தின் மகிமையையும், தன் பிள்ளைகளின் திரட்சியையும், ராஜா தன்னைப் பெரியவனாக்கி, தன்னைப் பிரபுக்கள் மேலும் ராஜாவின் ஊழியக்காரர் மேலும் உயர்த்தின எல்லாவற்றையும்" விவரித்து பேசும் ஆமான்கள் ஆராதனை ஆவிக்கு எதிரிகள்தான். அப்படிப்பட்டவர்கள் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழுவது அதிக நிச்சயம். தன்னைக் குறித்து மேட்டிமை சிந்தையாயிராமல், கர்த்தரை மகிமைப்படுத்தும் உள்ளங்கள்தான் ஆராதனைக்கலையில் தேர்ச்சிபெறும்.

தாழ்மையுள்ளவர்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளுவதில் கவுரவம் பார்க்க மாட்டார்கள். கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் குழந்தை இயேசுவைக் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்து கொண்டதை என்னென்று சொல்வது? பச்சிளம் குழந்தையின் முன் பணிந்து கிடக்கும் முதியோர்! ஆம், தாழ்மையுள்ளவர்கள் சபைநடுவில் கர்த்தரை நாணமின்றிப் பணிந்து கொள்வார்கள். அரசன் தாவீது கர்த்தருடைய பெட்டி பிரவேசிக்கிறபோது "முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்" என்பது உங்களுக்குத் தெரிந்த உண்மைதான். ஆயிரத்திரள் நடுவே, அதுவும் தன்னைவிட அந்தஸ்து குறைவுள்ள, தன் குடிமக்கள் முன்பு, தன்னை மறந்து அவன் ஆடிப்பாடக் காரணம் என்ன? அவனது ஆருயிர் மனைவிகூட அவனை இருதயத்தில் அவமதித்தாள். அற்ப மனுஷரில் ஒருவனைப்போல வஸ்திரங்களைக் கழற்றிப் போட்டு, தமது ஊழியக்காரர்முன் ஆடலாமா? என்று ஆத்திரப்பட்டாள். ஆம், பெருமையுள்ள உள்ளம் தனது அந்தஸ்தை விட்டு, மற்றவரை மறந்து ஆடிப்பாடாது. இறுமாப்புள்ள உள்ளம் ஆராதனைக்கு விட்டுக்கொடுக்காமல் அசையாது நிற்கும். அறையில் மட்டும் ஆடினால் போதும் என்று வியாக்கியானம் செய்யும். ஆனால் தான்

எந்த நிலைமையிலிருந்து மேன்மையடைந்தவன் என்பதை மறவாத நெஞ்சங்கள் இந்த நிந்தனைகளைச் சிந்தை செய்யாது. **"உன் தகப்பனைப் பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன். இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்"** (2 சாமு. 6:21, 22) என்று கூறும் தாவீதின் வழியைப் பின்பற்றும் தேவ நேசர்கள் அவர்கள். தாவீதைப் போன்று தாழ்மையுள்ளவர்கள் தான் தாவீது போல ஆராதிக்க முடியும். அவர்கள், தேவனை ஆராதிக்க எத்தனை வழிகளை வேதம் போதிக்கின்றதோ, அத்தனை வழிகளிலும் ஆராதிக்க அஞ்சமாட்டார்கள். தங்கள் சுய பெருமையைப் பாதிக்கும் ஆராதனை முறைகளுக்கெதிராக வேதவசனத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். தேவனுக்கு முன்பு குழந்தைகளாய் மாறி குதூகலிப்பார்கள். இது பெருமையுள்ள உள்ளத்துக்கு எட்டியாய்க் கசக்கும். ஆராதனையில் அடக்கம் வேண்டும். உணர்ச்சிகள் மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனும் மீகாளின் உபதேசம் பெருமை உள்ளவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆராதனையில் கௌரவத்தைப் பார்த்த மீகாள் மரணமடையும் நாள்மட்டும் மலடியாய் வாழ்ந்து மடிந்தாள். ஆம், ஆராதனைக்கு எதிர்த்து நிற்பது எத்தனை ஆபத்து பாருங்கள்.

பேரரசன் யோசபாத் ஆவியானவர் குரல் கேட்டதும் தரைமட்டும் முகம் குனிந்தான். இதுதான் தாழ்மை! இத்தகு தாழ்மையுள்ளவர்களை ஆவியானவர் தமது ஆராதனை அபிஷேகத்தில் திளைக்கும்படி செய்கின்றார். குழந்தை இயேசுவை கும்பிட வந்த ஞானிகளைக் கண்டதும் ஏரோது மனம் கலங்கினது ஏன்? எருசலேம் மக்கள் நடுங்கினது ஏன்? தனது சுய பெருமைக்கு இடி விழுமோவென்ற கலக்கம்தான். ஆம், பெருமை என்பது ஆராதனைக்கு முதல் விரோதி என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். உங்களைக் குறித்து மேட்டிமையாய் சிந்தியாதீர்கள். மனுஷர் உங்களைப் புகழவேண்டுமென்ற ஆசை வரும்பொழுது, தேவனே புகழ்ச்சிக்குரியவர் என்று சத்தமிட்டுக் கூறுங்கள். தேவ சமுகத்தில் ஆவியானவருக்கு இசைந்து கொடுத்து ஆராதியுங்கள். உங்கள் கவுரவப் பிரச்னைகளை மறந்து, இறுமாப்புண்டாக்கும் அறிவைத் தள்ளி, அன்பை வெளிப்படுத்துங்கள். அதுமட்டுமல்ல, மற்ற மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டுவதிலும் சிக்கிவிடாதீர்கள். அப்பொல்லோவைக் குறித்தோ, பவுலைக் குறித்தோ மேன்மை பாராட்டி மனிதருக்குப் புகழ்ச்சி கொடுத்து வாழ்ந்தது போதும். **"ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக"** (1 கொரி. 3:21) எனும் ஆவியானவர் குரலுக்குச் செவி கொடுங்கள். மற்றவரிடம் உள்ள நல்ல

குணங்களைப் பாராட்டுவது வேறு. அதில் தவறில்லை. ஆனால் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டுவது வேறு! மேன்மையும் மகிமையும் கர்த்தருக்குத்தான். தேவன் ஒருவரே துதிக்குப் பாத்திரர் என்று இன்றே தாழ்மையோடு சாஷ்டாங்கம் செய்வோம் வாருங்கள்.

ஒப்புரவாகாமை

மற்றவர் மீது பகையும் கசப்பும் வைத்திருப்பவர் ஆராதனை வீரராக முடியாது. மற்றவர் மனதைப் புண்படுத்தி வாழ்வதும் ஆராதனைக்கு விரோதமானது தான். மற்றவருக்குள் தேவன் செய்யும் கிரியைகளைக் கண்டு மகிழும் உள்ளங்கள் தேவனைப் பாராட்டும் உள்ளங்கள்! மற்றவரிடம் குறைகளை மட்டுமே காணுவோர் தேவனைத் துதிக்கும் ஆவியை இழந்து விடுவார்கள். அடுத்தவரோடு ஒப்புரவாகாமல் ஆராதனை செய்வதை இயேசு வன்மையாகக் கண்டித்தார். "**நீ பலி பீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கே தானே பலி பீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து**" (மத் 5:23, 24) என்றார். எத்தனை காட்டமான வார்த்தைகள்! பலிபீடத்தில் காணிக்கை செலுத்துவதும் ஒருவித ஆராதனை தான். ஆராதிக்க வரும்போது நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதை இயேசு சூசகமாகச் சொல்லுகின்றார். அப்படி உன் இருதயத்தை ஆராயும் போது, உன்னைக் குறித்து உன் சகோதரனுக்கு மன வேதனை உண்டென்று நீ நினைவு கூர்ந்தால் இலட்சியம் செய்யாமல் தொடர்ந்து ஆராதனையில் மனதைச் செலுத்தாதே! ஆராதிப்பதை அப்படியே நிறுத்திவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகிவிடு. பின்பு வந்து ஆராதனை செய் என்கின்றார் இயேசு! இந்த வார்த்தைக்கு நாம் மரியாதை கொடுக்கப் போகிறோமா? கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து பிறந்த இந்த வசனத்துக்கு நடுங்குகிறவனைத்தான் அவர் நோக்கிப் பார்ப்பார். அந்தோ, இன்று நம்மில் அநேகர் ஆராதனையின் முழு மேன்மையை அனுபவியாமல் இருக்கக் காரணம் இது தான். பாதிக்கப்பட்ட உறவுகள் நமது ஆராதனையை அதிகம் பாதிக்கின்றது. தேவன் மீது நேசம் கொண்டு, அவரை ரசிக்கும் மனிதன், அவரது சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதனை ஒருக்காலும் பகைக்க மாட்டான். தேவனிடத்தில் அன்பு கூருவது தான் ஆராதனையின் சாரம் என்று முன்பு நாம் கண்டோம். "**தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்.**" (1 யோவா. 4:20) அவனது ஆராதனை உண்மையான ஆராதனை அல்ல ! அப்படிப்பட்ட ஆராதனை ஆண்டவரை மகிழ்விப்பதில்லை.

ஆராதிப்பவரையும் ஆசீர்வதிப்பதில்லை. "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்." (1 யோவா. 4:20, 21) இதைவிட தெளிவான போதனை வேறு ஏது? மனிதரோடுள்ள உறவும் மாமன்னரோடுள்ள உறவும் இணை பிரியாதவை. ஒன்றைவிட்டு மற்றதைப் பிரிக்க முடியாது. ஆராதனையின் ஆசீர்வாதத்தை முழுவதும் அனுபவிக்க விரும்புகின்றீர்களா? ஆராதனையின் ஆவியால் நிரம்பி ஆனந்திக்க விரும்புகின்றீர்களா? உங்கள் சகோதரனுக்கு உங்கள் மீதுள்ள குறையைப் போக்கப் பிரயாசைப்படுங்கள். இப்படி நீங்கள் எடுக்கும் முயற்சியை தேவன் கட்டாயம் கனம் பண்ணுவார். ஆவியானவர் தமது அன்பால் உங்களை நிரப்பி, தீமையை நன்மையால் மேற்கொள்ளச் செய்வார். இப்பக்கத்தின் மூலம் அவரே உங்களோடு பேசுகின்றார். பகையையும் கசப்பையும் வைத்துள்ள வரை, தேவனோடு நீங்கள் கைகோர்த்து உலாவ முடியாது. உங்களுக்கென்று தேவன் வைத்துள்ள ஏராளமான ஆசீர்வாதங்களை நீங்கள் பெறவும் முடியாது. ஆபேலின் மீது எரிச்சலை மூட்டியெழுப்பின பொல்லாங்கனுக்குப் பலியாகி காயீனைப் போல சாபங்களை அனுபவித்தது போதும். தொடர்ந்து ஆராதனைக்கலையில் தேர்ச்சியடைவதை விட்டு, ஒப்புரவாகும் பணியில் கவனம் காட்டுங்கள். தேவ ஆவியானவர் உங்களுக்குத் துணை செய்ய காத்திருக்கின்றார். ஆதாமின் சுபாவம், கசப்பையும் வைராக்கியத்தையும் விட்டுக்கொடுக்க எதிர்த்து நிற்கும். ஆனால் நீங்கள் அந்த ஆதாமின் சுபாவத்துக்கு அடிமைகள் அல்லவே! இயேசுவின் நாமத்தில் உங்களைக் கடினப்படுத்தும் ஆவியை எதிர்த்து நில்லுங்கள்.

உங்கள் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் நாவு கர்த்தரைத் துதிப்பதற்காகவே படைக்கப்பட்டது. அதை சத்துரு தனது விஷத்தால் நிரப்பி விட்டான். அந்த நாவினால் நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது. (யாக். 3:10) தேவனைத் துதிக்க வேண்டிய நாவை, சபிக்கப் பயன்படுத்த சாத்தான் நம்மைத் தூண்டுகிறான். துதிக்கும் நாவு சபிக்காது. சபிக்கும் நாவு துதிக்காது என்பதை அறிந்த சத்துரு நம்மை வஞ்சிக்கிறான். தேவனைத் துதிக்கப் பிறந்தவர்கள் நீங்கள். தேவனை வாயார ஆசீர்வதிக்கத் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் நீங்கள்! ஆகவே தேவசாயலின்படி உண்டாக்கப்பட்ட

மனிதரை இன்று முதல் ஆசீர்வதிக்கப்பழகுங்கள். கசப்பான வார்த்தைகளைப் பேசுவதை தீர்மானத்தோடு நிறுத்துங்கள். புண்ணியங்களை அறிவிக்கவேண்டிய உங்கள் நாவினால் மற்றவரைப் புண்படுத்துவதை விட்டுவிடுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளிருந்து ஆசீர்வாத நதிகளாகப் பாயவிரும்புகின்றார். உங்களுக்குள்ளிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு, தேவனையும் மனிதரையும் குதூகலிக்கச் செய்வது எத்தனை பாக்கியம் என்று எண்ணிப்பாருங்கள். திராட்சை செடியாம் இயேசுவோடு ஒட்டப்பட்ட கொடிகள் நீங்கள். மா மன்னரையும், மடிகின்ற மனிதரையும் மகிழ்விக்கும் இனிப்பான திராட்சப்பழங்களைக் கொடுக்க வேண்டியவர்கள் நீங்கள். எஞ்சி நிற்கும் குறுகின வாழ்நாட்காலத்தில் உங்களுக்காகக் காயம்பட்ட இரட்சகரை மகிழ்விக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை இடவேண்டியவர்கள் நீங்கள். காயம்பட்ட உள்ளங்களைத் தேற்றி விடும் திராட்சை ரசம்போல் இருக்கவேண்டியவர்கள் நீங்கள். இதை மறந்து வாழுவது எத்துணை நஷ்டம். ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? .. அத்திமரம் ஒலிவப் பழங்களையும், திராட்சைச் செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. ஆகவே தேவனுடைய அன்பின் ஆவியைப் பெற்ற நீங்கள் இருதயத்தில் கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்திருக்க அவசியமில்லை. இன்றே எழும்புங்கள். இரட்டை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். உங்கள் உள்ளமும் உதடும் கர்த்தரைப்பாடி, மக்கள்மீது பாசமழை பொழியட்டும்.

யாக்கோபு இளவயது முதல் தனது அண்ணனை ஏமாற்றியவன். அன்பற்று நடந்து கொண்டவன். அதனால் அவன் மீது சொல்லப்பட்ட தீர்க்கதரிசன ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாமல் வாழ்க்கையில் ஏமாற்றப்பட்டான். அந்நிய தேசத்தில் லாபான் வீட்டில் பலவித துன்பங்களை அனுபவித்தான். ஆனால் தேவனோ அவனை ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டார். தன் சுயதேசம் திரும்பச் செய்தார். திரும்பும் வழியில் அவனுக்குத் தரிசனமானார். "தேவனை முக முகமாய்க் கண்டேன், உயிர்தப்பிப் பிழைத்தேன்" என்று சொல்லி அந்த ஸ்தலத்திற்கு பெனியேல் என்று பேரிட்டான் (ஆதி. 32:30) தேவனைக் கண்டதும் அவன் வாழ்க்கை மாறியது. தனது அண்ணனைக் கண்டதும் அவன் உள்ளம் உருகியது. கண்கள் கண்ணீர் மழை பெய்தது. தனது அண்ணனைப் பார்த்து என் ஆண்டவனுடைய கண்களில் தயவு கிடைத்தால் போதும் என்று கதறினான். "நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டது போல

இருக்கிறது" (ஆதி 33:10) என்றான். பார்த்தீர்களா? தேவனுடைய முகத்தைக் கண்டவன், தனது அண்ணன் முகம் தேவனுடைய முகத்திற்கு ஒத்திருப்பதைக் கண்டான். தேவனையும், தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதனையும் நேசிப்பது என்றால் இது தான். இந்தப் பார்வை வந்த யாக்கோபு ஆராதனை வீரனாய்த் திகழ்ந்தான். ஆராதித்துக் கொண்டே தனது ஆவியை விட்டான். அவனது கல்லறையில் "யாக்கோபு தன் மரண காலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, **தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுது கொண்டான்**" எனும் வாசகத்தை ஆவியானவர் எழுதி வைத்து விட்டார். எத்தனை பாக்கியமான வாழ்க்கை! ஆம், அருமையானவர்களே, தொழுது கொண்டே இவ்வுலக வாழ்க்கையை முடிப்பது எத்துணை பாக்கியம்! எண்ணிப் பாருங்கள். இதற்கு வேறெந்த குறுக்கு வழியும் இல்லை. தேவனோடும் மனிதரோடும் ஒப்புரவாவது மட்டுமே வழி!

தகப்பனுடைய வீட்டின் சந்தோஷத்தை மூத்த மகன் அனுபவிக்காமல் வெளியே நின்றதின் காரணம் என்ன? இயேசு எத்தனை தெளிவாக இதைப் படம் வரைந்து காட்டினார் பாருங்கள். "**அவனுடைய மூத்த குமாரன் வயலிலிருந்தான். அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வருகிறபோது, கீதவாத்தியத்தையும் நடனக் களிப்பையும் கேட்டு, ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து** : இதென்ன என்று விசாரித்தான். அதற்கு அவன் : உம்முடைய சகோதரன் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காகக் கொழுத்த கன்றை அடிப்பித்தார் என்றான். அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து அவனை வருந்தியழைத்தான்." (லூக். 15:25 - 28)

இந்த சம்பவத்தை அடிக்கடி தியானித்துப் பாருங்கள். தகப்பன் வீட்டில் கீதவாத்தியம், **நடனக்களிப்பு** என்று கிறிஸ்துவே குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் வாயில் **நடனக்களிப்பு** எனும் வார்த்தை வந்தது என்னைப்பெரிதும் பரவசப்படுத்துகிறது. இங்கே நாம் காணும் மூத்த மகன் தனது தகப்பனோடு நெருங்கிப் பழகவில்லை என்பது மிகத் தெளிவு. தன் வீட்டில் முழங்கும் கீதவாத்தியத்தையும் நடனக் களிப்பையும் நேரில் கண்டு, தன் தகப்பனிடமே அதன் காரணத்தைக் கேட்கும் அளவுக்குக் கூட அவனுள்ளம் அப்பாவோடு ஒன்றித்துப் போகவில்லை. **இதென்ன' என்று ஊழியக்காரரில் ஒருவனை அழைத்து வினவுகின்றான்.** தகப்பன் உள்ளம் மகிழ்ச்சியாயிருப்பதைக் கண்டு அவன் உள்ளம் மகிழ்ச்சியடையவில்லை. கோபமும் வெறுப்பும் தான் அவனுள்ளத்திலிருந்து பீறிட்டுவந்தது. வேசிகளிடத்தில் ஆஸ்தியை அழித்துப் போட்ட **உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே** கொழுத்த கன்றை அடிப்பித்தீரே என்று தன் சகோதரனைக்

குற்றப்படுத்தினான். அவனுடைய **உள்ளத்தில் கசப்பென்னும் வேர் படர்ந்திருந்தது. இந்தக் கசப்புத்தான் தகப்பனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கத் தடையாயிருந்தது.** தன் சகோதரனைப் பகைப்பவன் பரமதகப்பனோடு உறவாடி மகிழுவதில்லை. ஆராதனைக்கு எதிரிகள் கசப்பும் விரோதமும் என்பதைக் கண்டுபிடித்து விட்டீர்களா?

மாய்மாலம் (வீணான ஆராதனை)

ஆராதனை என்பது முழு வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும். வெறுமனே உதட்டளவில் ஆராதிப்பது வெற்று சடங்கு போலத்தான். எப்படி ஆராதிப்பது என்பதை மட்டும் எழுத்தளவில் படித்துக் கொண்டு, அதைச் செய்வது ஆராதனை அல்ல. அது முழு வாழ்க்கையைக் கேட்கின்றது. பாவம் உள்ளே நுழையுமுன்பு ஆதி தம்பதியினர் தேவனுடைய உறவுக்காகவே வாழ்ந்தனர். அவரோடு உறவாடி ஆராதித்தனர். மன்றாடி கேட்க அவர்களுக்குத் தேவையில்லை. ஆவி ஆத்துமா சரீரம் அனைத்தும் தேவனோடு இணைந்து துதித்திருக்கும். ஆனால் சத்துரு இந்த ஆராதனையைக் கண்டு மனம் கொதித்தான். தான் இருந்த ஆதி மேன்மையில், மனிதன் இருப்பதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பழத்தைக் காட்டி பரமனைவிட்டு அவர்களைப் பிரித்தான். அன்று முதல் எல்லாம் பாதிக்கப் பட்டது. ஆராதனையும் வெகுவாய் பாதிக்கப்பட்டது. தேவனை ஆராதிக்க வேண்டும் எனும் ஆசை மனிதனை விட்டு முற்றிலும் அழிக்கப்படாவிட்டாலும், எப்படி ஆராதிக்க வேண்டுமென்பதில் அவன் முற்றிலும் தவறிவிட்டான். வேறு விதத்தில் சொன்னால் மனிதன் **உண்மையை** ஆராதனையில் தவறவிட்டு விட்டான். பாரம்பரியமும், மாய்மாலமும் ஆராதனையில் நுழைந்து, அதன் நறுமணத்தை கெடுத்துப்போட்டது. இதைக்குறித்து வேதம் மீண்டும் மீண்டும் எச்சரிக்கின்றது. தீர்க்கதரிசிகளின் பிரதானப் பிரசங்கம் இதுதான். ஏசாயாவின் எச்சரிப்பை (ஏசா. 29:13) நமது இரட்சகர் இயேசுவும் எடுத்துக்காட்டுகிறதைக் கேளுங்கள். "**மாயக்காரரே, உங்களைக் குறித்து** : இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீனாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்." ஆம், இருதயமில்லாத ஆராதனை வீணான ஆராதனைதான். வாயினால் அவரிடம் சேர்ந்து வருவது வேறு, வாஸ்தவத்தில் அவரோடு சேர்ந்து வருவது வேறு. உளம் பூரிக்க அவருக்குத் துதி செய்வது வேறு, உதட்டளவில் அவரைக் கனம் பண்ணுவது வேறு. இவையிரண்டும் மேற்குக்கும் கிழக்குக்குமுள்ள தூரம் போன்றது. இப்படிப்பட்ட

ஆராதனைகள் தேவனை வேதனைப்படுத்துகிறது. அவருள்ளம் இப்படிப்பட்ட ஆராதனையை அருவருக்கின்றது. கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் நாம் ஆராதிக்கும் போது அவர் அதை எப்படி அரோசிக்கின்றார் என்பதை வேதம் திட்டமாய்ச் சொல்லுகிறது. அது நமதுள்ளத்தை நடுங்கச் செய்கிறது. "**உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக் கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது. காளைகள், ஆட்டுக் குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை. நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிராகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்? இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பா யிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்க மாட்டேன். உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன். நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்... உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்.**" (ஏசா. 1:11-16) அப்பப்பா, இதைவிட தெளிவாக எப்படித்தான் பேசமுடியும்? இந்த வசனங்களை ஆழமாய் பார்ப்பவர்கள் அழாமல் இருக்க முடியாது. அசட்டையாய் ஆராதிக்கவும் முடியாது. பரிசுத்தமில்லாத ஆராதனை அவர் உள்ளத்தை பாரப்படுத்தி விடுகின்றது. பரிசுத்த அலங்காரத் தோடு அவரைத் தொழுது கொள்ளாதவன், ஆராதிப்பதை அடியோடு நிறுத்திவிடுவதே மேல் எனத் தோன்றுகின்றது. பாவத்தோடு விளையாடிக் கொண்டு நாம் செய்யும் ஆராதனைகளைக் கண்டு, இவைகள் எனக்கு என்னத்துக்கு என்று வேதனைப்படுகின்றார். ஆராதனைச் சடங்குகளும், சங்கீதங்களும் அவருக்குச் சந்தோஷமா யில்லாமல் அரோசிகமாயிருக்கிறதாம். அவருக்கு அவைகளில் கொஞ்சமேனும் பிரியமில்லை. இப்படிப்பட்ட வீணான ஆராதனையை உடனடியாக நிறுத்துங்கள் என்று எத்தனை காட்டமாய்ச் சொல்லுகிறார். அக்கிரமத்தோடு ஆசரிக்கிற ஆராதனை நாட்களை இனிச் சகிக்க மாட்டாராம். அவைகளைக் கேட்டு இளைத்துப் போய் விட்டாராம். அவரது ஆத்துமாவை இப்படிப்பட்ட ஆராதனை சஞ்சலப்படுத்துகிறதாம். கிருபைபொழிகின்ற தேவனுடைய வாயி லிருந்து, மாறாக கசந்து வந்த இந்த வார்த்தைகளுக்கு உங்கள் பதில் என்ன? ஆராதனையை இனி ஏனோதானோ வென்று செய்வதை விட்டு மனந்திரும்புவீர்களா? கர்த்தருடைய சத்தத்திற்குக்

கீழ்ப்படிவதைப் பார்க்கிலும், சர்வாங்க தகன பலிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? என்ற கேள்விக்கு உங்கள் பதில் என்ன?

ஆதி மனிதன் தேவனைவிட்டுப் பிரிந்ததும் ஆராதிப்பதை நிறுத்தி விடவில்லை. அதனால் தான் காயீனும் ஆபேலும் கர்த்தருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். இதுதானே ஆராதனை! பாவத்தில் கர்ப்பம் தரிக்கப்பட்ட மனிதன் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படாமல் ஆராதிப்பது பேராபத்து! இரட்சிப்பின் நிச்சயம் இல்லாமல் இரட்சகரை ஆராதிப்பது மகா அருவருப்பானது. தன்னுடைய அருவருப்பையே அவருக்குக் காணிக்கையாக்குவது போலத்தான். இதுதான் காயீனின் காணிக்கை! இத்தகு ஆராதனையை தேவன் நேருக்கு நேர் எதிர்த்து நிற்கிறார். கண்களையே நம்மை விட்டு மறைத்துக் கொள்கிறார். கர்த்தர் அங்கீகரிக்கும் ஆராதனை செய்ய விரும்புகின்றீர்களா? அதற்கு ஒரே வழி. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தான்! ஆபேலின் ஆராதனையோடு வாருங்கள். அதில் இரத்தம் இருந்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆட்டுக்கடா, இளங்காளைகளின் இரத்தத்தோடு அவர் சமுகம் சென்றார்கள். எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. பலியிடும் காளைகளின் இரத்தமே ஆராதிக்கிறவர்களின் மனச்சாட்சியைச் சுத்திகரிக்குமானால், கிறிஸ்துவின் இரத்தம் உங்கள் மனச்சாட்சியைச் சுத்திகரிப்பது எத்தனை நிச்சயம்.

குற்றமுள்ள மனச்சாட்சியைப் போல ஆராதனைக்கு எதிரி வேறெதுவுமில்லை. உங்கள் இருதயம் உங்களைக் குற்றப் படுத்தும் வரை உங்களுக்கு ஆராதனை இன்பமாயிருக்காது. இப்படிப்பட்ட நேரத்தில் கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் விசுவாசம் வையுங்கள்.

கவலை

ஆராதனையின் ஆவியை அவித்துவிடும் மற்றொரு எதிரி கவலைதான். மனக்கலக்கம் துதியின் வாழ்க்கையை சாகடித்துவிடும். துதிக்கும் கிறிஸ்தவனை துக்கிக்கும் கிறிஸ்தவனாய் மாற்றும் வேலையில் சாத்தான் சுறுசுறுப்பாயிருக்கிறான். ஆடிப்பாடும் கிறிஸ்தவனை அங்கலாய்க்கும் கிறிஸ்தவனாய் மாற்றுவது அவனுக்கு கைவந்தகலை.

இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும் அளவு கடந்த மகிழ்ச்சியில் ஆடிப்பாடி தேவனைத் தொழுது கொண்டார்கள். கர்த்தரின் வெற்றியை புகழ்ந்து பாடினார்கள். கர்த்தரே கீதம் என்று களி நடனம் புரிந்தார்கள். மிரியாமும், ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் துதிபாடினார்கள். இந்த ஆராதனையின் ஆவியை அவித்துவிடும்படி உடனே வந்தது தண்ணீர் பஞ்சம். ஆராதித்துக் கொண்டே சென்றவர்கள் மூன்று நாட்கள் தண்ணீர் இன்றி

முறுமுறுக்கத்துவங்கிவிட்டனர். மாராவில் வந்த போது மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்தது. அவர்கள் மனமும் கசந்தது. துதிப்பாடல் துக்கப் பாடலாயிற்று. விறுவிறுப்பு முறுமுறுப்பாயிற்று. விசுவாசப் பாடல் விரோதமாய் மாறிற்று. இதுதான் துதிக்கும் கிறிஸ்தவனுக்கு வரும் மாபெரும் சோதனை. வாழ்வின் குறைகள், ஏமாற்றங்கள், பாரச் சுமைகள் போன்ற இடர்பாடுகள் நமது துதியின் ஆவியை அவித்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். சத்துருவின் இந்த ஆயுதங்கள் நமது துதியை துக்கமாக மாற்றத்தான் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

யோபுவின் துன்பங்களுக்குக் காரணம் இதுதான். தேவனை எப்போதும் பூஜீத்துக் கொண்டிருந்த யோபுவைப் பார்த்து தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்று ஆலோசனை கொடுக்கச் செய்தவன் சத்துருதான். ஆனால் யோபுவோ "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறைசொல்லவுமில்லை." அல்லேலுயா! குறை சொல்லுவதும், அங்கலாய்ப்பதும் துதிக்கு விரோதிகள்.

கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதே துதிவாழ்க்கைக்கு ஜீவ நாடி. அதனால்தான் ஆராதனை வரும் இடங்களில் எல்லாம் ஆனந்தமும் கூடவே வருகின்றது. கர்த்தருடைய பரிசுத்த நாள் ஆராதனையின் நாள். அந்த நாளில் கர்த்தரை எஸ்றா ஸ்தோத்திரித்தான். ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து, ஆமென், ஆமென் என்று சொல்லி, குனிந்து, முகங்குப்புறவிழுந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள். அதற்குப் பின்பு தேவனுடைய நியாயப் பிரமாணத்தை வியாக்கியானம் செய்தார்கள். அதைக் கேட்ட மக்கள் அழத்துவங்கி விட்டனர். உடனே நெகேமியாவும், எஸ்றாவும், லேவியரும் அந்த அழுகையை நிறுத்த அரும்பாடுபட்டனர். "**இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள்; நீங்கள் துக்கப்படவும் அழவும் வேண்டாம்**" (நெகே. 8:10) என்று திரும்பத் திரும்பக் கூறினார்கள். **துக்கமும் அழுகையும் ஆராதனை மகிழ்ச்சியைக் களவாடும் சத்துருக்கள்** என்பதை அவர்கள் அறிந்து வைத்திருந்தனர். அதனால்தான் துக்கத்தைக் களைய முற்பட்டனர்.

தாவீதும் இதை மிகத்திட்டமாய் வலியுறுத்தினான். "**மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்**" (சங். 100:2) என்றான் அவன். மகிழ்ச்சியும் ஆராதனையும் நாறும் பூவும் போல பின்னிப் பிணைந்தவை. மகிழ்ச்சியில்லாதவன் ஆராதிக்க மாட்டான். ஆராதிக்கிறவன் மகிழாமல் இருக்க மாட்டான். **ஆராதனையும் ஆனந்த சத்தமும்**

தேவன் இணைத்தவைகள். தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்.

தேவ மக்களின் ஆராதனையைக் களவாட விரும்பும் சத்துரு, முதலாவது தேவ மக்களின் ஆனந்தத்தைத் தான் களவாடுவான். மகிழும் உள்ளம் மன்னனைப் பாடும். பழைய ஏற்பாட்டின் பண்டிகைகள் எல்லாம் ஆராதனைதான் என்று நாம் ஏற்கனவே படித்தோம். இந்தப் பண்டிகைகளின் முக்கிய நோக்கமே மகிழ்ச்சிதான். மனக்கவலையும் மனமுறிவும் ஆராதனை வேரை அறவே வெட்டிவீழ்த்திவிடும். தாவீதின் கூடாரத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் இருந்தது. சீயோனில் துதிகீதம் இரவும் பகலும் ஓயாமல் ஒலித்தது. "தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு சுரமண்டலம் கைத்தாள முதலிய கீதவாத்தியங்கள் முழங்க, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்த வேண்டும் என்று சொன்னான்" (I நாளா. 15:16) கீதவாத்தியங்கள் ஏன் முழங்க வேண்டும்? சத்தத்தை உயர்த்தி ஏன் பாட வேண்டும்? **சந்தோஷம் உண்டாக்கச் செய்யத்தான்!** நாம் சந்தோஷப்படும்போது சங்கீதம் பாடுகிறோம். இதைக் கேட்டு கர்த்தர் உள்ளம் பூரிக்கிறது. கர்த்தர் நமது ஜெபங்களுக்கெல்லாம் பதில் தரக்காரணமே நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்குத்தான். நாம் **சந்தோஷமாயிருப்பதே தேவனுக்கு ஆராதனைசெய்வது போலத்தான். அவர் சமுகத்தில் களிகூருவதே ஆராதனையின் ஒரு அம்சம்தான்.**

அதனால்தான் துதிக்க விரும்பும் கிறிஸ்தவர் எவரும் "**துதியாடை அணிந்து துக்கத்தைக் களைந்து துதி செலுத்திடுவோம்**" என்று பாடிப் பழக வேண்டும்.

இந்த ஆராதனைக்கு விரோதிகளை ஏசாயா அடையாளம் காட்டுவதைக் கவனியுங்கள். துதித்து மகிழ வேண்டிய சீயோனில் துக்கம் நிறைந்தது. சீயோன் சிறுமைப்பட்டது. இருதயங்கள் நொறுங்குண்டது. சிறைப்பட்டார்கள். கட்டுண்டார்கள். துயரப்பட்டார்கள். சாம்பலில் உட்கார்ந்தார்கள். ஒடுங்கின ஆவியில் துவண்டார்கள். இவர்களுக்கு மீண்டும் இழந்த மகிழ்ச்சியைக் கொடுக்கத்தான் இயேசு வந்தார். துயரப்பட்டவர்களைச் சீர்படுத்தினார்! சாம்பலை மாற்றி சிங்காரத்தைத் தந்தார்! துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலம் அருளினார்! ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுத்தார்! இதிலிருந்து ஒரு உண்மை வெளிப்படுகின்றது. மனக்கவலைகள் துதிக்கு விரோதிகள். தாழ்வெண்ணம் துதியின் ஆவியை அவித்துப்போடும். பாவத்துக்கு அடிமையானவன் துதிப்பது கடினம். ஒடுங்கின ஆவி துதிக்கு விரோதி!. கவலையில் மூழ்கி விட்டவர் கர்த்தரைத் துதிப்பதில்லை. கவலைக்கு மருந்து கர்த்தரைத் துதிப்பதுதான். நொறுங்குண்ட ஆவிக்குப் பதிலாக துதியின் உடையைத் தரித்துக் கொள்ளுங்கள். முறுமுறுப்பை இயேசுவின் நாமத்தில் விரட்டியடியுங்கள். உங்களுக்கு இன்னது

தேவையென உங்கள் பரம பிதா அறிந்து வைத்திருக்கிறார். அவருக்கு துதிகளை மட்டும் செய்து பாருங்கள். உங்கள் கவலைகள் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்து போகும்.

ஆராதனைக்குப் பல எதிரிகள் உண்டு. அவைகளை இனிவரும் புத்தகங்களில் உங்களோடு பகிர்ந்து கொள்வேன். பாரம்பரியம் எனும் கட்டுகள் பலருடைய ஆராதனை ஆவியை அவித்துப் போட்டுவிட்டது. ஒரு சிலர் நடுநிலை தவறி, மிதமிஞ்சிப் போய் விடுவதும் ஆபத்து. ஒரு சில சபைகளில் வெறுமனே ஆவி இருக்கும். ஆர்வமும் உணர்ச்சிகளும் மேலிடும். வேறு சிலரோ இவைகள் அனைத்தையும் எதிர்த்து நின்று, உண்மையான ஆராதனையை மட்டும் அழுத்தமாய் வலியுறுத்துவார்கள். ஆனால் இவைகளையும் செய்ய வேண்டும். அவைகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டும். **"ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுது கொள்ளும் காலம் வரும்"** (யோவா.4:23) என்று வேதம் விளம்புகிறது. அப்படிப்பட்ட தொழுகையாளரை தேவன் எழுப்பிக் கொண்டு வருகிறார். **ஆவியும் வேண்டும். உண்மையும் வேண்டும்!**

அவிசுவாசம் ஆராதனைக்கு மற்றொரு எதிரி. அவிசுவாசம் தேவனைப் பாராமல், நம்மைச் சுற்றி வீசும் புயல் காற்றைப் பார்த்து பதறச் செய்துவிடும். **வேறு தேவர்களை நேசிப்பதும்** ஆராதனைக்கு மற்றொரு எதிரி. தேவனுடைய இடத்தைப் பிடிக்கும் எந்த நபரும் வேறு தேவர்களைப் போலத்தான்.

மாம்சஇச்சையில் மூழ்கிவிடுவதும் ஆராதனைக்கு எதிரி. ஆவியானவரால் நடத்தப்படுபவன் இவைகளை மேற்கொண்டு, ஆராதனை வீரனாகி விடுவான். **சோம்பல்** என்பது ஆராதனைக்கு வேறொரு எதிரி. இந்த சோம்பல், ஆராதனைக் கலையில் தேர்ச்சியடையாதபடி தடுத்துவிடும்.

வேதவசன அறிவுக்குறைவும் ஆராதனை ஆவிக்கு ஆபத்து. தேவனை வெறுமனே கற்பனை செய்வது நல்லதல்ல. கர்த்தருடைய வசனத்தில் தேடிப்பார்த்து, தேவனைக் குறித்த அறிவில் விருத்தியடைய வேண்டும். இந்த அறிவுதான் ஆராதனை தீயை மூட்டியெழுப்பும். ஆராதனையைக் கெடுக்கும் இந்த எல்லா எதிரிகளையும் அடையாளம் கண்டு எதிர்த்து நில்லுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக **சாத்தான்** ஆராதனைக்கு மாபெரும் விரோதி. ஆராதனைக்கு விரோதமாய் எழும்பி வரும் பார்வோனின் ஆவியை இயேசுவின் நாமத்தில் கட்டி, ஆராதனையின் மேன்மையை காணுங்கள். பரிசுத்த ஆவியானவர் இந்த எதிரிகளையெல்லாம் முறியடிக்கத்தான் உங்களில் வாசம் பண்ணுகிறார். அவரோடு இணைந்து அவைகளை மேற்கொள்ளுங்கள்.

9. மூல பாஷையில் துதியும் தொழுகையும்

கர்த்தர் தமது வேத புத்தகத்தை எழுத, எபிரேய மொழியையும், கிரேக்க மொழியையும் தெரிந்துகொண்டார். உண்மையாகவே இவ்விரு மொழிகளும் ஆசீர்வதிக்கப்பட்டவைகள்தான். தேவனுடைய உள்ளத்தை ஆழமாக அறிந்துகொள்ள இவ்விரு மொழிகளின் வார்த்தைகளை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். துதித்தலுக்கு கிரேக்க மொழியில் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவைகளையெல்லாம் வாசித்தால் துதித்தல் என்பதின் பல அம்சங்களை நாம் அறிந்து கொள்ளலாம். ஆனால் இத்தனை சொற்களையும் `துதி' என்று மட்டுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது துரதிர்ஷ்டவசமே.

துதித்தல் எனும் எபிரேய சொற்களைப் படித்துப் பார்த்தால் உணர்ச்சி மிகுந்த துதிகளையும், பரவசமூட்டும் துதிகளையும் வேதம் விரும்புகிறது என்பதை எளிதில் காணலாம். சில சொற்களை நாம் இங்கு தியானிக்கப் போகின்றோம்.

ஹலல் (Halal)

பொதுவாக `துதி' எனும் தமிழாக்கம் ஹலல் எனும் எபிரேய சொல்லிலிருந்தே வந்துள்ளது. நூற்று அறுபது முறைக்குமேல் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஹலல் எனும் எபிரேய மொழிக்குப் பல அர்த்தங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை கீழேகாணுங்கள்.

வெளிக் காட்டுதல்-விளம்பரப்படுத்துதல் (To make a show)

தனக்கும் தேவனுக்கும் மட்டும் தெரிந்தால் போதும் எனும் உபதேசம் இங்கு அடிபடுகிறது. நீங்கள் (துதி) ஹலல் செய்யும் போது அனைவரும் அதை அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன்" என்று சங்கீதக்காரன் சொல்லும்போது இந்த ஹலல் தான் பயன் படுத்தப்பட்டுள்ளது. (சங்.22:22) கர்த்தருடைய புகழ்ச்சியை மற்றவர் முன் வாய்விட்டுப் பேசி, வெளிப்படுத்துவதை இது காட்டுகிறது. துதிப்பதை செயலிலோ, சொல்லிலோ வெளிப்படுத்துவதுதான் ஹலல் எனும் சொல்! இப்பொழுதே உங்கள் துதியை எவ்வழியிலாவது வெளிப்படுத்திக் காட்டுங்கள்! தேவன் அதை விரும்புகின்றார்!

பெருமையாய் பேசுதல் (To boast)

"பின் சந்ததிக்காக இது எழுதப்படும்; சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்" (சங்.102:18)

கர்த்தருடைய மேன்மையை எழுதி வைக்கும்போது, மக்கள்

கர்த்தரைக் குறித்து பெருமையாய் பேசுவார்கள். பெருமையாய் அவர் புகழ் பேசி மெச்சிக் கொள்ளுவார்கள் என்பதுதான் மூலமொழியின் அர்த்தம்! கர்த்தரை மெச்சிப் பேசி, பெருமிதம்கொள்வதுதான் தேவன் தேடும் துதி! தன்னைப்பற்றியும், பிறரைப் பற்றியும் மக்கள் பெருமையாய் பேசிக் கொள்ளும் காலமிது! தொண்டர்கள் தங்கள் தலைவரைக் குறித்து பெருமையாய்ப் பேசுவார்கள். உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களைக் குறித்து மெச்சிப் பேசி மேன்மை பாராட்டுகிறார்கள்! ஆனால் துதிக்கும் கூட்டமோ கர்த்தரை பெருமைப்படுத்தி மகிழுகிறது! இந்தக் கூட்டத்தில் இன்றே சேர்ந்து கொள்ளுங்கள். உங்கள் கர்த்தரைக் குறித்து பெருமையாய் பேசுங்கள்! ஓயாமல் புகழுங்கள்! அவரைப் பெருமைபடுத்த பிறந்தவர்கள் நீங்கள்! இப்பொழுதே அவரை மெச்சிப் பேசுங்கள்! அவரைக் குறித்து மேன்மை பாராட்டுங்கள்! அதுவே உங்கள் பெருமையாயிருக்கட்டும்! தன் தேவனைக் குறித்து தனிப் பெருமை கொண்டவன் என்று அனைவரும் உங்களைக் காணட்டும்! ஆசீர்வாதமான பெருமை இது!

கொண்டாடுதல் (To celebrate)

"மகா சபையிலே உம்மைத் துதிப்பேன்; திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்" (சங். 35:18)

மகா சபையிலே உம்மைக் கொண்டாடுவேன் என்பதுதான் சரியான மொழியாக்கம். கொண்டாடுதல் என்றால் என்ன என்பதை நான் விளக்க வேண்டுவதில்லையே! கர்த்தரை இன்று முதல் கொண்டாடுங்கள்! அவர் முன்பு ஆர்ப்பரித்து மகிழுங்கள்! விழாக் கோலம் பூண்டு, விண்ணவரை வாழ்த்துங்கள்! திருவிழா கொண்டாடுங்கள்! நமது தேவனையல்லாமல் கொண்டாடப் படத்தக்கவர் யார்?

ஆர்வமிக்க பேச்சு (To rave about)

அவரைக் குறித்து உற்சாகமாய்ப் பேசுதல்!

தேவனைக் குறித்து உள்ளம் பூரிப்படையும் பொழுது, உணர்ச்சி மிகுதியில் வாய் உளறுவதும்கூட இங்கு பொருள்படும். உற்சாகத்தை வெளிக்காட்டுவதைத்தான் இங்கு குறிப்பிடுகிறது.

"ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக" (சங். 107:32) கர்த்தரைக் குறித்து உற்சாகத்தோடும், உணர்ச்சியோடும், எழுச்சியோடும் பேசிப் போற்றுவார்களாக என்று சங்கீதக்காரன் பேசுகிறான்! உண்மைத் துதியில் இத்தகு ஆர்வமும், ஆவலும் கரை புரண்டு ஓடும்! இப்படி கர்த்தரைக் குறித்து ஆர்வத்தோடு பேசிப் பாராட்டுங்கள்! இப்பொழுதே பேசிப் பாருங்கள். வலுக்கட்டாயமாய் இதை

செய்துபாருங்கள்! உங்கள் உள்ளான மனுஷன் குதூகலிப்பதைக் கண்டு பரவசமடைவீர்கள்! தேவனின் உள்ளமும் பூரிக்கும்!

மகிமை பாராட்டுதல் - (To glory in)

கர்த்தரை மகிமைப்படுத்தி, புகழ்சூட்டுதல்! அவரைக் குறித்து மேன்மை பாராட்டுதல்! "நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்; செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்". மகிழ்வோடு மன்னனைக் குறித்து மேன்மை பாராட்டுவோரை தேவன் தேடுகின்றார்! இப்பொழுதே தேவனைக் குறித்து மேன்மையாய் பேசிப் பாருங்கள். உங்கள் உள்ளம் துள்ளும். அவரது உள்ளமும் மகிழும்! உங்களுக்குள்ள ஒரே மேன்மை அவரது மேன்மைதான்! இப்போதே தேவாதி தேவனது மகிமையை பாராட்டுங்கள்!

ஒளிவீசுதல்(To Shine)

ஹலல் என்பதற்கு ஒளிவீசுதல் அல்லது பிரகாசித்தல் என்றும் பொருள் உண்டு. "அது தும்முகையில் ஒளி வீசும்; அதின் கண்கள் அருணோதயத்தின் புருவங்களைப் போல் இருக்கிறது". (யோபு 41:18)

லிவியாதான் தும்முகையில் ஒளி வீசும் என்ற இடத்தில் ஹலல் வீசும் என்று எபிரேய மொழி கூறுகிறது. அதின் கண்களில் உதயசூரியனின் கதிர்கள் வீசும். ஆம், உண்மைத் துதி ஒளிவு மறைவு அற்றது. ஒளிக் கதிர்களைப் போல தேவனது மகத்துவங்களைப் பாரெங்கும் வீசச் செய்யும். இப்படித் துதிக்கும் போது தேவனைக் குறித்த பிரகாசம் உள்ளங்களில் வீசும்! "பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனை பண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்". (11 நாளா. 20:21)

"பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும்" என்பதை பரிசுத்தமுள்ள மகத்துவத்தை ஒளிவீசச் செய்யவும் என்று வாசிப்பதில் தவறில்லை. ஆம், தேவனது மகிமையை ஒளிவீசச் செய்யுங்கள். அவரைத் துதிக்கும் பொழுது அவரது ஒளியை வீசச் செய்கிறீர்கள். உங்கள் அகமும் பிரகாசிக்கின்றது! முகமும் மலர்கின்றது!

டெஹில்லா (Tehillah)

'டெஹில்லா' எனும் எபிரேய சொல்லும் 'துதி' என்றுதான் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த டெஹில்லா எனும் சொல் பாடுவதை அதிகம் வலியுறுத்தும் சொல். இது ஐம்பத்து ஏழு முறை பழைய ஏற்பாட்டில் வருகின்றது. இந்த டெஹில்லா எனும் சொல்லுக்கும் கீழ்க்கண்ட அர்த்தங்கள் உண்டு.

தெளிவாய்ப் பாடுதல் (Sing clear song)

"உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்" (சங்.119:171) "உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும்" என்பதை, உம்மை தெளிவாய்ப்பாடிப்புகழ்வேன் என்று சொல்லலாம். தேவனைப் புகழும் பாடலை தெளிவாய்ப் பாடி மகிழுவது அவருக்குப் பிரியம்! இப்பொழுதே அவரைத் தெளிவாய்ப் பாடி போற்றுங்கள். பாடல் பாடுவது துதியின் ஒரு முக்கிய அம்சம் என்பதை வேதம் மீண்டும் மீண்டும் கூறுகின்றது. தேவனைப் பாடுவது உங்களுக்கும் இன்பம்! அவருக்கும் இன்பம்!

பாடிக் கொண்டாடுங்கள் : (Celebrate Him in song)

"தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வ தத்திலிருந்தும் வந்தார்;... அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் (கொண்டாட்டப் பாடலினால்) பூமி நிறைந்தது" (ஆப.3:3). தேவனைக் கொண்டாடும் பாடலினால் பூமி நிறைய வேண்டும் என்பது தேவ சித்தம்! பரலோகத்தில் கொண்டாட்டப் பாடல் பாடப் படுவதைப் போல பூமியிலும் பாடப்பட வேண்டும்! இன்று முதல் தேவனுக்குப் பாட்டுப் பாடுவதையே உங்கள் தொழிலாக்கிக் கொள்ளுங்கள்!

பெருமை பாராட்டுதல்: அவரைக் குறித்து வார்த்தையாலும் இசையாலும் பெருமை பாராட்டுங்கள்.

"அவரே உன் புகழ்ச்சி (அவரே உன் பெருமைப் பாடல்!) உன் கண்கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்த உன் தேவன் அவரே" (உபா.10:21)

தெளிவாகவும், கொண்டாட்டத்தோடும், பெருமையோடும் நாம் அவரைப் பாட வேண்டுமென்று வேதம் கட்டளையிடுகிறது! எபிரேய வேதாகமத்தை வாசிப்பவர் "துதித்தல்" என்பதின் முழு அர்த்தங்களையும் மறந்துவிட முடியாது!

உள்ளம் மகிழும்போது பாடல் புரண்டு வருவது இயற்கையான அனுபவம். வேதப் புத்தகமே ஒரு பாடல் புத்தகம் போலத்தான். தேவனும் பாடினார்! அவர் தாசரும் பாடினர்! பாடலில் மனதைப் பறி கொடுப்பவர் உங்கள் தேவன்! பாடி அவரைப் பரவசப் படுத்துங்கள்!

எகிப்திலிருந்து மீட்டெடுத்த கர்த்தரை மிரியாமும், இஸ்ரவேலரும் பாடிப் புகழ்ந்தனர்! தேவனை உயர்த்திப்பாடிய தெளிவான பாடல் அது! கொண்டாட்டப் பாடல் அது. (யாத்.15:21)

கானானின் ராஜாவை முறியடித்த தெபொராளும், பாராக்கும் கர்த்தரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணினார்கள். "ராஜாக்களே,

கேளுங்கள்; அதிபதிகளே, செவி கொடுங்கள்; நான் கர்த்தரைப் பாடி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" என்று பாடினார்கள். (நியா.5:3) அந்தகார அதிபதிகளுக்கு முன், நாம் கர்த்தரைப் பாடுவது எத்துணை அவசியம்!

எல்லாச் சத்துருக்களின் கைக்கும் கர்த்தர் தன்னை நீங்கலாக்கி விடுவித்தபோது தாவீது கர்த்தரை மெச்சிப் பாடினான். "இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள் உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்" என்று ஆரவாரித்துப் பாடினான்!

"அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்" என்றான்! (I நாளா.16:9) "கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" என்பது அவனது வாழ்க்கை இலட்சியம்! "கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்" என்றான்! நன்மை செய்த கர்த்தருக்கு நாவினால் பாடுவது எத்தனை பாக்கியம்! இன்று முதல் தேவனுக்கு முழு நேரப் பாடகராய் மாறிவிடுங்கள்! வேதம் அன்போடு உங்களை அழைக்கிறது. அவரது வல்லமையைப் பாடுங்கள். (சங்.21:13) அவரது பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடிப் பாடுங்கள்! (சங்.30:4)

ஷபாக் : (Shabach)

இந்த சொல்லும் பழைய ஏற்பாட்டில் துதி என்றுதான் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் "ஷபாக்" எனும் சொல்லுக்கும் பல அர்த்தங்கள். அவைகளில் சில:

பலத்த சத்தம் : (Loud shout)

பலத்த சத்தமிட்டு ஆர்ப்பரித்தல்! பலத்த சத்தமிட்டு துதிப்பதை வேதம் மிகத் திட்டமாய் கூறுகிறது. இந்த ஷபாக் (SHABHACH) எனும் சொல் வேதத்தில் பலமுறை வருகிறது. அவைகளில் ஒரு சிலவற்றைக் கவனியுங்கள்:

"ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மை (பலத்த சத்தமிட்டு)த் துதிக்கும்", என்கிறான் தாவீது. பலத்த சத்தமிட்டு துதிப்பதை தேவன் விரும்புகின்றார். "நான் அதிகமாய் சத்தமிட்டு துதிப்பதை தேவன் விரும்புகின்றார். "நான் அதிகமாய் உணர்ச்சி வசப்படாதவன். என்னால் சத்தமிட முடியாது" என்று சாக்கு போக்கு சொல்வது நியாயமா? இப்பொழுதே உங்கள் உதடுகள் தேவ கிருபையை சத்தமிட்டு ஆர்ப்பரிக்கட்டும்!

வெற்றி முழக்கம் - (Triumphant shout)

தேர்தலில் வெற்றி பெற்றதும் ஆரவாரிப்பதைக் கேட்டி ருக்கிறீர்களா? விளையாட்டில் வெற்றி பெறும் போதெல்லாம் விண்ணதிரக் கிளம்பும் வெற்றி முழக்கத்தைக் கேட்டிருக்கிறீர்களா? இந்த வெற்றி முழக்கத்தோடு தேவ தாசர்கள் தேவனைத் துதித்தார்கள். தானியேல் இப்படி வெற்றி முழக்கத்தோடு தேவனைத்

துதித்தவன். இந்த ஷபாக் எனும் சொல் தானியேல் 2:23இல் வருகிறது. "என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மை(வெற்றி முழக்கத்தோடும், பலத்த சத்தத்தோடும்) துதித்துப் புகழுகிறேன்" என்று கூறினான் தானியேல். பார்த்தீர்களா? தேவன் தனக்குக் கொடுத்த ஞானத்தையும், வெளிப்பாடுகளையும் எண்ணி, அந்நிய அரசன் முன்பு தன்னை கனம் பண்ணப் போவதை கற்பனை செய்தான். பாபிலோன் மந்திரவாதிகளால் சாதிக்க முடியாததை கர்த்தர் செய்துகாட்டினார் என எண்ணியதும் வெற்றித் தொனி வெடித்துக் கிளம்பியது. இத்தகு வெற்றித் தொனியை தேவ மக்கள் இன்று எழுப்பினால் எத்தனை நலமாயிருக்கும்! ஏன் நீங்கள் இன்றே முயற்சிக்கக் கூடாது! வெற்றியோடு ஆர்ப்பரித்து முழங்குங்கள்! அல்லேலுயா!

வெற்றியில் மகிமை கொள்ளுதல் (Glory in Victory)

தாவீது காலமெல்லாம் சத்துருக்களோடு போராடி வெற்றிகளைக் குவித்தவன். ஒவ்வொரு போராட்டமும் அவனுக்குக் கொண்டாட்டமாயிற்று. அதின் பெரும் இரகசியம், அவன் கர்த்தரது வெற்றியை எப்பொழுதும் விசுவாசித்து முழக்கத்தோடு தேவனை துதித்ததுதான்! தேவனுடைய வெற்றியில் நாம் மகிமையடைய வேண்டும், மகிழ்ச்சியடையவும் வேண்டும். தேவனுடைய வெற்றிகளை தியானிக்கும்போது இத்தகு மகிமையின் மகிழ்ச்சி நம்மை நிறைக்கும். "ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள் (ஷபாக்), ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்". (சங்.117:1)

"சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்." (சங்.47:1) ஷபாக் என்றால் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரித்தல் என்று பொருள்! இதைவிட தெளிவாய் தேவன் நம்மோடு பேசுவது எப்படி?

துதித்தல் என்றாலே எப்பொழுதும் கூச்சலிட வேண்டும் என்று பொருள் அல்ல. ஆரவாரமில்லாமல் துதிக்கவே முடியாது என்பதும் அல்ல. ஆனால் சிலவேளைகளில் இப்படி கெம்பீர சத்தமாய் முழக்கமிடுவது மிக மிகப் பொருத்தமானது! விட்டுக் கொடுங்கள்!

ஜாமார் (Zamar) (Play strings)

ஜாமார் எனும் எபிரேயச் சொல்லுக்கு "மீட்டிசைத்துப் பாடுதல்" என்று பொருள். அதாவது நரம்புக்கருவிகளை இசைத்துப் பாடுதல் இது. "தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்; என் மகிமையும் பாடும். வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன்.

கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மை (மீட்டிசைத்து) துதிப்பேன்; ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்" (சங்.108:1- 3)

அப்பப்பா! இந்த ஆராதனை ஆவி நம்மைக் கவ்விப்பிடித்தால் எத்தனை நல்லது! இசைக் கருவிகள் ஆயிரமாயிரமாய் கர்த்தருக்கு முன் முழங்கினால் எத்தனை நல்லது! தாவீது நாலாயிரம் பேரை இசைக் கருவிகளோடு கர்த்தரைத் துதித்து, தீர்க்கதரிசனம் சொல்ல நியமித்தான். (I நாளா. 25:1) இந்தக் கடைசி காலங்களில் இலட்சக்கணக்கான இசை வல்லுநர்கள் அபிஷேகத்தோடும், வாத்தியக் கருவிகளோடும் கர்த்தரைக் கொண்டாடப் போகின்றார்கள்! வாலிபரே, கர்த்தரைத் துதித்துப்பாடி மகிழ இன்றே இசைக் கருவிகளை வாங்கி, வாசிக்கப் பழகிக் கொள்ளுங்கள்! வருகிறது! வருகிறது! இசையோடு கர்த்தரைக் கொண்டாடும் எழுப்புதல் வருகிறது! இப்பொழுதே ஆயத்தப்படுங்கள்! முதியோரும் முயற்சியுங்கள்! காலம் பிந்திவிடவில்லை!

யாடா (Yadah)

யாடா எனும் சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. அவைகளுக்கும் `துதி' என்றுதான் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதோ சில அர்த்தங்கள்.

நன்றி - அறிக்கை செய்தல் (Confession - Thanks)

கீழ்க்கண்ட வசனங்களில் இச்சொல் வருகிறது.

"கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து (நன்றிகளை அறிக்கையிட்டு), அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன்." (சங்.109:30)

நீட்டப்பட்ட கரங்கள் (Extended Hands)

நீட்டிய கரங்களோடு கர்த்தரைத் துதித்தல்! இதுவும் எபிரேயர் துதித்த முறைகளில் முக்கியமான ஒன்று.

"சுரமண்டலத்தினால் கர்த்தரைத் துதித்து (நீட்டிய கரங்களோடு துதித்து), பத்து நரம்பு வீணையினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள்'. (சங்.33:2)

அடிபணிதல் (Submission)

"அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின் மேல் தங்கியிருக்கிறதையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கண்டபோது, தளவரிசை மட்டும் தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து, கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, அவரைத் துதித்தார்கள்."

ஆண்டவருக்கு சரணம் என்று சொல்லி, தரையிலே முகங்குப்புறக்

குனிந்து, பணிந்து கொண்ட அனுபவம் உங்களுக்குண்டா? இல்லையேல், இன்றே ஏன் நீங்கள் அப்படித் துதி செய்து, தேவனைப் பணியக் கூடாது? முகங்குப்புற விழுந்து பணிந்து கிடப்பதும், கர்த்தரைப் பரவசப்படுத்தும் துதிதான்! செய்து பாருங்கள்!

டௌடா (Towdah)

யாடா எனும் சொல்லிலிருந்து வந்த சொல்தான் டௌடா என்பது. இவைகளுக்குள்ள இரு பொருட்களை மட்டும் உற்று நோக்குவோம்.

உயர்த்தப்பட்ட கரங்கள்: தேவனைப் புகழ்ந்து, நன்றி சொல்லுகையில் கைகளை உயர்த்துவதும் ஒருவித தொழுகைதான். இதற்கு வேதத்தில் பல ஆதாரங்கள் உள்ளது. கர்த்தருக்கு நான் நூற்றுக்கு நூறு `அர்ப்பணித்து விட்டேன்' என்பதற்கும் இது ஒரு அடையாளச் செயல். தேவன் மீதுள்ள அளவற்ற தாகத்துக்கும், வாஞ்சைக்கும் கூட இது அடையாளம்தான்.

"முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடேகூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே (கைகளை உயரத் தூக்கி, துதித்துக் கொண்டே) தேவாலயத்திற்குப் போய் வருவேனே; இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது" (சங்.42:4)

தேவன் மீதுள்ள அவனது ஆசையை அவனது உயர்த்தப்பட்ட கரங்களும், துதியும் வெளிப்படுத்தினது! தேவாலயத்திற்குப் போகும்போதே, கைகளை உயர்த்தி, துதித்துக் கொண்டு போவது எத்தனை பாக்கியம்!

"உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரைஸ்தோத்திரியுங்கள்". (சங்.134:2))

"என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன்; வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது" என்று இப்பொழுதே தேவனைப் பார்த்து சொல்லுவீர்களா? (சங்.143:6)

பயபக்தி (Reverence)

பயபக்தியோடு கர்த்தருக்கு மரியாதை செலுத்துவது! "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான்" (சங்.50:23)

பாடியாடித் துதிப்பதும், பயபக்தியோடு துதிப்பதும் ஒன்றுக் கொன்று முரண்பட்டதல்ல! அவர் கனத்திற்குரியவர்! பயபக்திக் குரியவர்!

பாராக் (Barak)

பாராக் எனும் எபிரேயச் சொல்லுக்கு, முழங்கால் படியிட்டு தொழுகை செய்தல் என்று பொருள்.

"நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால் படியிடக் கடவோம் வாருங்கள்" (சங்.95:6)

உண்டாக்கினவருக்கு முன், பணிவோடு முழங்கால் படியிடுவது எத்தனை பெரும் சிலாக்கியம்! தேவனுடைய பிரசன்னம் நம்மை மூடும்பொழுது, நாமாகவே பயபக்தியோடும் பணிவோடும் முழங்கால் படியிட்டு விடுவது அவருக்குச் செய்யும் மரியாதை. ஒரு நாள் வரும்! அன்று எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டே தீரும்! நம் தேவன் எத்தனை பெரியவர்! வாருங்கள், முழங்கால் படியிட்டு அவரைத் துதிப்போம்!

தொழுகை எனும் எபிரேயச் சொல்லைப் பாருங்கள்

ஷாகா (Shachah) பல எபிரேயச் சொற்கள் தொழுகை என்று மொழி பெயர்க்கப்பட்டாலும் தேவனைத் தொழுவதற்கு எபிரேய மொழியில் இந்தச் சொல் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஷாகா என்றால் தொழுகையில் தேவனுக்கு முன்பாக பயபக்தியோடு தலைவணங்கி, குனிந்து நிற்பது அல்லது தரையில் பணிந்து விழுந்து கிடப்பது என்று பொருள். இது, இருதயத்தின் பக்தி உணர்வைக் காட்டுகிறது. தேவனை மகா பெரியவராகக் கண்டு, அவருக்கு முன்பு தரைமட்டும் விழுந்துகிடப்பது ஆழமான பயபக்திக்கு அடையாளச் செயல்!

புதிய ஏற்பாட்டில் ... மூலப் பதங்கள்

புதிய ஏற்பாட்டில் பல கிரேக்கச் சொற்கள் துதித்தல் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவைகளில் சில.

எய்னியோ (Aineo)

கொண்டாட்டம் (Celebration) எய்னியோ என்றால் துதியின் பலி அல்லது கொண்டாட்டம் என்று பொருள்.

"மேலும், புறஜாதிகளே, எல்லாரும் கர்த்தரை (கொண்டாடித்) துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் புகழுங்கள் என்றும் சொல்லுகிறார்". (ரோம.15:11)

புறஜாதிகளான நாமும் இஸ்ரவேலரைப் போலவே கர்த்தரைக் கொண்டாட்டத்தோடும், குதூகலிப்போடும் துதித்துப் புகழவேண்டு மென்று தேவன் கட்டளையிடுகிறார்!

பலத்த சத்தங்கள் (Loud Voices) (அல்லது) கெம்பீர ஆரவாரம்.

நன்றியோடு பலத்த சத்தமிடுதல்

"அவர் ஒலிவ மலையின் அடிவாரத்துக்குச் சமீபமாய் வருகையில் திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையும் குறித்துச் சந்தோஷப்பட்டு கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,

பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக். 19:37,38)

மிகுந்த சத்தத்தோடு தேவனைப் புகழுவது புதிய ஏற்பாட்டு உபதேசம்தான்! குரலெழுப்பி தேவனைப் புகழுங்கள்.

எபய்னியோ (Epaineo)

பாராட்டுதல் (Applaud)

இந்த எபய்னியோ எனும் சொல் கீழ்க்கண்ட வசனங்களில் காணப்படுகின்றது.

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிகவிலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும்மகிமையுமுண்டாகக் காணப்படும்." (I பேது.1:7)

தேவனைப் புகழ்ந்து மகிமைப்படுத்துங்கள்! வாயார அவரைப் பாராட்டுங்கள்! உங்கள் விலையேறப் பெற்ற விசுவாசம் புடமிடப்பட்ட பொன்னாக விளங்கும்! அவரைப் போலவே நீங்களும் புகழப்படுவீர்கள். புகழப்படுதல் எனும் சொல் எபேசியர் 1:5 லும் நாம் காணலாம்.

இலோஜியோ (Eulogeo)

மெச்சிப் பேசுதல்

கர்த்தரை மெச்சிப் பேசிப் புகழ்வதும் துதிதான். சகரியாவின் வாய் திறக்கப்பட்டதும் தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான். அவரைக் குறித்து மிக நேர்த்தியாய் பேசினான். (லூக். 1:64)

டாக்ஸா (Doxa)

மகிமையானது

துதிக்கும் பொழுது தேவனுடைய மகிமை சுற்றுப் புறச் சூழலையே மூடிவிடுகிறது. அவருக்கு மகிமையும், கனமும், புகழ்ச்சியும் சொல்லத் தூண்டப்படுகிறோம். கர்த்தருக்கு மகிமை செலுத்தும் போது சத்துருவுக்கும் சவுக்கடி கொடுக்கிறோம். இப்பொழுதே மகிமை, மகிமை என்று முழக்கமிடுங்கள்!

"ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து" என்றார்கள். (யோவா. 9:24)

புதிய ஏற்பாட்டில் நடனமா?

நடனம் என்பது பழைய ஏற்பாட்டின் பண்பாடுதான். புதிய

ஏற்பாட்டுக்கு அது பொருந்தாது என்பவர்களுக்கு மிகத்தாழ்மையோடு இதை சமர்ப்பிக்கின்றோம்.

"அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களி கூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்". (லூக்.6:23)

"மகிழ்ச்சியில் குதித்தாடுங்கள்" என்பதுதான் இங்குவரும் கிரேக்கச் சொல்! இங்கு பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் "அகலியோ" (**Agalliao**) இந்தச் சொல்லுக்கு சரியான பொருள் "மகிழ்ச்சியில் குதித்தாடுவது" (**Leap for Joy or Jump for Joy**) என்று பொருள்.

இந்த மகிழ்ச்சி உள்ளுக்குள் பொங்கிவரும் ஆழமான சந்தோஷத்தையல்ல, வெடித்துக் கிளம்பும் உணர்ச்சி மிகு மகிழ்ச்சி வெள்ளத்தைக் குறிக்கும். இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளது. அவைகளில் சில.

"அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து (ஆவிக்குள் மகிழ்ச்சியில் குதித்தாடி) பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்... என்றார்". (லூக்.10:21) மரியாளின் ஆவி இரட்சகராகிய தேவனில் களிகூர்ந்து குதித்தாடியது! (லூக். 1:47)

மாபெரும் அற்புதம் கண்ட சிறைச்சாலைக்காரன் தன் வீட்டாரனைவரோடும் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான். (Agalliao) குடும்பத்தோடு குதூகலித்து நடனமாடி கர்த்தரைத் துதித்திருப்பான்! (அப்.16:34)

இழந்த மகன் தகப்பனிடம் திரும்பி வந்து, ஆதி நிலையடைந்த போது தகப்பனுடைய வீட்டில் கீதவாத்தியங்களும் நடனக் களிப்பும் இருந்தது. (லூக்.15:25). அது போலவே தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் நிறைவேறி ஆதிநிலை யேகும் காலம் வரும்போதும் சபைகளில் நடனக் களிப்பு காணப்படும். (எரே.31:4, 13)

"இஸ்ரவேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னை கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய். மறுபடியும் நீ மேள வாத்தியத்தோடும் ஆடல் பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்"

புதிய ஏற்பாட்டுச் சபை மணவாளனைச் சந்திக்கும்போது, தனது இறுதி கட்டத்தை எட்டும்போது, நடனத்தோடு களிக்கும்படி தேவன் கேட்கிறார். "நாம் சந்தோஷப்பட்டுக் களி கூர்ந்து (Agalliao) (மகிழ்ச்சியில்குதித்தாடி) அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக் குட்டியானவருடைய கலியாணம் வந்தது." (வெளி.19:7)

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் துதியென்பதும் தொழுகையென்பதும் பலவித அம்சங்களைக் கொண்டது.

கொண்டாட்டம், மெச்சிப் பேசுதல், பாராட்டுதல், கெம்பீர சத்தமிடுதல், தெளிவாய்ப் பாடுதல், பெருமைப்படுத்துதல், வெற்றி முழக்கமிடுதல், வெளிக்காட்டுதல், இசைக்கருவிகளை மீட்டிப் பாடுதல் என்று பலவிதங்களில் நாம் படித்தோம்.

ஆவியோடும் உணர்ச்சிகளோடும், உடல் அசைவுகளோடும் மட்டுமல்ல, உண்மையோடும், உள்ளத்தின் ஆழத்தோடும், நன்றிக் கண்ணீரோடும், பலவிதங்களில் அவரைத்துதிக்க ஆவியானவர் நம்மை எபிரேய மொழியின் மூலமும் கிரேக்க மொழியின் மூலமும் பேசி அழைக்கின்றார்!

ஆவியானவரின் அருமைக் கரத்தில் விட்டுக் கொடுத்து, அவர் நடத்துவது போல தேவனைத் துதித்து தொழுது கொள்ளுங்கள்! அவர்தாமே உங்கள் கண்களைத் திறப்பாராக!

10. ஆராதனை சிகரத்தை அடைவது எப்படி?

ஆராதனை என்பது நாம் அறிய வேண்டிய ஆவிக்குரிய அனுபவங்களில் அதி உன்னதமானது. தேவனும் மனிதனும் ஒன்றித்துப் போவதுதான் ஆராதனையின் சிகரம்! **"கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்"** என்பதின் இரகசியத்தை அனுபவமாக்குவதுதான் ஆராதனையின் பிரதான நோக்கம். இந்தச் சிகரத்தை எட்டும் போது மோசேயைப் போல தேவனோடு முகமுகமாய் பேசினது போன்ற அனுபவம் பிறக்கும். தேவனுடைய மகிமை நமது ஆவியை நிரப்பி, வழிந்தோடும். இந்த ஆராதனையின் கொடு முடிக்குப் போகும்போது இயற்கைக்கு எட்டாத அனுபவங்களும் ஏற்படலாம். இன்றைய திருச் சபையைப் பார்த்து இந்த ஆராதனையின் சிகரத்திற்கு **"ஏறி வா"** என்று ஆவியானவர் அழைக்கின்றார்.

ஆனால் இந்த ஆராதனையின் சிகரத்தை அடையும் முன்பு பலபடிகளை நாம் ஏறிப் போக வேண்டும். எடுத்த எடுப்பில் இந்த அனுபவத்தை எட்டிவிட முடியாது. இதற்கு நமது முயற்சி வேண்டும். **"தேவபக்திக்கு ஏதுவாக முயற்சி பண்ணு"** (1 தீமோ. 4:7) எனும் கட்டளை இங்கு சாலப் பொருந்தும். வேதாகம பக்தர்கள் தேவனைத் தொழுது கொள்ளுவதற்கு சிரமம் எடுத்தார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தனது மகன் ஈசாக்கை பலியிடப் புறப்பட்ட ஆபிரகாம் மோரியா மலை ஏறி கர்த்தர் காண்பித்த இடத்திற்குச் சென்றான். கர்த்தரைத் தொழுது கொள்ள மோசே அடிக்கடி மலையேறி, மேகத்திற்குள் மறைந்தான். தேவனுடைய பிரசன்னம் நிறைந்த சீலோவைத் தேடி மக்கள் புறப்பட்டனர். தேவன் தெரிந்து கொண்ட ஸ்தானம் என்று வேதம் அதைத் குறிப்பிடுகின்றது.

சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்து கொள்ளவும் அவருக்குப் பலியிடவும் மக்கள் அடிக்கடி அங்கு சென்றனர். (I சாமு. 1:3) தாவீது சீயோன் பர்வதத்தின் சிகரத்தில் வீற்றிருக்கும் கர்த்தரைப் பணிந்து கொள்ளப் பாடல் எழுதினான். இந்த மலையேறும் பொழுது பாடுவதற்கென்றே பல பாடல்கள் எழுதினான். குழந்தை இயேசுவைப் பணிந்து கொள்ளவே சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து எருசலேமுக்குச் சென்றனர். ஆனால் இன்றோ நாம் தேவனைத் தொழுது கொள்ள எங்கும் செல்ல வேண்டிய தேவையில்லை. **"நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது"** (யோவா.4:21) என்றார். அந்தக் காலம் இப்பொழுதே வந்திருக்கிறது என்றும் சொன்னார்.

ஆனால் ஒரு பாடத்தை நாம் பழைய ஏற்பாட்டு பக்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தொழுகை என்பது மிகச் சுலபமானது அல்ல. அவரைத் தொழுது கொள்ளும் அனுபவத்திற்குள் நுழைய, நாமும் பிரயாசைப்பட வேண்டும். “எங்கே தேடுவேன், நான் எங்கே தேடுவேன்; என் நேசர் இயேசுவை நான் எங்கே தேடுவேன்” என்று நமது உள்ளம் தாகத்தோடு அவரை நாடவேண்டும். இத்தகு தொழுகை தேவனைத் தரிசிக்க நம்மை நடத்த வேண்டும். இதற்காக சீயோன்மலை ஏறுவதுபோல நாமும் பல படிகளை ஏறப்பிரயாசப்பட வேண்டும். ஆராதனை அனுபவம் என்பதை மகா பரிசுத்த ஸ்தலம் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

அங்குதான் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும், ஷெக்கினா மகிமையும், கேருபீன் சேராபீனும் வாசம் பண்ணுகின்றன. இந்த மகா பரிசுத்த அனுபவத்திற்குள் செல்லுவதுதான் ஆராதனையின் ஒரே நோக்கம். ஆனால் ஆசாரியன் எடுத்த எடுப்பிலேயே அங்கு நுழைந்துவிட முடியுமா? அதுதான் இல்லை! அதற்குமுன்பு வெளிப் பிராகார வழியாகவும், பரிசுத்த ஸ்தலத்தின் வழியாகவும் தான் செல்ல வேண்டும். இதே போன்று ஆராதனை செய்யச் செல்லும் நாம் அதற்கான முந்தின அனுபவங்களைக் கடந்து செல்ல வேண்டும். ஆராதனையின் சிகரத்தை எட்டுவதற்கு நாம் கடக்க வேண்டிய சில படிகளை இச்செய்தியில் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

நாள் முழுவதும் துதி சொல்லிக்கொண்டேயிருங்கள்

உங்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதியிலும் கர்த்தரை கதாநாயகன் ஆக்குங்கள். உலக வாழ்க்கையில் நாள் முழுவதும் மூழ்கிப் போனவன் ஆராதனை வேளையில் திடீரென்று சிகரத்தை எட்டிவிட முடியாது. நான் கர்த்தருக்கு ஒரு ஆசாரியன். மற்றவர்களுக்கு நான் சொந்தமல்ல. பிழைப்புக்கடுத்த அலுவல்களில் நான் சிக்கிவிட முடியாது. தேவனுடைய மகிழ்ச்சிக்காகவே பிரித்தெடுக்கப் பட்டவன். நான் புசித்தாலும் குடித்தாலும் தேவ மகிமைக்காகத்தான், நான் கிரயத்துக்குக் கொள்ளப் பட்டவன். ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய என் சரீரத்தினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்த வேண்டியவன் (I கொரி. 6:20) எனும் உண்மையை அடிக்கடி நினைத்து, அறிக்கையிடுங்கள். வம்பும் புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள். தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்வதுதான் எனக்குத் தகுதி என்பதை அறிந்து கொள்ளுங்கள். (எபே.5:4) எப்பொழுதும் எல்லாவற்றிக்காகவும் பிதாவை ஸ்தோத்திரியுங்கள். நாள் முழுவதும் உங்கள் வாயில் ஸ்தோத்திரங்கள் உச்சரிக்கப்படட்டும். துதிப் பாடல்களை நாள் முழுவதும் பாடிப் பழகுங்கள். விசுவாசத்தை வளர்த்துவிடும் வார்த்தைகளைப் பேசுங்கள். விசுவாசம் துதியின் ஆவியை அனல்மூட்டி எழுப்பும். துதி உங்கள் விசுவாசத்தை பெருகச் செய்யும்.

உங்கள் மனச்சாட்சியை தூய்மையாய் காத்துக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைகளில் தேவனை அடிக்கடி நிறுத்திப் பாருங்கள். உங்களைதேவ ஆலயமாகவும், அதின் நடுவில் உலாவும் மாமன்னராய் தேவனையும் உங்கள் மனக் கண்களில் பார்த்து நன்றி சொல்லுங்கள். “இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே வாசம் செய்கின்றாரே” என்று பாடிப் பரவசமாகுங்கள். தேவனை விட்டு வெகு தூரம் சென்று விட்டது போல உங்கள் உணர்ச்சிகள் பொய் சொல்லும். ஆனால் வேத உண்மையை மனதில் இருத்துங்கள். உங்கள் மூச்சைவிட சமீபமாய் தேவன் உங்களில் இரண்டறக் கலந்து நிற்கிறார் என்பதை நினைத்து துதியுங்கள். நீங்கள் தேவனை ஆராதிக் கிறவர்களாக மாறத் தீர்மானித்தும், சத்துரு உங்கள் சிந்தைகளைக் கறைப் படுத்தி, தேவ சமுக உணர்வை பாழ்படுத்தப் பார்ப்பான். அவ்வேளைகளில் பலவந்தமாய் தேவப் பிரசன்னத்தை மனதில் கொண்டு வாருங்கள். எனக்குள் வாசம் செய்யும் கிறிஸ்துவே ஸ்தோத்திரம் என்று வாய்விட்டுச் சொல்லுங்கள்.

ஆராதனை என்பது குறிப்பிட்ட நேரத்தில் செய்யும் ஒரு நிகழ்ச்சியில்லை, அது நாள் முழுவதும் செய்யப்பட வேண்டியது. இந்த உண்மையினை புரிந்து கொண்டால் மிக விரைவில் ஆராதனை வீரராகி விடுவீர்கள். நாள் முழுவதும் தேவனுடைய பலிபீடத்தில் தன்னை வைத்து வாழ்பவன், ஆராதனை வேளையில் அதன் உச்சகட்ட அனுபவத்தை (climax) அடைகின்றான். நாள் முழுவதும் எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள். இதுதான் ஆராதனைக்கு அழைத்துச் செல்லும் முதல் படி! உங்கள் சரீர அவயவங்களை கிறிஸ்துவுக்கு அனுதினமும் அர்ப்பணியுங்கள். சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுத்து வாழ்வதுதான் புத்தியுள்ள ஆராதனை என்பதை மறந்துவிடாதீர்கள். இஸ்ரவேலர் தேவனை ஆராதிக்கும்படி பாளயத்தை விட்டுப் புறப்பட்டு கர்த்தருடைய வாசஸ்தலம் நோக்கிச் சென்றது போல, நீங்களும் உலகவாழ்விலும், மோக இச்சைகளிலும் மனதைப் பறிகொடாமல், தேவனுக் கென்று பிரிந்து வாழுங்கள். இப்படிப்பட்ட வாழ்க்கையே நறுமணம் வீசும் ஆராதனை! ஆராதனை வாசகங்களையல்ல, ஆராதிப்பவரின் வாழ்க்கையைதான் தேவன் முதலாவது அலசிப் பார்க்கின்றார். இப்படி ஒரு பிரதிஷ்டை வாழ்க்கை செய்பவருக்கு இயேசுவின் நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாகி விடும். ஆராதிக்கும் நேரம் உங்களுக்கு இன்பமாயில்லாதது போலத் தெரிந்தால், உடனே சற்று நேரம் இருதயத்தை ஆராயும்படி ஆவியானவரைக் கேளுங்கள். வேதனை உண்டாக்கும் வழிகள் உண்டென்று கண்டால் அறிக்கையிட்டு, அவர் இரத்தம் உங்களைக்

கழுவும் படிக் கேளுங்கள். உடனே உமது இரத்தம் என்னைக் கழுவிவிட்டதற்காய் ஸ்தோத்திரம் என்று சொல்லுங்கள்.

நன்றி சொல்ல நேரம் எடுங்கள்

இப்பொழுது நீங்கள் பாளயத்தை விட்டு பலிபீடம் நோக்கி வந்து விட்டீர்கள். இப்பொழுது ஆராதனையின் சிகரம் ஏறத் துடிக்கின்றீர்கள். அதற்கு முன்பு நீங்கள் சற்று நேரம் தேவனுக்கு நன்றி சொல்லி ஸ்தோத்திரம் பண்ணுவதில் மனதைச் செலுத்த வேண்டும். இதுதான் ராஜாவின் விருந்து சாலைக்கு நம்மை வழி நடத்தும் வாசல். இந்த வாசலை விட்டால் உள்ளே போக வேறு வழியில்லை. இதனால்தான் வேதம் **"அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்"** (சங்.100:4) என்று ஆலோசனை கூறுகிறது. தேவனைத் தொழுவதற்கு வாசல்: துதியும் ஸ்தோத்திரமும் தான் என்பதை தாவீது அறிந்து வைத்திருந்தான். தேவனுக்கு நன்றி சொல்லுவது வேறு, தொழுகை செய்வது வேறு. தொழுகையில் தேவனது அருங்குணத்தைப் பாடுகிறோம். நன்றி செலுத்துகையில் அவரது அருங் கொடையைப் பாராட்டுகிறோம் என்றார் ஒருவர். செய்ந்நன்றி மறந்து போகும் இக்காலத்தில் ஒரு விசுவாசி நன்றியறிதலாயிருப்பதில் கவனமாய் இருக்க வேண்டும். மனித உள்ளம் எப்பொழுதும் தான் அடைந்த தீமைகளை நினைப்பது போல், பெற்ற நன்மைகளை நினைப்பதில்லை. ஆராதிக்கத் துவங்கும் பொழுது அவருக்கு நன்றி சொல்ல நல்ல தருணம் கொடுங்கள். மற்றவரின் குற்றங்களைப் பார்த்து நியாயம் தீர்க்க மனித உள்ளம் விரும்பும். ஆனால் மற்றவரிடம் மறைந்துள்ள நன்மைகளைப் பார்த்து தேவனுக்கு நன்றி சொல்லத் தயங்கும். ஆனால் இப்படி நன்றி சொல்லிப் பழகாதவர் ஆராதனையின் முதற்படியிலேயே தடுமாறுகிறார்கள் என்று பொருள். எவ்விடத்தும், குற்றங்களே உங்கள் கண்ணுக்குப் படுகிறதா? அது நியாயமான குற்றங்களாயிருந்தாலும்கூட, அவைகளிலேயே மூழ்கிப் போவது உங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கு நீண்டநாள் ஆரோக்கியமாகாது. இதிலிருந்து பூரண சுகமடைய ஒரு வழி உண்டு. அதுதான் நன்றி சொல்லும் பழக்கம். ஸ்தோத்திரம் பண்ணுவதுதான் ஆத்திரப் படுவதற்குப் பரிகாரம். வேதாகம பக்தர்கள் மற்றவர் களுக்காக நன்றி சொல்லும் பழக்கம் உள்ளவர்களாயிருந்தனர்.

கிறிஸ்து நன்றி சொல்லவும், சிறிய காரியங்களுக்கும் ஸ்தோத்திரம் பண்ணவும் படித்திருந்தார். பிசாசுகள் தங்களுக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்த்துப் பரவசமடைந்து ஓடிவந்த எழுபதுபேரின் குற்றத்தைச் சுட்டிக் காட்டினார். ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக சந்தோஷப்படாதீர்கள் என்று சொன்னவர், உடனே ஆவியில் களிகூர்ந்து, "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்வி மான்களுக்கும் மறைத்து,

பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்." (லூக்.10:21) என்று ஆர்ப்பரித்தார். தமது அருமைச் சீடர்களுக்கு இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமையும் அதிகாரமும் வெளிப்படுத்தப் பட்டதைக் கண்டதும் அவருள்ளம் நன்றியால் பொங்கி வழிந்தது. இத்தகைய நன்றியுணர்வினால் தமது சரீரமாகிய சபை நிரம்பி வழியவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார். **கர்த்தர் அற்புதமாய் பயன்படுத்தும் தேவ தாசர்களுக்காக அடிக்கடி நன்றி சொல்லப் பழகுங்கள்.** வேதவசனங்களிலிருந்து தேவன் கொடுக்கும் ஒவ்வொரு வெளிப்பாடுகளும் தேவனிடமிருந்து இலவசமாய் வந்த சொத்துக்கள் என்பதை எண்ணி ஸ்தோத்திரியுங்கள். மற்ற ஊழியருக்கு தேவன் கொடுக்கும் உண்மை வெளிப்பாடுகளுக்காய் உள்ளத்தின் ஆழ்த்திலிருந்து நன்றி சொல்லுங்கள்.

கிறிஸ்து அன்றன்றுள்ள ஆகாரத்தைக் கூட தேவன் கொடுத்த ஆசீர்வாதம் என உணர்ந்து அதற்காக ஸ்தோத்திரித்தார். அப்பங்களையும் மீன்களையும் எடுத்து அன்பினால் நெகிழ்ந்து நன்றியினை ஏறெடுத்தார். இப்படி எதற்கும் நன்றி சொல்லுவது ஆராதனையின் சிகரமல்ல! ஆனால் இதுதான் முதற்படி. கடைசிப் பஸ்காவுக்கும் ஸ்தோத்திரம் பண்ணினார். உணவுக்காகவும் உணர்வோடு நன்றி சொல்லும் பழக்கம், எண்ணெய் வார்த்து ஆராதனைத் தீயினை பற்றவைக்கும் செயல்போன்றது.

நன்றி சொல்லும் வாழ்விற்கு பவுலும் நல்லதொரு மாதிரி. அவன் நன்றியால் நிறைந்த நெஞ்சினையுடையவன். ஆராதனை வீரர்கள் அனைவரும் நன்றி சொல்லுவதில் தேர்ச்சியடைய வேண்டும். பவுல், ஒவ்வொரு சபைகளுக்காகவும், உடன் ஊழியருக்காகவும் உண்மையாய் தேவனை ஸ்தோத்திரித்தான். **ரோமாபுரியாரின் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியானாலே** அவர் மூலமாய் தேவனை ஸ்தோத்திரித்தான் (ரோம.1:8) குறைகள் நிறைந்த கொரிந்து சபையினரிடமும் சில நிறைவுகளைத் தேடிப் பார்த்து ஸ்தோத்திரித்தான் **"நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப் பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட** தேவ கிருபைக்காக, நான் **உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்"** (I கொரி. 1:5, 6) என்றான். கொரிந்து சபைக்கு அருளப்பட்ட தேவ கிருபைக்காக சில வேளைகளில், அத்தி பூத்தாற்போல் நன்றி சொல்லாமல், **எப்பொழுதும் ஸ்தோத்திரித்தான்.** தேவ ஊழியரும் திருச்சபையும் இப்படிப்பட்ட ஸ்தோத்திர வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும் என்று தேவன் எதிர் பார்க்கின்றார்.

பவுல் எதையுமே ஏனோதானோ வென்று எண்ணவில்லை. ஞானஸ்நானம் அவன் பலருக்கும் கொடுக்கவில்லையாம். அதற்காகக்

கூட ஸ்தோத்திரித்தான். மற்ற எல்லாரையும் விட அதிகமாய் பாஷைகளைப் பேசினானாம். அதற்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரமாம். (1 கொரி. 1:15;14:18) கொரிந்து சபையில் தர்ம ஊழியத்திற்குப் பணம் சேகரித்தான் தீத்து. அந்த ஜாக்கிரதையை தீத்துவுக்கு அருளினது தேவன்தான் என்று அதற்காகவும் தேவனை ஸ்தோத்திரித்தான். (2 கொரி. 8:16) விசுவாசிகளுக்குள் நற்கிரியைகளைத் துவக்கினவர் அதை இறுதிவரை முடிப்பார் என்ற நம்பிக்கையில் தேவனைத் துதித்தான். (பிலி. 1:6) பிலிப்பியரை நினைக்கிற பொழுதெல்லாம் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். தனது உடன் ஊழியன் தீமோத்தேயுவின் கண்ணீரையும், மாயமற்ற விசுவாசத்தையும் ஞாபகம் பண்ணி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்.(2 தீமோ. 1:4) கர்த்தருக்காக தாராளமாய் வாரி வழங்கும் மக்களுக்கு தேவன் அருளின ஈகைக் குணத்தையும்—தேவனுடைய ஈவு என்று கண்டு தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான், எல்லாப் பயணிகள் கண்களுக்கு முன்பாகவும், தான் புசிக்கும் ஆகாரத்துக்காக தேவனை ஸ்தோத்திரிக்க அவன் தயங்கவில்லை. (அப். 27:35) தம்மைப் பார்க்க வந்த அருமை விசுவாச நண்பர்களைக் கண்ட போதெல்லாம்; தன்னுடைய ஆயிரம் பாடுகளை மறந்து, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான். (அப். 28:15) தேவன் கொடுத்த வெற்றிகளுக்காகவும், விசுவாசிகளின் மூலம் கிறிஸ்துவின் வாசனை வீசுவதற்காகவும் தேவனை ஸ்தோத்திரித்தான். (2 கொரி. 2:14) இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு உட்படுத்தினதற்காக தேவனை ஸ்தோத்திரித்தான். (கொலோ.1:13) ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும், சரீர ஆசீர்வாதங்களுக்காகவும், பொருளாதார ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனை ஸ்தோத்திரித்தான். அப்பப்பா, எதற்கெடுத்தாலும் தேவனை ஸ்தோத்திரித்த பவுலின் நன்றியுணர்வு எத்தனை ஆழமானது! இதுதான் ஆராதனை வாழ்விற்கு அடித்தளம் போன்றது.

எப்பொழுதும் ஸ்தோத்திரம்! எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம்! நினைவு வரும் பொழுதெல்லாம் ஸ்தோத்திரம்! ஞாபகம் பண்ணி ஸ்தோத்திரம்! இப்படிப்பட்ட ஸ்தோத்திர பலிகளுடனே அவர் சமுகத்தில் நுழைவதுதான் தேவன் விரும்பும் தொழுகை.

ஆம்! நாள் முழுவதும் நன்மையான ஈவுகளுக்காக நன்றியுணர்வோடு ஸ்தோத்திரித்துப் பழகிக் கொள்ளுங்கள். ஆராதனை நேரங்களில் மனதின் ஆழத்திலிருந்து நன்றிப் பாடல் பாடுங்கள். 'எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள் என்பது போன்ற பாடலைப் பாடி உங்கள் ஆத்துமாவைத்தட்டி எழுப்புங்கள். என் ஆத்துமாவே அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்று அடிக்கடி

நினைவுபடுத்துங்கள். தாவீதின் ஸ்தோத்திரப் பாடல்களை உங்கள் பாடலாக்குங்கள்.

அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளை கிரமமாய் எழுதி வைத்து, ஒவ்வொன்றுக்காகவும் ஸ்தோத்திரியுங்கள். நன்றி சொல்லும் பாடல்களை திரும்பத் திரும்பப் பாடுங்கள். **"எண்ணிலடங்கா ஸ்தோத்திரம், தேவா என்றென்றும் நான் பாடுவேன்", "ஸ்தோத்திரம் இயேசு நாதா, உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா"** என்பது போன்ற எல்லாப் பாடல்களையும் தேடிப் பார்த்து மனனம் செய்யுங்கள். உணர்ந்து அவைகளைப் பாடும்போது உங்கள் கண்கள் நன்றிக் கண்ணீரைச் சொரியும். கர்த்தருடைய வாசஸ்தலத்தின் வெளிப்பிராகாரம் என்று இந்த அனுபவத்தைச் சொல்லலாம். தாவீதின் சங்கீதங்களில் இத்தகு ஸ்தோத்திரங்கள் ஏராளமுண்டு. இஸ்ரவேலரை தேவன் நடத்தின எல்லா வழிகளையும் நன்றியோடு நினைத்துப் பாடுவான். தன்னைச் சத்துருக்களின் கையிலிருந்து மீட்டெடுத்த கர்த்தரை வாயார ஸ்தோத்திரிப்பான். அவன், தேவன் மனிதனுக்கும் உயிரினங்களுக்கும் கொடையாய் படைத்த சிருஷ்டிப்புகளுக்காகவும் நன்றி சொல்லிப் பழகினவன். அக்கிரமங்களை மன்னித்த அன்பை எண்ணி நன்றிக் கண்ணீர் சிந்தினான். **சங்கீதங்கள்** 103, 104, 105, 136, I நாளாகமம் 16, 25 போன்ற ஏராளமான சங்கீதங்கள் நன்றியால் நிறைந்துள்ளது. இவைகளைப் பயன்படுத்துங்கள். நன்றி சொல்ல வேண்டும் என்று உங்கள் மனம், தீர்மானித்து விட்டால் ஸ்தோத்திரம் பண்ண பண்ண ஆயிரமாயிரம் நன்மைகள் உங்கள் நினைவுக்கு வரும். பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்காகவும், கல்விக்கண் திறந்த ஆசிரியர்களுக்காகவும், நாட்டு விடுதலையை பெற்று தந்த தியாகிகளுக்காகவும், தேசத்தைப் பாதுகாக்க போர்க்களத்தில் தமது ஆருயிரைப் பணயம்வைத்த ஆயிரமாயிரம் போர்வீரர்களுக்காகவும், வேத புத்தகத்திற்காகவும், அதை விளக்கிக் காட்டி வெற்றியுள்ள வாழ்க்கைக்கு வழிநடத்திச் செல்லும் தேவஊழியர்களுக்காகவும் `எப்போதும் ஸ்தோத்திரம் செலுத்துங்கள்' அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள், பாடகர் போன்ற எத்தனை நல்ல ஊழியர்கள்! இப்படிப் பலப்பல நன்மையான ஈவுகளை எண்ணி ஸ்தோத்திரிப்பது தேவனுடைய உள்ளத்தைக் குளிரப் பண்ணும். இப்படி அநேக ஆசீர்வாதங்களை எண்ணி அடிக்கடி தேவனுக்கு நன்றி சொல்வது A.W. Tozer என்பவரின் தொடர்ச்சியான அனுபவமாம். இந்த ஸ்தோத்திர வாசலின் வழியே உட்பிரவேசியுங்கள்.

துதித்துப் போற்றுங்கள்

நன்றாக ஸ்தோத்திரம் செய்துகொண்டே ஆராதனையின்

அடுத்தபடிக்கு அடிஎடுத்து வையுங்கள். வெளிப் பிராகாரத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசியுங்கள். இங்குதான் நீங்கள் தேவனைத் துதிக்கின்றீர்கள். ஸ்தோத்திரம் பண்ணுவது வேறு, துதிப்பது வேறு. கொடுக்கப்பட்ட ஈவுகளுக்கு நன்றியோடு ஸ்தோத்திரம் செய்கிறீர்கள். கொடுத்த கொடை வள்ளலுக்கு துதிபுகழ் பாடுகிறீர்கள். இப்பொழுது உங்கள் உள்ளம் ஆசீர்வாதங்களை விட்டு, ஆசீர்வதிப்பவர் மேல் வட்டமிடுகிறது. அவரது குணங்களைப் புகழுகின்றீர்கள். அவரைப் பாராட்டுகின்றீர்கள், உங்களுடைய உணர்ச்சிகளையும் இங்குதான் உடைத்து ஊற்றுகின்றீர்கள். கர்த்தருடைய வல்லமை பராக்கிர மங்களை வாய்விட்டுப் போற்றுகிறீர்கள். இப்படிபட்ட ஒரு அனுபவத்திற்கு ஆவியானவர் உங்களை எடுத்துச் செல்லுகிறார் என்றால் அதுதான் தேவனை துதிப்பது என்பது.

ஸ்தோத்திரிப்பதும், துதிப்பதும், தொழுவதும் வேதத்தில் வானவில்லைப்போல் சேர்ந்து காட்சியளிக்கின்றது. ஆனால் அவைகளை ஆழமாய் உற்று நோக்கும் போது ஒவ்வொன்றும் வெவ்வேறான அனுபவம் என்பது கண்ணுக்குப் புலப்படும். இப்பொழுது துதிப்பதைக்குறித்து சற்று உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்.

துதித்தல் எனும் சொல்லுக்குப் பல எபிரேய, கிரேக்கச் சொற்கள் மாறி மாறி பயன்படுத்தப் பட்டுள்ளது. இவைகளுக்குத் தமிழில் **ஆசீர்வதித்தல், போற்றுதல், புகழ்தல், மேன்மைப்படுத்துதல், மகிமைப் படுத்துதல், உயர்த்திப் பேசுதல், கொண்டாடுதல்** எனப் பல பெயர்கள் உண்டு. தேவனை மெச்சிப்பேசி, பாராட்டுதலை வாரிவழங்குவது; அவரைக் குறித்து பெருமையடைந்து, அவர் எவ்வளவு பெரியவர், அற்புதமானவர் என்று பேசி அளவளாவுவது; தேவன், செய்தவைகளுக்குச் சொல்லும் நன்றியுரை இவையாவும் இதில் அடங்கும். அவரைத் துதித்துப் போற்றும்படி வேதம் நமக்குக் கட்டளையிடுகிறது. நாம் விரும்பினால் அவரைத் துதித்துப் புகழலாம். இல்லையேல் அதை வேண்டாமென்று தள்ளிவிடலாம். நாம் விட்டுக் கொடுத்து துதிசெய்யும் பொழுது ஆவியானவர் நம்மை ஆராதனைக்குள் அன்பாய் நடத்துகின்றார். ஸ்தோத்திரங்களோடும் நன்றியுணர்வோடும் அவர் வாசல்களில் பிரவேசிக்கும் நீங்கள் இப்பொழுது துதியோடும் புகழ்ச்சியோடும் அவர் பிராகாரங்களில் சற்று நேரம் தரித்திருங்கள். இப்பொழுது கர்த்தருடைய மகிமையையும் அவரது அதிசயங்களையும் ஒவ்வொன்றாய்ச் சொல்லி, அவரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

பாடலோடே ....

நீர் பெரியவர், வல்லமையுள்ளவர், மாறாதவர் என்று அவரை மாறி மாறிப்பாடி முழக்க மிடுங்கள். அவரது நாமங்களைச் சொல்லி

மேன்மை பாராட்டுங்கள். அவருடைய நாமத்தைக் குறித்த பாடல்களை கருத்தோடு பாடுங்கள். என் நாமத்தை மகிமைப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் நான் வந்து உங்களை ஆசீர்வதிப்பேன் என்றவர் உளமாற வந்து உங்களைத் தமது மார்போடு அணைத்துக் கொள்ளுவார். "இயேசு என்ற திருநாமத்திற்கு எப்போதுமே மிக ஸ்தோத்திரம்; "இயேசுவின் நாமம் இனிதான நாமம்" என்பது போன்ற பாடல்களை சத்தமிட்டுப் பாடுங்கள். "எல்லோருக்கும் மா உன்னத , கர்த்தாதி கர்த்தரே", என்பது போன்ற பாடல்களைப்பாடி அவருக்கு வாழ்த்துக் கோஷமிடுங்கள். சத்தமின்றி துதிக்க முடியாது. ஆனால் மௌனமாய் தொழுது கொள்ள முடியும். துதிக்கும் பொழுது பொதுவாக உதடுகள் அசையும். குரல் கேட்கும். உடலும் இத்தகு துதியில் ஈடுபடும். வெளிப்பிரகாரமாய் ஏதாவது தெரியும் அல்லது கேட்கும். ஆகவே வெட்கத்தைவிட்டு வேந்தனைப் போற்றுங்கள். கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள். அந்த நேரத்தில் எழும்பும் உங்கள் மனதின் ஆசையை அன்புப் பாடலாய் பாடுங்கள். புதுப்பாடல் என்பது உங்கள் சொந்தப் பாடல் என்றும் பொருள்படும். தேவன் எப்படியெல்லாம் வேதத்தில் யுத்தம் பண்ணி, சத்துருக்களைச் சிதறடித்தார் என்பதை பிரஸ்தாபம் பண்ணி, அவரது இரட்சிப்பை பிரசித்தப்படுத்துங்கள். கெம்பீரமாய் பாடுங்கள். களிப்போடு பாடி, மகிழ்ந்து போற்றுங்கள். ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். அவருடைய வல்ல செயல்களின் புகழ்ச்சியைச் சொல்லி, அறிவியுங்கள். சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், அதிசயக் கிரியைகளையும் குறித்துப் பேசுங்கள். மகத்துவத்தை விவரியுங்கள். அவருடைய குணங்களை மெச்சிப் பேசி, நீதியைக் கெம்பீரித்துப் பாடுங்கள். "கொண்டாடுவோம், கொண்டாடுவோம், கொண்டாடுவோம் கர்த்தரின் வெற்றியை" என்று பாடி நடனமாடுங்கள். "கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய் மகிழ்கொண்டாடுவோம், நாடியே நம்மைத் தேடியே வந்த, நாதனைப் போற்றிடுவோம்" என்று உளமாறப்பாடி, கும்மியடித்து மகிழுங்கள். தனக்கு முன் நடனமாடி மகிழும் குழந்தையைக் கண்டு பூரிப்படையும் பெற்றோரைப் போல் தேவனது உள்ளம் மிகுந்த பரவசமடையும். இவைகளைக் கண்டு இரசிக்கமுடியாமல், தூரத்தில் நின்று முறைத்துப்பார்க்கும் உணர்ச்சியற்ற பரம்பொருளாக அவரைப் பார்த்து, மிரள வேண்டாம்.

ஆடலோடே

தாவீது போல நடனமாடி அப்பாவை ஸ்தோத்திரியுங்கள். அப்பா அதைத்தப்பாக எண்ணமாட்டார். தைரியமாய் அவர் கிருபாசனத் தண்டை வாருங்கள். கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடி மிரியாம் குழுவோடு சேர்ந்து தம்புருகளோடும்,

நடனத்தோடும் அவளுக்குப் பின்னே செல்ல அச்சப்படாதீர்கள். பெண்கள் நாணத்தால் தங்களை அலங்கரித்துக் கொண்டு, நாதர் முன்பு நடனமாடப் புறப்படுங்கள். வேதத்தின் கலாச்சாரத்திற்குத் தலைவணங்குங்குகள். நடனமாடுவது பயபக்திக்கு விரோதமானது என்ற உபதேசத்தை நம்பாதீர்கள். நடுக்கத்துடனே களிகூரமுடியும் எனும் வேதவசனத்தை நம்புங்கள். ஆண்களும் தங்கள் கவுரவத்தை தூக்கியெறிந்து, தாவீது போல முழுபெலத்தோடும் தேவசமூகத்தில் உங்கள் களிப்பை வெளிப்படுத்துங்கள். அனைவரும் ஆடல்பாடலுடன் புறப்பட்டு, மேளங்களோடும், கீதவாத்தியங்களோடும் சந்தோஷமாய் வந்து, "தாவீது கொன்றது பதினாயிரம், தாவீதின் குமாரன் வென்றது பலப்பல ஆயிரம்'' என்று பண்ணிசைத்துப் பாடுங்கள் (1 சாமு.18:6,7). அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புருவினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். **அப்பா வீட்டில் நடனக்களிப்புண்டு, அன்பு இரட்சகரே** சொல்லிவிட்டார்! மாமன்னர் அரியணையின்முன் நடனமாடி அவரை சந்தோஷப்படுத்துங்கள். **"ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம் பண்ணி, ஏரோதுவையும் அவனோடே கூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள்''.** (மாற்.6:22) நாமோ நமது நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனாகிய ஏக சக்கரவர்த்தியின் முன்பு நடனம்புரிகிறோம். அவரை மகிழ்விக்கச் செய்யும் நமது நோக்கத்தை ஊடுருவிப் பார்க்கும் நமது ராஜன், நமது இருதயத்தின் வாஞ்சைகளை கட்டாயம் நிறைவேற்றுவார். **"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்''** (சங்.37:4) எனும் ஆணையினிமித்தமாவது அவர் உங்கள் ஆசையை நிறைவேற்றமாட்டாரா? எழுந்து நடனத்தோடு அவரைத் துதியுங்கள். **அது யூதப் பாரம்பரியம் அல்ல, அது வேதப் பாரம்பரியம்! மேல் நாட்டுச் சடங்கு அல்ல. அது மேலோகச் சடங்குதான்!** ஆவியானவர் நடத்துவது போல இசைந்து கொடுத்து துதியுங்கள்!

கைகளைக் கொட்டி ....

அவரைத்துதிக்கும் பொழுது கைகளைக் கொட்டுவதும் வேத ஒழுங்குதான். **"சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்'' ஆனந்தமாய் ஆர்ப்பரித்து, முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.** அவரைத் துதிப்பதற்கு உங்கள் முழு உடலும் ஒத்துழைக்கட்டும். உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் மட்டுமல்ல, உன் முழு பெலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதில் இவைகள் எல்லாம் அடங்கும். **"உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.''** (சங்.134:2)

இசைக்கருவிகளோடே ....

இசைக் கருவிகளை நேர்த்தியாய் வாசித்தும் கர்த்தரைக் கொண்டாடலாம். இசைக் கருவிகளைக் கொண்டு தேவனைக் கீர்த்தனம் பண்ணுவது நித்திய நித்தியமாய் தேவன் நியமித்த ஆராதனை ஒழுங்கு! அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி, வாத்தியங்களின் முழக்கத்தோடும் கர்த்தரைத் துதித்தவன். அவன் கீழே தள்ளப்பட்டாலும், இசைக் கருவிகளால் துதிக்கப்படுவதை தேவன் மாற்றிக் கொள்ளவில்லை. ஆராதனைவீரர் அபிஷேகத்தோடு இசைக் கருவிகளை வாசிப்பதால், அசுத்த ஆவிகள் இன்றும் நடுங்கி ஓடுகின்றன. **தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாவான்.** (1 சாமு. 16:23) என்று வேதம் தெளிவாய் சாட்சியிடுவதைக் கவனியுங்கள். கர்த்தருடைய அருட்கரம், சுரமண்டலம் வாசித்தபோது வந்து இறங்கி ஆசீர்வதிப்பதை வேதம் கோடிட்டுக் காட்டுகிறது. (11 இரா.3:15) எக்காள தொனியோடும், வீணையோடும், சுரமண்டலத்தோடும், யாழோடும், தீங்குழலோடும் அவரைத் துதிப்பதை இன்றும் தேவன் விரும்புகின்றார். அவர் எந்த அளவுக்கு அதை விரும்புகின்றார் என்றால், பரமண்டலத்தில் கூட சுரமண்டலங்களை வைத்துள்ளார் என்பதை எண்ணிப் பாருங்கள். **"தம்புரு வாசித்து, வீணையையும் இனிய ஓசையான சுரமண்டலத்தையும் எடுத்து சங்கீதம் பாடுங்கள். கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில் பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்".**

ஆரவாரத்தோடும் .... ஆவியோடும் ....

முழக்கமிட்டுக் கெம்பீரமாய் பாடுவதும், ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பதும், துதியின் அம்சங்களில் ஒன்று! இப்படிப்பட்ட ஆர்ப்பரிப்பு பரலோக ஆராதனையில் கூடுமே தவிர குறையப் போவதில்லை. (சங்.98:4; வெளி5:12; 19:1, 6, 7)

அந்நிய பாஷையில் பாடியும், பேசியும்கூட கர்த்தரைத் துதிக்கலாம். இதைக் குறித்துப் பவுல் சொல்லும்போது அது **"நன்றாய்" செய்யும் ஸ்தோத்திரம்** என்கிறான். (1 கொரி.14:16, 17)

இப்படிப் பல கோணங்களில் நாம் துதிக்கலாம். தேவனே நீர் பெரியவர், தேவனே நீர் பரிசுத்தர் என்று மனமாறப் பாடிப் பரவசமடையுங்கள். இப்படி நீங்கள் துதிக்கும்போது, உங்கள் ஆவியிலும் சரீரத்திலும் ஒரு மாபெரும் விடுதலை அடைவீர்கள். இந்தத் துதியொலியைக் கேட்டு, அந்தகார ஆவிகள் அலறி ஓடிவிடும். சங்கிலிகளால் கட்டப்பட்டு சஞ்சலப்படும். இதற்குத்தான் கர்த்தர் நமது வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியையும், கையில் இருபுறமும்

கருக்குள்ள பட்டயத்தையும் வைத்துள்ளார். (சங்.149:8) இப்படிப்பட்ட துதிகளின் நடுவே தேவன் வாசம் பண்ண ஆசையோடு ஓடிவருவார்!

பணிந்து குனிந்து தொழுது கொள்ளுங்கள்

நன்றி சொல்லும் பொழுது வாசலில் நுழைகிறீர்கள். துதி செய்யும்பொழுது பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கிறீர்கள். ஆனால் தொழுகையில் ஈடுபடும்பொழுது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்துவிடுகின்றீர்கள். இதுவரை நீங்கள் தீர்மானித்து, உங்கள் விருப்பத்தோடு அவரைத் துதித்தீர்கள். இப்பொழுதோ, தேவாதி தேவனை மட்டும் நேருக்கு நேர் பார்ப்பது போல் உணருவீர்கள். தேவமகிமையைக் கண்டு பிரமிப்படைவீர்கள். பரிசுத்த பயம் உங்கள் ஆவி ஆத்துமாவை கவ்விப் பிடிக்கும். உங்கள் ஆவியும் தேவனுடைய ஆவியும் சங்கமமாகும். பொதுவாக இத்தகு தொழுகையின் சிகரத்திற்குள் நுழைந்ததும் நீங்கள் முகங்குப்புற விழுந்து பணிந்து கொள்வீர்கள். உங்கள் செயல் குறைந்து அவரது செயல் பெருகும். நீங்கள் பேசுவது குறைந்து அவரது குரலும் ஆதிக்கமும் மேலோங்கும். இதுவரை அவருடைய அதிசயங்களை தியானித்து சத்தமிட்டவர்கள், இப்பொழுது அதிசயப் பிரமை கொண்டு **தலைகுனிந்து, பணிந்து** கொள்வீர்கள். (ஆதி.24:26). தீப்பிடித்து எரியும் முட்புதர் முன்பு பயத்தோடும் நடுக்கத்தோடும் முகத்தை மூடிக்கொண்ட மோசேயின் உணர்வு உங்களை நிறைக்கும்.

பொதுவாக 'தொழுகை'எனும் பதம் **"தலைகுனிந்து தொழுது"** கொள்வதைக் குறிக்கின்றது. பழைய ஏற்பாட்டில் **"பணிந்து குனிதல்,** (Hishahawah) தேவனுக்கு முன்பாக **சாஷ்டாங்கமாய் விழுதல்"** எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் **"முத்தமிடும்படி நெருங்கி வருதல்"** (Proskuneiu) என்று பொருள் படும். அவரை **இரசித்து** அவரோடு **ஒன்றித்துப்** போய் அவரது பாதத்தில் **முத்தமழை பொழிவதை** இது குறிக்கும். இதற்கு ஏற்றதொரு படம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இதைக் குறித்து ஏற்கனவே நாம் தியானித்து விட்டோம். பாவியான ஸ்திரீ பரிசேயன் வீட்டில் செய்ததுதான் ஆராதனை. கிறிஸ்துவின் பாதத்தருகே வந்தாள். அவரது மகா பரிசுத்தத்தைக் குறித்த பயபக்தி அவளை நிறைத்தது. ஆனாலும் அவரது அன்புள்ளம் அவளை உருக்கியது. மன்னிக்க தயை பெருத்த மன்னவரைப் பார்த்து மனதைப் பறிகொடுத்தாள். தன்னுடைய ஒன்றுமற்ற தன்மை அவளை கசக்கிப் பிழிந்தது. பாதத்தைப் பற்றிக் கொண்டு பாசமழை பொழிந்தாள். இருதயத்தின் நிறைவினால் பொங்கி வந்த செய்கைதான் தொழுகையாய் மாறிற்று. அவள் வாயில் ஒன்றும் பேசவில்லை. வார்த்தையால் விவரிக்க முடியாத எல்லைக்குச் சென்று விட்டாள். இப்படி தேவப்பிரசன்னத்திற்குள் நுழையும்போது, கண்கள்

குளமாகும். ஆனந்தக் கண்ணீர் அருவியாய் வழிந்தோடும். அவர் சமூகத்தில் தானாக முழங்காலிடவோ, விழுந்து கும்பிடவோ செய்யும். சில வேளைகளில் தெய்வீக அமைதி உள்ளத்தை மூடிக்கொள்ளும். இப்படிப்பட்ட அனுபவங்கள் அடிக்கடி நிகழ்வதல்ல. ஆனால் இப்படிப்பட்ட தொழுகையாளரை தேவன் வாஞ்சையோடும், விசாரத்தோடும் நாடித்தேடுகின்றார். துதிக்கும்பொழுது நாம் வாய்விட்டுச் சொன்ன தேவனுடைய மகத்துவமெல்லாம் நமது ஆவிமனிதனில் ஒளிர்விட்டு ஒருவித பிரமையை உண்டு பண்ணிவிடுகிறது. இந்தப் பிரமையில் சிலர் செத்தவனைப் போல் விழுந்து கிடந்து தொழுவதும் உண்டு (வெளி.1:17). நிற்கக்கூடாமல் தடுமாறி விழுவதும் உண்டு. (11 நாளா. 5:14). இவ்வித அனுபவங் களைக் குறித்து வேதம் வெவ்வேறு விதத்தில் குறிப்பிடுகின்றது. **"நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்"** என்று தேவன் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். இப்படிபட்ட ஆராதனை வேளையில் பூரண மௌனம் தவழும். **"மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; அவர் தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து எழுந்தருளினார்."** இப்படி தேவனைப் பார்த்து, பரவசமடையும் நேரத்தில், தேவ ஆவியானவர் பூரண விடுதலையோடு நம்மில் கிரியை செய்கின்றார். இப்படிப்பட்ட தொழுகையின் மூலம் நம்மை தேவ சாயலாக மாற்றிவருகின்றார். **"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்"** (II கொரி.3:18) எனும் அனுபவம் இத்தகைய ஆராதனையால் வருவதுதான். இப்படிப்பட்ட ஆராதனை நீடிக்கும் பொழுது, தேவ ஆவியானவர் தமது வரங்கள் மூலம் நம்மோடு இடைபடுவார். நம்முடைய ஆவி தேவஆவியானவரின் குரலைக் கேட்கவும், அவர் அருளும் தரிசனங்களைக் காணவும் தயார் நிலையில் இருப்பது இப்பொழுதுதான். இதுதான் ஆராதனையின் சிகரம். இப்படிப்பட்ட ஆராதனை வேளைகளில் தேவ ஆவியானவர் திருவுளம் பற்றுவார்! அருள்மரியாய் இறங்கி வருவார்! வியாதிகள் கூட விட்டுவிலகும்! சுகம் உண்டாகும்! ஆவியின் வரங்கள் வெளிப்படத்துவங்கும்!

ஆராதனையின் சிலபடிகளை நான் இங்கு எழுதினேன். ஆனால் இவைகள் எப்பொழுதும் இதே வரிசைக் கிரமத்தில் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆவியானவர் நம்மை ஆராதனைக்குள்ளும் துதிக்குள்ளும் மாறி மாறி நடத்துவார். இடையிடையே அவரது வரங்களை வெளிப்படுத்தவும் செய்வார். அவரது நடத்துதலுக்கு துல்லியமாய் (Sensitive) காத்திருப்பது மிகவும் அவசியம்!

ஆவியானவர் இன்னும் நாம் **கண்டிராத** ஆராதனையின் ஆழங்களுக்குள்ளே நம்மைக் கொண்டு போக விரும்புகின்றார். இதுவரை நம் கண்கள் **கண்டிராதவைகளும்**, காதுகள் **கேட்டிராதவைகளும்**, நம் மனதுக்கு **எட்டாதவைகளும்** ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தப்படப் போகின்றது. இத்தகு ஆராதனை ஆவி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை நிரப்பிக் கொள்ளும்போது தீர்க்க தரிசனங்களும் கரைபுரண்டு ஓடிவரும். இத்தகு ஆராதனைக்குத் திருச்சபையை ஆவியானவர் அறைகூவி அழைக்கின்றார். இன்றே இத்தகு பாக்கியமான அழைப்பிற்கு பங்காளராவீர்களா? இயேசுவின் நாமத்தினாலே ஆராதனையின் ஆவி உங்கள்மீது அபரிதமாய் பொழிவதாக! ஆயிரங்களை ஆராதனைக்குள் நடத்தும் அபிஷேகம் வெள்ளமென உங்கள் மேல் பாய்வதாக! ஆமென்!

இப்புத்தக மறுபதிப்பிற்கு உதவி செய்த

Pastor.ஜெயசீலன்

(துதி பெராக்கா தீர்க்கதரிசன திருச்சபை, சென்னை)

அவர்களை கர்த்தர் ஆயிரம் மடங்கு

ஆசீர்வதிப்பாராக.

இப்புத்தகத்தினால் வரும்

ஆசீர்வாதங்கள் அவர்கள்

கணக்கில் எழுதப்படுவதாக.

இவர்களுக்காக தேவனைத்

துதியுங்கள்

பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள் நடத்தும்

ஆராதனைப் பாடசாலை
School of Worship

- தேவன் விரும்பும் ஆராதனை வீரராய் வாழ்வது எப்படி?
- ஆராதனையின் மூலம் தேசத்தை இரட்சிக்க முடியுமா?
- ஆராதனையின் மூலம் அசாதாரண மண்டலத்திற்குள் நுழைவது எப்படி?
- ஆராதனை எழுப்புதலை கொண்டு வர முடியுமா?

சிறப்பு அம்சங்கள்

- தேசத்தை கலக்கும் பிரசித்தி பெற்ற ஆராதனை வீரர்கள் போதிப்பார்கள்
- ஆராதனை நடத்துவதற்குரிய அடிப்படை இசைப்பயிற்சி கற்றுத்தரப்படும்
- ஆராதனைத் தலைவருக்கு தேவையான நடைமுறை ஆலோசனைகள்

ஆராதனை வீரராய் எழும்ப, ஆராதனையின் சிகரம் ஏற
பங்கு பெறுங்கள்

நடைபெறும் இடம்
பெராக்கா பயிற்சி மையம்,
பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்

இப்பாடசாலையைப் பற்றி மேலும் அறிய நமது இணையதளத்தைப் பாருங்கள்.

www.ezekiahfrancis.org

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
பாஸ்டர்.ஜெயசீலன்,
81,4வது குறுக்குத் தெரு, செந்தில் நகர், கொளத்தூர்
சென்னை - 600 099
Tel:044-26501290, 26501390, 9500169331

எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்

இந்தப்புத்தகம் தேவ சித்தம் இல்லாமல் இன்று உங்கள் கைகளில் தவழவில்லை. தொடர்ந்து இக்கடைசி கால எழுப்புதல் பணியை நிறைவேற்ற உங்கள் ஒத்துழைப்பும், ஜெபமும் மிகவும் தேவை.

எமது மாதாந்திர பத்திரிகை பெராக்கா தீர்க்கதரிசன தொனியும், பிற புத்தகங்கள், இருக்கிற ஒளி, ஒலி நாடாக்கள் குறித்த இலவச தகவலுக்காகவும் (CATALOGUE), இவ்வூழியங்களைக் குறித்து அறியவும் எங்களுக்கு எழுதுங்கள்.

Contact Address

Berachah Prophetic Ministries,
Plot No.81, 4th Cross street, Senthil nagar,
Kolathur, Chennai - 600 099

Phone: 044- 26501290, 265012390
Email: info@ezekiahfrancis.org
Website: www.ezekiahfrancis.org

ஆராதனை

ஆசிரியரைக் குறித்து...



இப்புத்தக ஆசிரியர் டாக்டர். எசேக்கியா பிரான்சிஸ் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தேவனோடு நடந்து வருகிறார். இவர் பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களின் ஸ்தாபகரும், தலைவரும் ஆவார். தேவனும் இவருக்கு தமது இரகசியங்களை கிருபையாய் கற்றுத் தருகிறார். தேவனுடைய திருச்சபைக்குக் கர்த்தருடைய சத்தமாகத் திகழ்ந்து வருகிறார். இவர் மூலம் கட்டியெழுப்பப்பட்ட விசுவாசிகள் ஏராளம். பயன்படும் பாத்திரங்கள் ஏராளம். இவரது ஊழியத்தின் மூலம் ஆவியில் நிறைந்து, ஊழியம் செய்யும் கலையைக் கற்றவர்கள் ஏராளம். இவர் எழுதிய புத்தகங்களும், பேசிய ஒலி, ஒளி நாடாக்களும், நடத்தும் கருத்தரங்குகளும் இந்தியாவிலும், பல நாடுகளிலும் ஒரு மௌன புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

BERACHAH PROPHETIC MINISTRIES

Plot # 81 4th Cross St, Senthil Nagar
Kolathur, Chennai - 600 099, India
TEL : + 91-44-26501290 / 26501390
EMAIL: info@ezekiahfrancis.org
WEB: www.ezekiahfrancis.org

Designed & Printed @ Kaios Offset Div. Chennai, India. ☎ 91-44-22670808